பக்கங்கள்: இருபத்துஎட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 10 திங்கட்கிழமை (26.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 030



11 முறைகேடுகளை எதிர்த்துப் பேரணி

# போர்க்குற்றங்களுக்கு முழுமையாகப் பதிலளிக்கும் புதிய அறிக்கையை எதிர்பார்க்கின்றது அமெரிக்கா

## இராஜதந்திர ரீதியில் அழுத்தம்: இலங்கை அதிருப்தி; எரிச்சல்

கொழும்பு, டிசெ.26

படிப்பினைகள் ஆணைக்குழுவின் நல்லிணக்கத்துக்கான அறிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ள நிலையில், இது தொடர்பாக இலங்கை அரசுடன் இராஜதந்திர ரீதியிலான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓபிளேக், இலங்கை வெளிவிவகார அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகளுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இது விடயம் தொடர்பாக தொடர்ந்து கலந்துரையாடி வருகின்றார் என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே சமயம் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் பற்றீஸியா புற்ரெனிஸும் இலங்கை அரசுடன் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறார் என்றும் தெரிவிக்கப் பட்டது. நல்லிணக்க ஆணைக்குழுவின்

பக் 27



21 வறுமை ஒழிக்க 3 அம்சத் திட்டங்கள்

# அதிகாரங்களை பகிர்ந்து வழங்க தீர்க்கமான நடவடிக்கை எடுக்குக

## இலங்கையிடம் இந்தியா வலியுறுத்து
### ஆணைக்குழு அறிக்கை பற்றியும் கருத்து

கொழும்பு, டிசெம்பர் 26

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிந்து விட்டது. எனவே மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவதற்கான, தீர்க்கமான - உறுதியான - முடிவான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தி இருக்கிறது இந்தியா. புதுடில்லியில் இது பற்றிக் கருத்துத் தெரிவித்த வெளிவிவகாரத்துறை பேச்சாளர் விஷ்ணு பிரகாஷ், நல்லிணக்கத்தையும் அரசியல் தீர்வையும் இலங்கை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நேரம் வந்தாயிற்று என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்த நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கமாகி ஒருவாரம் கடந்த நிலையில் அது குறித்து முதற் தடவையாக இந்தியா கருத்துத் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின் அடிப்படையில், இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ''நம்பகத் தன்மை வாய்ந்த சுயாதீனமான'' விசாரணைகளை இலங்கை அரசு நடத்த வேண்டும் என்று புதுடில்லி வலியுறுத்தி உள்ளது.

''அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான பொன்னான வாய்ப்பு ஒன்றைத் தற்போதைய சூழல் வழங்கி உள்ளது என்பதை ஆணைக்குழு அறிக்கை தெளிவாக்கி

பக் 27

## சுனாமி பேரிடரில் இறந்தோருக்காக 2 நிமிடப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், டிசெ.26

சுனாமி பேரிடர்களின் போது உயிரிழந்தவர்களுக்காக இன்று திங்கட்கிழமை காலை 9.25 மணி முதல் 9.27 மணி வரையில் இரண்டு நிமிட நேர மௌனப் பிரார்த்தனையை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட செயலக பேரிடர் முகாமைத்துவ பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.

நாடளாவியரீதியில் குறித்த இரண்டு நிமிட நேரமும் அனர்த்தங்களின் போது இறந்தவர்களுக்காக பிரார்த்தனை செய்ய ஏற்பாடாகி உள்ளது. அந்த வகையில் யாழ். மாவட்டத்திலும் சகல மக்களையும் இந்தப் பிரார்த்தனையில் பங்கெடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பக் 27



25 போராட்ட நாங்கள் தயார்

# அமைச்சரவைப் பத்திரங்கள் இனி தமிழிலும் வாசுவின் கோரிக்கையை ஏற்றார் மஹிந்த

கொழும்பு, டிசெ.26

அமைச்சரவைப் பத்திரங்களை இனி தமிழ் உள்ளிட்ட மூன்று மொழிகளிலும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்குமாறு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அனைத்து அமைச்சர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வார அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்தே வாசுதேவ இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். தமிழ் மொழி உள்ளிட்ட மூன்று மொழிகளிலும் அமைச்சரவைப் பத்திரங்களை சமர்ப்பிக்க இது வரை காலமும் நடவடிக்கை எடுக்காமை மிகவும் கவலைக்குரிய விடயம் என்றும் அவர் அங்கு கூறினார்.

''தமிழ் மொழியும் அரசகரும மொழியாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறிவருகின்ற நாம் அவ்வாறு கூறுவதோடு மாத்திரம் நின்று விடக்கூடாது. அதை முழுமையாக நடை

பக் 27

# உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகின உடுப்பிட்டி மாணவன் தேசிய ரீதியில் முதலிடம்

## கணிதப் பிரிவில் சாதனை! விஞ்ஞானத்தில் 2 ஆம் இடம் சென்.ஜோன்ஸுக்கு!!

யாழ்ப்பாணம், டிசெ. 26

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இன்று வரும், நாளை வரும் என்று இழுபறிப்பட்ட பரீட்சை முடிவுகள் நேற்றிரவே வெளியாகி இருந்தன.

இதனால் பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொள்வதில் சிரமங்கள் இருந்தன. அதிபர்களும் பெறுபேறுகளை ஒழுங்குபடுத்தி பட்டியல் இடுவதற்கு முடியாத நிலை இருந்தது.



கமலக்கண்ணன் கமலவாசன்
3 ஏ: (இஸற் புள்ளி -3.1167)

முற்கொண்டு கிடைத்த பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் அகில இலங்கை ரீதியில் 'கணிதப் பிரிவில் முதலிடமும் விஞ்ஞானப் பிரிவில் இரண்டாம் இடத்தையும் பெற்றுச் சாதனை புரிந்துள்ளனர்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியைச் சேர்ந்த கமலக்கண்ணன் கமலவாசன் என்றமாணவனே அகில இலங்கை

பக் 27

# அமெ. - இலங்கை அணு ஒப்பந்தம் மூத்த அமைச்சர்கள் கடும் எதிர்ப்பு

## உள்நோக்கம் ஏதும் இருக்கலாம்; அதனால் கைச்சாத்திட வேண்டாம் என்கின்றனர் அவர்கள்

கொழும்பு, டிசெ. 26

அணு தொழிநுட்ப பரிமாற்ற உத்தேச ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் செய்துகொள்ளக்கூடாது என்று மூத்த அமைச்சர்கள் சிலர் அரச உயர்மட்டத்திடம் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் தற்போதைய நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டாம் என்றும் அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை கடந்த வாரம் அமெரிக்கா நிராகரித்திருக்கும் சூழ்நிலையிலேயே அமைச்சர்களின் இந்த எதிர்ப்பு வெளிப்பட்டிருக்கின்றது.

முன்னதாக, இந்த அணு தொழிநுட்ப பரிமாற்ற ஒப்பந்தம் தொடர்பில் மின்சக்தி, எரிபொருள் துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க, கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் உயர்மட்ட அதிகாரிகளு

பக் 27

# கரையொதுங்கிய 6 தமிழக மீனவர்களும் இந்திய துணைத் தூதரகத்திடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.26

வடமராட்சி கிழக்கு ஆழியவளை கடலில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு படகு பழுதடைந்ததாலும் காலநிலை சீரின்மையாலும் கரையொதுங்கிய இந்திய மீனவர்கள் 6 பேரும் நீதிமன்றின் உத்தரவின் பேரில் யாழ். நகரில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று கையளிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

தமிழகத்தில் நாகைப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த 6 மீனவர்கள் ட்றோலர் படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவும், சீரற்ற காலநிலையாலும் வடமராட்சிக் கிழக்குக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் இரவு கரையொதுங்கினர்.

இவர்களை மீட்டெடுத்த பொலிஸார், குறித்த மீனவர்களிடம் விசாரணை நடத்திய பின்னர் அவர்களை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்தனர்.

படகு பழுதடைந்ததாலும், சீரற்ற காலநிலையாலுமே தாம் இலங்கையில் கரையொதுங்க நேர்ந்ததாக விசாரணையின்

பக் 27

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# வடமாகாணத்தில் முதல்முறையாக நெடுங்கேணியில் இறப்பர் செய்கை

நெடுங்கேணி, டிசெ.26

வடமாகாணத்தில் முதல் முறையாக வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள நெடுங்கேணியில் இறப்பர் பயிர் செய்கை ஆரம்பிக்கப் பட்டு உள்ளது.

இதற்கென மூன்று பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு இறப்பர் கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன.

நெடுங்கேணி தெற்கு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த இறம்பைக்குளம் கிராமத்தில் வசிக்கும் க.முத்துக்குமார், ஒலுமடு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த மனோகரன், வை.பூபாலசிங்கம் ஆகிய மூவரே இந்த இறப்பர் செய்கைத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தலா ஒரு ஏக்கர் நிலப் பரப்பில் பயிரிடுவதற்கான இறப்பர் கன்றுகளும் வழங்கப் பட்டு அவை தற்போது நடப் பட்டுள்ளன.



சிறு கன்றுகளாக உள்ள இந்த இறப்பர் மரங்கள் குறித்த பகுதிச் சூழலில் செழிப்பாக வளர்ந்து வருவதை அவதானிக்க முடிந்தது.

இந்த இறப்பர் செய்கையில் ஈடுபடுவதற்கு மேலும் பல பயனாளிகள் ஆர்வத்துடன் இருப்பதாகவும் விரைவில் அவர்களும் இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படுவர் என்றும் நெடுங்கேணிப் பண்ணையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வை.பூபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மலையகத்தில் மட்டுமே செய்கை பண்ணப்பட்ட இறப்பர் பயிர்ச்செய்கையை வடமாகாணத்துக்கும் விஸ்தரிக்க உள்ளதாக அண்மையில் நாடாளுமன்றத்தில் அரசுத் தரப்பு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங-க-435)

# கிராஞ்சியில் நகைக் கடையில் திருட்டு

கிளிநொச்சி, டிசெ.26

கிளிநொச்சி கிராஞ்சிப் பகுதியில் நகைக் கடையொன்று உடைக்கப்பட்டு 65 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நகைகள் என்பன களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி, முழங்காவில் பிரதேசத்துக்கு உட்பட்ட கிராஞ்சிப் பகுதியிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தினத்தில் நகைக் கடையை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த 65 ஆயிரம் ரூபா பணத்தையும் மற்றும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி நகைகளையும் அள்ளிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவத்தால் அப்பகுதி மக்கள் மத்தியில் அச்சம் நிலவுகிறது. (ங-6)




யாழ்.மாவட்டத்தில் தெளிவான வானிலையும் வவுனியா மாவட்டத்தில் மழையும் பிற மாவட்டங்களில் மேக மூட்டத்துடன் கூடிய காலநிலையும் நிலவும் சாத்தியம் உள்ளது.

# திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு மன்னாரில் மக்கள் அச்சத்தில்

மன்னார், டிசெ.26

மன்னாரில் நீண்ட கால இடைவெளிக்குப்பின் மீண்டும் திருடர்களின் கைவரிசை ஆரம்பித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் அவ்வப்போது ஏதோ ஒருவிதமான புதிய வகை சலசலப்பு ஏற்பட்டுக் கொண்டிருப்பது போன்று தற்போது மன்னாரில் திருடர்களின் கைவரிசை மேலோங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன் கிறீஸ் பூதம் எனும் மர்ம மனிதர்களின் நடமாட்டத்தால் மக்கள் ஒருவித அச்சுறுத்தல் நிலைக்குள் முடங்கி இருந்தனர்.

இந்த நிலையில் கிறீஸ் மனிதர்கள் பற்றிய அச்சம் மறையத் தொடங்கி உள்ள சூழலில் தற்போது மன்னார் நகரின் மத்திய பகுதிகளில் திருடர்ககளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும், இரவு மற்றும் அதிகாலை வேலைகளில் இவர்கள் தமது கைவரிசையினைக் காட்டி வருவதாகவும் மன்னார் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொள்ளையிடுவதற்காக வருபவர்கள் தமது கைகளில் சிறிய ரக ஆயுதங்களை எடுத்து வருவதாகவும், கொள்ளையர்களை மக்கள் துரத்திச்செல்லும் போது இத்தகைய ஆயுதங்களால் அவர்கள் தாக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

தற்போது மன்னாரில் பெருகியுள்ள கொள்ளைச் சம்பவங்களின் காரணமாக நகர மக்கள் இரவில் தூக்கம் இன்றி விழித்திருக்க வேண்டிய நிலைக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பண்டிகைக் காலம் என்பதால் மன்னார் நகரம் வழமையைக்காட்டிலும் சுறுசுறுப்பாக காணப்படுகிறது. நத்தார், புத்தாண்டு மற்றும் பொங்கல் விழாக்களை ஒட்டி அங்காடி வியாபாரிகள் நகரம் முழுவதும் கடைகளை அமைத்திருக்கின்றனர்.

இந்தக் கடைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக இரவு நேரங்களில் மன்னார் நகரில் சனக்கூட்டம் அலைமோதுகிறது.

இதனைத் தமக்குச் சதகமாகப் பயன்படுத்தும்கொள்ளையர்கள் ஆள்களற்ற வீடுகளில் இரவு நேரங்களில் வீட்டின் ஓடுகளை கழற்றி உள்நுழைந்து கையில் அகப்பட்டதை சுருட்டிக்கொண்டு தப்பிச் செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் நகரில் பொலிஸாரும், அவர்களின் ஒத்துழைப்போடு அமைக்கப்பட்டிருந்த விழிப்புக்குழுக்களும் இருக்கும்போது தொடர்ந்தும் கொள்ளையர்கள் தம் கைவரிசையைக் காட்டுவது எப்படி என்றும் பொதுமக்கள் கேள்வி எழுப்பி உள்ளனர். (ங-சி)

# திருமலையில் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம்

கொழும்பு, டிசெ.26

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற் குழுவின் கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை திருகோணமலையில் நடைபெறவிருக்கின்றது.

சமகால அரசியல் நிலவரம் மற்றும் கட்சியின் புனரமைப்புக் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப் படவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையில் அவரது இல்லத்தில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

தமிழரசுக்கட்சியின் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய செயற்குழு உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# பிளாஸ்ரிக் கூடை சட்டம் மீண்டும் ஜனவரி 15 முதல்

கொழும்பு, டிசெ.26

மரக்கறிகள் மற்றும் பழவகைகளைக் கொண்டு செல்வதற்கு பிளாஸ்ரிக் கூடைகளைப் பயன்படுத்தவேண்டும் என்ற சட்டம், மீண்டும் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வர்த்தக நுகர்வோர் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டமூலம் உற்பத்தியாளர்களை எந்த வகையிலும் பாதிக்காது என அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிரிசேன தெரிவித்தார்.

# நத்தார் திருநாள் தற்போதைய உலகில் வர்த்தகக் கொண்டாட்டமாக மாறிவிட்டது

## பாப்பரசர் கவலை

வத்திக்கான், டிசெ.26

இன்றைய உலகில் நத்தார் திருநாள் ஒரு வர்த்தக கொண்டாட்டமாக மாறிவிட்டது. இவ்வாறு பாப்பரசர் 16 ஆம் ஆசீர்வாதப்பர் கவலை தெரிவித் துள்ளார்.

வத்திகானின் சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் நேற்று உரையாற்றும் போதே பாப்பரசர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்றைய நவீன உலகில் நத்தார் திருநாள் வர்த்தகக் கொண்டாட்ட நிகழ்வாக மாறிவிட்டது. செல்வந்தர்களின் ஆடம்பரத்தைப் பறைசாற்றும் பிரகாசமான விளக்குகளால், எம்மை பணிவாகவும் எளிமையாகவும் நடக்கக்கோரும் இறைவனின் பணிவு மறைக் கப்பட்டுவிட்டது.

இக்காலத்தில் பளபளக்கும் விளக்குகளுக்கூடாக பெத்லஹேமில் மாட்டுத்தொழுவத்தில் உள்ள குழந்தை இயேசுவைக் கண்டுபிடிப்பதற்கு எமக்கு உதவுமாறு நாம் கடவுளைக் கோருவோம்.

உலகம் முழுவதுமுள்ள அடக்குமுறையாளர்கள் மற்றும் போர் வெறியர்களை இயேசு கிறிஸ்து வெற்றிகொள்வார்.

கடவுளின் நெருக்கத்தை உணர்வதைத் தடுக்கும் சில தவறான விடயங்களிலிருந்து நாம் ஒதுங்கியிருக்க வேண்டும் - என்றார்.

வறியவர்கள், துன்பப்படுவோர், இடம்பெயர்ந்தோர் என்போருக்காக மக்கள் பாலன் பிறப்பில் விசேடமாக பிரார்த்திக்க வேண்டுமெனவும் பாப்பரசர் கோரினார். (ங-சி)

# நிகழ்வுகள் இன்று

### பிரார்த்தனை வழிபாடு

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை கட்டைவேலி சேகரம் நடத்தும் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 6ஆம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை வழிபாடு பிற்பகல்3 மணிக்கு தும்பளை. நேசகத்தில் அருட்திரு.சி.கே.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ம -313- 236)

### சமாசக் கூட்டம்

தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாச நிர்வாக சபைக்கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் சமாசத் தலைவர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. (ம- 313- 207)

***

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களுக்கான கூட்டம் காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா தலைமையில் நடைபெறும். (ம 313)

### ஒளி விழா

இளவாலை திருமறைக் கலா மன்றம் நடத்தும் ஒளி விழா காலை 9.30மணிக்கு இளவாலை புனித வளனார் விடுதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் ஜே.ஜே. ஜோன்சன் ராஜ்குமார் கலந்துகொள்வார். (ம- 313- 51)

***

நல்லூர் பிரதேசசபையின் ஒளிவிழா நிகழ்வு முற்பகல் ஒரு மணிக்கு பிரதேச சபைத் தலைமை அலுவலக மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-313-7)

### தியான நிகழ்வு

யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம் வழங்கும் ''நல்லாசிகளும் தூய உணர்வுகளும்'' எனும் தலைப்பிலான தியான நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு 211, பிறவுண் வீதி பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பம்பலப்பிட்டி பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலைய இணைப்பாளர் சகோதரி பி.கு. திருமணி ஜெகதீசா சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ம-313)

# மனக்கசப்புகளுக்கு மத்தியிலும் மன்மோகனை மகிழ்வுடன் வரவேற்றார் முதல்வர் ஜெயலலிதா


சென்னை, டிசெ.26

காங்கிரஸ் கட்சிக்கு எதிராகவும், மத்திய அரசு எடுக்கும் எந்தவொரு முடிவையும் எதிர்த்துக்கொண்டேயிருக்கும் நிலையில், முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று விமான நிலையம் சென்று வரவேற்றார்.

தமிழகம் வந்த பிரதமரை முதல்வர் விமான நிலையம் சென்று வரவேற்று மகிழ்ந்ததுடன், தயாராக இருந்த பிரச்சினைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் ஜெயலலிதா கையளித்தார்.

இதனையடுத்து ஆளுநர் மாளிகையில் பிரதமரை ஜெயலலிதா சந்தித்து தமிழக பிரச்சினைகள் குறித்து பேசவிருந்தார்.

மத்தியில் ஆளும் காங்கிரஸுடன் தொடர் மனக்கசப்புத்தான் ஜெயலலிதாவுக்கு உண்டு. குறிப்பாக கூடம்குளம், இலங்கைத் தமிழர் பிரச்சினை, முல்லைப்பெரியாறு அணை விவகாரம், உணவுப் பாதுகாப்பு மசோதா, உள்ளிட்ட விவகாரங்





களில் அ.தி.மு.க ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மத்திய அரசுடன் இணக்கம் என்பது எப்போதும் இருப்பதில்லை. சமீபத்தில்கூட மாநிலத்திற்கு உரிய நிதி வழங்காமல் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்போக்குடன் நடந்து கொள்வதாக பிரதமருக்குக் கடிதம் எழுதித் தனது வருத்தத்தைத் தெரிவித்தார்.

முல்லைப்பெரியாறு அணைக்கு மத்திய தொழில்நுட்ப பாதுகாப்புப் படையை அமர்த்தவேண்டும் என்பதற்கு பிரதமரிடம் இருந்து பதில் வரவில்லை என்றும் ஜெயலலிதா கூறியிருந்தார்.

ஆட்சிக்கு வந்த பின்பு டில்லி சென்ற முதல்வர் பிரதமரை சந்தித்து கோரிக்கை மனுவும் வழங்கினார். தற்போது சந்திப்பது 2 ஆவது முறை. தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி மாறி அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர் பிரதமர் தமிழகம் வந்தது இதுதான் முதன்முறை.

பிரதமர் நேற்று மாலை சென்னை வந்தார். முதலில் விமான நிலையத்தில் இருந்து ஆளுநர் மாளிகை சென்றார். அங்கு அவர் ஓய்வெடுத்தார். தொடர்ந்து இன்றுகாலை சென்னை பல்கலைக்கழகத்தில் நடக்கும் கணித மேதை ராமானுஜரின் 125 ஆவது பிறந்த தின விழாவில் பங்கேற்று பேசுகிறார். பின்னர் ஹெலிகொப்டர் மூலம் காரைக்குடி புறப்பட்டுச் செல்கிறார். அங்கு நடக்கும் பல்கலை. விழா மற்றும் தனியார் மருத்துவமனை திறப்பு உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

சென்னை வந்த பிரதமரை தி.மு.க. தலைவர் கருணாநிதி சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பு ஆளுநர் மாளிகையில் நடக்கலாம் என தெரிகிறது. இந்த சந்திப்பின் போது முல்லைப்பெரியாறு விவகாரம், மற்றும் அரசியல் நிலைவரம் குறித்துப் பேசலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-சி)

## நூலக வசதி இன்மையால் ஸ்கந்தபுரம் செல்லும் மாணவர்கள்

அக்கராயன்,டிசெ.26

துணுக்காய் ஆரோக்கியபுரம் கிராமத்தில் நூலக வசதி இல்லாததால் இங்குள்ள பாடசாலை மாணவர்கள் தமக்குத் தேவையான நூல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஸ்கந்தபுரம் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குடியேற்றக் கிராமம் ஆரம்பித்த நாளிலிருந்து இன்றுவரை நூலக வசதி ஏற்படுத்தப்படவில்லை. இதனால் இங்குள்ள மக்கள் பத்திரிகைகள், நூல்கள் ஆகியவற்றை வாசிக்க முடியாத நிலையில் உள்ளனர். குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் தமக்குத் தேவையான நூல்களைப் பெறுவதில் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நூலகம் ஒன்றை அமைத்து வழங்குமாறு இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஆரோக்கியபுரம் கிராமத்தில் தற்போது 110 குடும்பங்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-410)

## மழை நீர் வீடுகளுக்குள் புகுந்ததால் கொல்லவிளாங்குளம் கிராமம் பாதிப்பு

துணுக்காய்,டிசெ.26

முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன் குளம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொல்லவிளாங்குளம் கிராமத்தில் தொடர்மழை காரணமாக 80 இற்கும் அதிகமான வீடுகளுக்குள் மழைநீர் உட்புகுந்தமையால் அந்த மக்கள் பெரும் அவலத்துக்கு உள்ளாகி உள்ளனர்.

கொல்லவிளாங்குளம் பகுதியில் இருந்து கழிவு நீர், வாய்க்கால் வழியாக வவுனிக்குளத்துக்கு செல்கின்றது. இந்த வாய்க்கால் பகுதியில் அமைக்கப்பட்ட நீரோடிக்குழாய் சீராக இல்லாததால் கழிவு நீர் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் உட்புகுந்துள்ளது. இதனால் மக்கள் செய்வது அறியாது அவலப்படுகின்றனர்.

கொல்லவிளாங்குளம் கிராமத்தில் சுமார் 146 குடும்பங்கள் வசித்துவருகின்றன. இதில் 80 இற்கும் அதிகமான குடும்பங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கிராம மக்கள் தெரிவித்தனர். (க-415)

## புலிகளின் குரல் வானொலி நிலையம் அமைந்திருந்த இடத்தில் புத்தர் சிலை!

கொழும்பு, டிசெ.26


கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான புலிகளின் குரல் வானொலி நிலையம் அமைந்திருந்த இடத்தில் இராணுவத்தினர் புத்தர் சிலை ஒன்றை அமைத்துள்ளனர் என்று தெரியவருகிறது.

கிளிநொச்சியில் 155ஆம் கட்டையில் விடுதலைப் புலிகளின் புலிகளின் குரல் வானொலி நிலையம் அமைந்திருந்தது.

அந்த இடத்தில் தற்போது பெரிய இராணுவமுகாம் ஒன்றை இராணுவத்தினர் அமைத்துள்ளனர்.

முகாமுக்கு மத்தியில் பெரும் புத்தர் சிலை ஒன்றை இராணுவத்தினர் அமைத்துள்ளனர். 2007ஆம் ஆண்டு தமீழழ விடுதலைப் புலிகளின் புலிகளின் குரல் வானொலி நிலையம் மீது இராணுவத்தினர் விமானத் தாக்குதல் நடத்தி அழித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-323)

## பாப்பரசர் தமிழிலும் கிறிஸ்மஸ் வாழ்த்து



வத்திக்கானில் நேற்று கிறிஸ்மஸ் ஆராதனையை முடித்து உலக மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்த புனித பாப்பரசர், சிரியாவில் இடம்பெறும் இரத்தக்களரி உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதேபோல், பலஸ்தீனத்தில் அமைதி நிலவ அனைவரும் பிரார்த்திக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். 65 மொழிகளில் கிறிஸ்மஸ் வாழ்தைத் தெரிவித்த புனித பாப்பரசர் தமிழ் மொழியிலும் கிறிஸ்மஸ் வாழ்த்தினைத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## உடல்நலக் கேட்டுக்கும் சமூக சீரழிவுக்கும் வழியமைக்கும் தென்பகுதி போத்தல் கள்

மன்னார்,டிசெ.26

தென்பகுதியிலிருந்து இரசாயனப் பொருள்கள் கலக்கப்பட்டுப் போத்தல்களில் அடைக்கப்பட்ட நிலையில் எடுத்துவரப்படும் கள்ளினை அதிகளவில் அருந்தும் தலைமன்னார்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள் உடல் நலத் தாக்கங்களுக்கு ஆளாவதோடு சமூகச் சீரழிவுகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் தலைமன்னாரிலுள்ள பல்வேறு பொது அமைப்புக்கள் குறித்த கள் விற்பனைக்கு எதிராகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் தமது முயற்சிகளுக்கு எதிராகவும், கள் விற்பனைக்கு ஆதரவாகவும் மன்னார் பிரதேச செயலகம் செயற்பட்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் அவர்கள் முறையிட்டுள்ளனர்.

ஏற்கனவே இந்த விடயம் தொடர்பாக கடந்த செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி மன்னார் பிரதேச செயலர் தலைமையில் அவசர மாநாடு ஒன்று இடம்பெற்றது. இதில் கிராம மக்கள் உட்படப் பல அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது குறித்த தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்கு மட்டுமே குறித்த கள்ளை விற்பதற்கு அனுமதிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கால அவகாசம் இந்த மாதம் 8 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில் சில தினங்கள் இந்தக் கள் விற்பனை செய்யப்படவில்லை. இதனால் இந்தக் கிராமத்தில் பல்வேறு நல்ல மாற்றங்கள் தென்பட ஆரம்பித்தன.

இந்த நிலையில் திடீரென ஆயிரக்கணக்கான போத்தலில் அடைக்கப்பட்ட கள் இங்கு வந்து சேர்ந்ததுடன் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இதன் விற்பனையும் அமோகமாக நடைபெறுகின்றது.

மக்களால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டின் பேரில் தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இந்த மாதம் 31 ஆம் திகதி வரை இத்தகைய கள்ளை விற்பனை செய்வதற்குப் பிரதேச செயலகத்தால் எழுத்து மூலமான அனுமதி வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இது கடந்த செப்ரெம்பர் மாதம் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு முற்றிலும் மாறானதென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இறுதியாக மன்னார் அரச அதிபர் சரத் ரவீந்திரவிடம் இது தொடர்பான மனுவொன்றை தலைமன்னார் கிராம மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-601)

## மன்னார் வைத்தியசாலையில் பள்ளிவாசல் அமைக்க அடிக்கல்

மன்னார் பொது வைத்தியசாலையில் வருகை தரும் நோயாளர்களுக்கும் மற்றும் அங்கு பணியாற்றும் ஊழியர்களின் நலன் கருதியும் பள்ளிவாசல் ஒன்றை அமைப்பதற்கான அங்கீகாரத்தை வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் வழங்கியுள்ளார்.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு மன்னார் பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.ஏ.எம். அஷாத் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

மன்னார் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் என்.பரீத் பள்ளிவாசலுக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மூர்வீதி பள்ளிவாசல் மௌலவி அஸீம், பிரதிப் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் என்.அரவிந்தன், பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.நாசர், வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஏ.எம். சஜானி உட்பட ஊழியர்களும் கலந்து கொண்டனர். (ஒ-601)

## கால்நடைகள் கடத்தல்

நெடுங்கேணி,டிசெ.26

நெடுங்கேணிப் பிரதேசத் துக்குட்பட்ட கிராமங்களில் கால்நடைகள் கடத்தப்படுவ தாக மக்கள் கவலை தெரி விக்கின்றனர்.

குறிப்பாக இரவு வேளை களில் இவை கடத்தப்படுவ தால் கிராமவாசிகள் செய்வதறி யாத நிலையில் தவிக்கின்றனர்.

இது தொடர்பாக நெடுங் கேணிப் பொலிஸாரிடம் முறைப் பாடு தெரிவிக்கப்பட்ட போதி லும், எவ்வித பலனும் கிடைக் கவில்லை. இதுவரை எட்டு மாடுகள் காணாமல் போயுள் ளன. மேலும் இது தொடர் கதையாக மாறிவிடுமோ என்ற அச்சத்தில் கிராமவாசிகள் உள்ளனர். (க-425)

## கடற்படை முகாமை தற்போது அமைத்துவிட்டு எம்மை விரட்டியடிப்பதுதான் ஜனநாயகமா?

### முள்ளிக்குளம் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்

மன்னார், டிசெ.26

முள்ளிக்குளத்தில் தற்போது கடற்படை முகாமை அமைத்து விட்டு, எம்மை எமது சொந்த மண்ணில் வாழவிடாது விரட்டி அடிக்கப்படுகின்றமையா இந்த நாட்டின் ஜனநாயகம் என முள் ளிக்குளம் மக்கள் கேள்வி எழுப் பியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு தலை மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்த 600 முஸ்லிம் குடும்பங்கள் அவர்களின் வாழ்விடத்துக்கு அருகில் பெரியதொரு கடற் படை முகாம் உள்ளபோதும் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள னர். ஆனால் முள்ளிக் குளத் தில் எம்மை மீளக் குடியமர்த்த மறுப்பது ஏன் என்று அவர்கள் வேதனையுடன் கேட்கின்றனர்.


மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தளவில் முள்ளிக்குளம் தவிர்ந்த ஏனைய அனைத்துக் கிராமங்களிலும் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

தற்போது முள்ளிக்குளத்தில் கடற்படையினரின் உதவியு டன் தென்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடித்து வரு கின்றனர். தற்போது தமது வளங்கள் அபகரிக்கப்படுவ தாகவும் தாம் ஒருநேர உண வைக்கூட உண்பதில் சிரமங் களை எதிர்நோக்குவதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

மேலும் தாம் நிம்மதியாக வாழ்ந்த காலம் வெகுதூரம் சென்றுவிட்டதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

எனவே ஜனநாயகத்தை இந்த அரசு மதிக்குமேயானால் தம்மை நீதியான முறையில், இந்த வருட முடிவுக்குள் தமது சொந்த ஊரான முள்ளிக்குளத் தில் மீள்குடியமர்த்த வேண்டு மெனவும் இவர்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (க-601)

## துரித கதியில் வீதிப் புனரமைப்பு வேலைகள்



துணுக்காய், டிசெ.26

மல்லாவி 3 ஆம் யூனிற் பாரதி நகருக்குச் செல்லும் வீதி தார் ஊற்றப்பட்டு சீராக்கப் படுவதால் மக்களின் போக்கு வரத்து இலகுவானதாக மாறி யுள்ளது.

இந்த வீதி துணுக்காய்ப் பிரதேச சபையின் நிர்வாகத்துக் குட்பட்டது. மேலும் இந்த வீதி பாண்டியன் குளத்தையும் இணைக்கின்றமையால் கிராம மக்களுக்குப் பெருதவியாக அமைந்து காணப்படுகின்றது.

இந்தக் குறுகிய வீதியின் வேலைகளை பிரதேச சபைத் தலைவர், செயலாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர், துணுக் காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் பார்வையிடுவதுடன் ஆலோ சனைகளையும் வழங்கி வேலை களைத் துரிதப்படுத்தி வரு கின்றனர்.

இந்த வீதி முழுமையாகப் புனரமைக்கப்பட்டதும் பாட சாலை மாணவர்கள், நோயா ளர்கள் எனப் பலரும் பயன் பெறுவரென எதிர்பார்க்கப்படு கின்றது. (க-415)

## மன்னார் வைத்தியசாலையில் நோயாளருக்கு நத்தார் பரிசுகள்



மன்னார், டிசெ.26

மன்னார் பொது வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளர் களுக்கு நத்தார் பரிசுகள் வழங் கப்பட்டுள்ளன.

மன்னார் தள்ளாடி இராணு வத்தின் 54 ஆவது படைப் பிரிவு ஏற்பாடு செய்திருந்த நத்தார் தின விசேட நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மன் னார் பொது வைத்தியசாலை யில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து வைத் தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் நோயா ளர்களுக்கு இராணுவத்தினா லும், மருத்துவர்களினாலும் நத்தார் பரிசுகள் வழங்கப்பட் டன.

இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவு அதிகாரி மைத் திரி டயஸ், மன்னார் வைத்திய சாலையின் வைத்திய அத்தி யட்சகர் எம்.எச். எம். அசாத், மருத்துவர்கள், மக்கள்-வங்கி முகாமையாளர், இராணுவ அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டு நத்தார்ப் பரிசில் களை வழங்கினர். (க-601)

## துணுக்காய், பாண்டியன்குளத்தில் 15 ஏக்கர் பயிர்களுக்கு அழிவு

துணுக்காய், டிசெ.26

துணுக்காய், பாண்டியன் குளம் பிரதேசங்களில் கன மழை காரணமாக 15 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண் ணப்பட்ட பயிர்கள் பாதிப்புக் குள்ளானதால் விவசாயிகள் கவலையில் மூழ்கியுள்ளனர்.

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் விவசாயத் திணைக்களத்தால் துணுக் காய்ப் பிரதேச செயலர் பிரிவில் 900 மரக்கறி விதை தானியப் பொதிகளும் பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவில் 1000 பொதிகளும் கடந்த நவம்பர் மாதம் விவசாயிகளுக்கு வழங் கப்பட்டன. அதனை விவசாயி களும் சிறந்த முறையில் பயன் படுத்தி மரக்கறி உற்பத்திகளை மேற்கொண்டு வந்தனர்.

ஆனால் திடீரெனப் பெய்த தொடர் மழையால் 15 ஏக்கர் பயிர்ச் செய்கை பாதிப்படைந் துள்ளதால் விவசாயிகள் கவ லையில்மூழ்கியுள்ளனர். (க-415)

## வீதியில் வாகனங்கள் செல்லத்தடை கிராம மக்கள் பெரும் திண்டாட்டம்

நெடுங்கேணி,டிசெ.26

வீதியில் உள்ள பாலங்கள் உரிய முறையில் புனரமைக் கப்படாததன் காரணமாக நெடுங்கேணியிலிருந்து வெடி வைத்த கல்லுக்குச் செல்லும் பிரதான வீதியில் வாகனங்கள் செல்ல முடியாத நிலை தோன்றி யுள்ளது.

தற்போது இந்த வீதியில் புனரமைப்புப் பணிகள் நடை பெறுகின்றன. ஆனால் பாலங் களின் புனரமைப்புப் பணிகள் சரிவர நிறைவேற்றப்படா மையால் இந்த நிலை தோன்றி யுள்ளது. கடந்த 19 ஆம் திகதி யிலிருந்து வாகனங்கள் இதனூ டாகச் செல்லத் தடை விதிக் கப்பட்டுள்ளது. பஸ் சேவை களும் நடைபெறுவதில்லை. இதனால் இந்த வீயூடாகப் பயணிக்கும் ஒலுமடு, கீரிசுட் டான், கற்குளம், பட்டறை பிரிந்தகுளம், மருதோடை, ஊஞ்சத்தட்டி, வெடிவைத்த கல்லு, துவரங்குளம், பட்டிக் குடியிருப்பு ஆகிய கிராமங் களைச் சேர்ந்த கிராம மக்கள் பெரும் அவலங்களுக்கு ஆளாகி வருகின்றனர். (க-433)

## பயணிக்க முடியாத நிலையில் முள்ளியவளையின் முக்கிய வீதி

முள்ளியவளை,டிசெ.26

முள்ளியவளை காட்டா விநா யகர் ஆலயத்துக்கு அருகிலி ருந்து முள்ளியவளைச் சந் தைக்குப் பின் பக்கமாக அம் மாள் சந்திவரை செல்லும் பிரதான வீதியில் மழைக் காலங்களில் பயணிக்க முடி யாத நிலை காணப்படுகின்றது.

இந்த வீதி முள்ளியவளை மத்தி கிராம அலுவலர் பிரி வுக்கும், முள்ளியவளை கிழக் குக் கிராம அலுவலர் பிரி வுக்குமிடையில் அமைந்துள் ளது. மேலும் மழை காலங் களில் முள்ளியவளை மத்தி, தெற்கு, கிழக்குப் பகுதிகளி லுள்ள மழை நீர் முழுவதும் இந்த வீதியூடாகவே பாய்ந்து செல்கின்றது. இதனால் இந்த வீதி ஆழமானதாகவும், அகல மானதாகவும் மாறியுள்ளது.

இந்த வீதியூடாகவே காட் டாவிநாயகர் ஆலயத்துக்கான தீர்த்தக்குடத்தில் கள்ளப்பாடு கடலில் இருந்து நீர் எடுத்து வரப்பட்டு விளக்கேற்றப்படும் நிகழ்வு நடைபெறுவது வழக்க மாகும்.

எனவே அனைத்து விதத்தி லும் முக்கியம் வாய்ந்த இந்த வீதியை உரிய முறையில் புனர மைத்து வழங்குமாறு முள்ளிய வளை மக்கள் கேட்டுக்கொண் டுள்ளனர். (க-433)

## குளங்கள் புனரமைப்பு

முல்லைத்தீவு,டிசெ.26

ஒட்டுசுட்டான் பிரதேசத்தி லுள்ள குளங்கள் சில புனர மைக்கப்பட வேண்டிய நிலை யில் காணப்படுகின்றன.

வடக்கின் வசந்தத்தின் ஊடான புனரமைப்புத் திட்டத் தின் கீழ் 2 ஆயிரம் குளங்கள் புனரமைக்கப்பட உள்ளன. இதில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முறிகண்டிக் குளம், கொடிதாங் கியகுளம், இடைக்கட்டுக் குளம், 14 ஆம் பட்டைக்குளம், சாளம்பன்குளம் என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆனால் புளியங்குளம், காஞ்சூரமோட்டைக்குளம், துவரமோட்டைக் குளம், சின் னக்குளம் என்பன மிகவும் அவசரமாகப் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இவற்றிலும் சின்னக்குளம் முறி குளமாகவே கடந்த பல ஆண்டு களாக இருந்து வருகிறது. (க-500)

## கிளி. இராமநாதன் குடியிருப்பு மக்களுக்கு காணிப் பத்திரங்கள்

கிளிநொச்சி, டிசெ.26

கிளிநொச்சி, மருதநகர், இராமநாதன் குடியிருப்பு மக் களுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள் ளன.

மருதநகர் இராமநாதன் குடியிருப்பில் கடந்த அறுபது வருடங்களுக்கும் மேலாக பரம்பரை பரம்பரையாக மக்கள் வசித்து வருகின்றனர். இவர் களது காணிகளுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப் படாமையால் வீட்டுத்திட்டம் போன்ற அடிப்படை வசதிகள் வழங்கப்படுவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

மருதநகர், இராமநாதன் குடியிருப்பாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் தாம் குடியிருக் கும் காணிகள், வயல் நிலம் உட்பட 333 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலப் பகுதிகளை யாழ். பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை என்னும் நம் பிக்கை நிதியத்துடன் தொடர்பு கொண்டு தமக்கான காணி உறுதிப் பத்திரங்களைப் பெற் றுத் தருமாறு கோரிக்கைகளை முன் வைத்திருந்தனர்.

இதன் பின்னர் ஏற்பட்ட நீண்ட இழு பறிகளுக்கு மத்தி யில் கரைச்சிப் பிரதேச செய லாளர் கோ. நாகேஸ்வரனின் தீவிர முயற்சியால் காணி உறு திப் பத்திரங்கள் வழங்கப்பட் டுள்ளன.

கடந்த மாதம் 30 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாச பதி கலையரங்கில் இடம் பெற்ற மேற்படி காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ் வில் யாழ்.பரமேஸ்வராக் கல் லூரியின் இயக்குநர் சபைத் தலைவரான பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் வசந்தி அரசரத்தினம், கரைச்சிப் பிர தேச செயலாளர் கோ.நேகேஸ் வரன், பிரதி நீர்ப்பாசனப் பெறியியலாளர் இ.சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டு குடியிருப்பாளர்களுக்கான உறு திப் பத்திரங்களை வழங்கி வைத்தார்கள்.

இந்த மக்களுக்கான வீட்டுத் திட்டம், மலசல கூடம் போன்ற வற்றை அமைக்க ஆவன செய் வதாகக் கரைச்சிப் பிரதேச செயலாளர் இங்கு குறிப்பிட் டிருந்தமையும் குறிப்பிடத்தக் கது.

வன்னியில் மீள்குடியமர்ந்த மக்கள் காணிகளுக்குரிய உறு திப் பத்திரங்கள் இல்லாததால் பல்வேறு விதத்திலும் பாதிக் கப்பட்டுள்ளனர். (க-426)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வழமை நிலையை உருவாக்க விடுக்கப்படும் வேண்டுகோள்

இடம்பெயர்ந்த மக்களில் ஆயிரக் கணக்கான மக்கள் தமது சொந்தக் கிராமங்களில் இன்னும் மீளக்குடியமர்த்தப்படாமல் உள்ளனர். அவர்களது நிலை குறித்தும் நாம் மிகுந்த கரிசனை செலுத்த வேண்டும்.

போருக்குப் பின்னரான நத்தார் கொண்டாட்டங்களில் ஈடுபடும் நாம் பல தனித்துவமான சவால்களை எதிர்கொள்கின்றோம். நாம் அவற்றை மனதிற்கொண்டு பாதிப்புற்றவர்களுக்கு உதவ வேண்டும். எமது சமூகத்தில் அல்லற்படும் மக்களுக்கு மத்தியில் யேசுபிரானைச் சந்திக்க வேண்டும்.

கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தின் இந்த வருடத்துக்கான நத்தார் செய்தியில் மேற்கண்ட வேண்டுகோள் அழுத்தித் தொட்டுக் காட்டப் பட்டுள்ளது

உண்மையானதும், நிரந்தரமானதுமான சமாதானம் நிலைபெற வேண்டிய தேவை உள்ள ஒரு நாட்டிலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனால் எம்மை நோக்கிப் பல விசேட சவால்கள் உள்ளன. ஆகையால், நாட்டில் வழமை நிலைமையை மீள்விக்க, ஒவ்வொருவரும் இரண்டு மடங்கு முயற்சிக்குமாறு வேண்டுகின்றோம்.- என்றும் கத்தோலிக்க ஆயர் மன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பை மக்களுக்கானது மட்டும் என்று கருதாமல் அரசுக்கானது எனவும் கொள்ளலாம்.

போருக்குப் பின்னர் இரண்டரை வருடங்கள் கழிந்துவிட்ட இந்தத் தறுவாயிலும், அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவில்லை என்பதனை இம்மாத முற்பகுதியிலும் இப்பத்தியில் விவரமாகச் சுட்டிக்காட்டி இருந்தோம்.

ஆயர் மன்றம், அதனை இந்நாட்டு மக்களின் முன்னால் உள்ள தனித்துவமான, பெரிய சவாலாகப் பார்க்கிறது. மீள்குடியேற்றம் என்ற பெயரில் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என நாடாளுமன்றத்தில் முறையிடப்பட்ட போதிலும் அதற்கான பதில் எதுவும் அரசிடம் இருந்து இன்னும் இல்லை!

வன்னிப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் மீள்குடியேற்றம் உரிய, உகந்த வகையிலன்றியும், பாதிப்புற்ற மக்களின் அன்றாடத் தேவைகளைத் தானும் பூர்த்தி செய்யாமலும் வெறுமனே பெயருக்குச் செய்யப்பட்டதால், மக்கள் அனுபவித்துவரும் கஷ்டங்களும், அவர்கள் எதிர்நோக்கும் இல்லாமைகளும் இப்போதைய மாரிகாலத்தில் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன.

இயற்கை அன்னையும் பல வகைகளிலும் அவர்களை அடிக்கடி சோதிப்பதனால், எழுத்தில் முழுமையாக வடிக்க முடியாத அளவுக்கு அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் மல்கும் நிலைக்கு இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களையும் இந்நாட்டு மக்கள் - பிரசைகள் - என்று கருதி அவர்களுக்கு உரிய உரிமைகளை-சேரவேண்டிய உரிமைகளை - வழங்காமல் காலத்தை வாங்கி சூட்சுமங்களையும் சூழ்ச்சிகளையும் கையில் எடுத்துள்ள அரசு -

அவர்களின் அடிப்படை மனிதத் தேவைகளை வழங்குவதிலும் கூட மிகப் பெரிய பரிமாணத்தில் பாரபட்சம் காட்டிப் புறக்கணித்து வருகின்றது.

போருக்குப் பின்னரான இக்காலத்தில் தனித்துவமான சவால்களை எதிர்கொள்கின்றோம் என்று கத்தோலிக்க ஆயர் மன்றம் சுட்டிக் காட்டியது வன்னி மக்களின் இன்றைய நிலைக்கு முழுக்க முழுக்கப் பொருந்துகின்றது. ஆனால் அரசின் காதில் இது விழுமா என்பது சந்தேகத்திலும் சந்தேகமே.

இத்தருணத்தில் ஆழிப்பேரலை என்ற அரக்கன், ஏழு வருடங்களுக்கு முன்னர் இலங்கை உட்பட தென்கிழக்காசிய நாடுகளைக் குலுக்கி, உலுப்பி உயிர்ச் சேதங்களையும் உடைமைச் சேதங்களையும் உண்டாக்கி ஊழித்தாண்டவம் ஆடிய டிசெம்பர் 26 ஆம் நாளை மறந்துவிட முடியாது.

அன்றைய தினம், இந்தோனேசியாவின் வடதிசையில், சுமாத்திரா தீவில், கடலுக்கு அடியில் உருவான சக்திவாய்ந்த பூகம்பம், எமது நாட்டின் கடலோரப் பகுதிகளில் மொத்தம் 17,324 பேரைக் காவு கொண்டது. வடக்கு, கிழக்கு, தெற்கு மாகாணங்களில் பெரும் உடைமைச் சேதங்களையும் உண்டாக்கியது.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட தாய்லாந்து, இலங்கை, இந்தியா, மாலைதீவு, ஆபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்களின் மறுவாழ்வுக்கும், புனர்நிர்மாணப் பணிகளுக்குமென ஐக்கிய நாடுகள் சபை விசேட அலுவலகம் (ஓ.எஸ்.ஈ) அமைத்து உதவியது.

எமது நாட்டில் ஆழிப்பேரலையால் உயிர் இழப்புகளும் உடைமைச் சேதங்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே அதிகம். எனினும் மாகாணங்களுக்கான உதவிகளை எந்த அமைப்பினூடாக வழங்குவது என்பதில் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உண்டான கருத்து வேறுபாடுகளால், வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நாவின் உதவிகள் உரிய அளவில் கிடைக்கவில்லை.

அதன் மத்தியிலும் டிசெம்பர் 26 ஆம் திகதி தேசிய பாதுகாப்புத் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வருடாந்தம் நினைவு கூரப்படுகின்றது.

ஆயினும்-

ஆழிப் பேரலையால் வீடு, வாசல்களை இழந்து தவித்த இலட்சக்கணக்கானோர் இன்னமும் தமது வாழ்க்கைக்கு அல்லது பழைய இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டார்கள் என்று கூறிவிட முடியாது.

பாதிப்புற்ற மக்கள் ஆழிப் பேரலையின் பின்னர் நீண்ட காலத்தை தமது உறவினர்களின் வீடுகளிலும், நண்பர்களின் இல்லங்களிலும் தங்கியிருந்து கழித்த பின்னர் தமது சொந்த முயற்சியாலேயே ஏதாவது ஒரு இடத்தில் குடியேறுவது என்ற நிலை உண்டாகியது.

ஆழிப்பேரலையால் உண்டான பாதிப்புகளை - சேதங்களை - ஈடுசெய்வதற்கு உதவிகளை வழங்குவது என்ற பெயரில் பாதிப்புற்ற மக்களைக் காட்டி, அரசியல்வாதிகளும் அரச சார்பற்ற அமைப்புகளும் சுருட்டிக் கொண்டவை ஏராளம். பெருமளவு பணத்துக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையும் இருந்தது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவாத, நிவாரணம் செய்யாத நிலையில் ஏழு வருடங்கள் கழிந்துவிட்டன. இந்த இலட்சணத்தில் தேசிய பாதுகாப்புத் தினம் அர்த்தமற்ற ஒன்றாகவே தொடர்கிறது.

# தேவானந்தா சட்டத்தை அவமதித்த குற்றச்சாட்டு புலனாய்வு செய்ய ஆணைக்குழு பரிந்துரை

நேற்று 25-12-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் விமரிசனத்திலிருந்து ஒரு பகுதி

* அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது சட்டத்தை அவமதித்தார் என்ற குற்றச் சாட்டை புல னாய்வு செய்ய நல்லிணக்க ஆணைக் குழு பரிந்துரைத்துள்ளது.
* உள்நாட்டு விடயத்தில் வெளி நாடுகள் விரல் நுழைப்பதை அனுமதிக்கப்போவதில்லை- அமைச்சர் பீரிஸ்
* மார்ச்சில் நடைபெறவிருக்கும் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு காத்திருக்கிறது ஆப்பு.

போர் முடிவுற்றதனால் நாட்டில் நிலவிய உளவியல் பயப்பிராந்தியிலிருந்து நாடு விடுபட்டுள்ளது. அதேசமயம் முன்பு இல்லாத வகையில் அபிவிருத்திப் பணிகள் முடுக்கி விடப்பட்டன. இருந்தபோதும் போர் முடிவினால் கிடைத்த பலாபலன்கள் இனிமேல்தான் வெளிப்படுத்தப்பட வேண்டியிருக்கின்றன.

அரசும் தமிழ்தேசிய கூட்டமைப்பும் மோதல் நிலைக்குள்ளாகியிருக்கின்றன. அவர்களின் பேச்சுவார்த்தைகள் தடுமாறிக்கொண்டிருக்கின்றன. உத்தேச நாடாளுமன்ற தெரிவுக் குழுவும், இனிமேல்தான் உயிர்பெற்றாகவேண்டும். இதனால் தமிழ் மக்களின் கவலைகளுக்கு ஒரு தீர்வு காண்பதற்கான அரசியல் பொதி இன்னமும் வெளியாக முடியவில்லை. இந்தவிடயம் 2012 ஆம் ஆண்டு எங்கேபோய் நிற்கும் என்பது சொல்ல முடியாமல் இருக்கின்றது.

**கூட்டமைப்பின் கோரிக்கை**

இலங்கையின் பொறுப்புக்கூறும் பொறிமுறையானது தொடர்ச்சியாக தோல்விகளுக்குள்ளாகி வருவதை ஏற்றுக் கொள்ளும்படி. கடந்தவாரம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச சமூகத்தைக் கோரியதுடன் பொறுப்புக் கூறல் தொடர்பாக சர்வதேச பொறிமுறையொன்றை நிறுவும்படியும் வற்புறுத்தியிருந்தது. அவர்கள் விடுத்த அறிக்கையொன்றில் நல்லிணக்க ஆணைக் குழுவானது முரண்பாட்டில் பாதிக்கப்பட்டவர்களை வெளிப்படையாகவே கைவிட்டுவிட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியிருப்பதுடன், ஆணைக் குழுவானது போர்க் குற்றங்கள் மற்றும் மனித இனத்துக்கு மாறாக குற்றங்கள் புரிவதற்கு நேரடியாக காரணமாக இருந்த கொள்கைகளை

வகுப்பதற்குப் பொறுப்பாக இருந்த ராணுவ மற்றும் சிவில் தலைவர்களுக்கு குற்றங்களில் இருந்து பாதுகாப்பையும் வழங்கியிருக்கிறது என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த அறிக்கை விடுக்கப்படுவதற்கு ஆறு நாள்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் த.தே.கூ.தலைவர் இரா. சம்பந்தன் பேசுகையில், ஒருநாடு தன் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து தவறும் சந்தர்ப்பங்களில் சர்வதேச சமூகம் தலையிடுவதற்கான உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் ஒரு நாட்டின் முதற்கடமை தமது சொந்த மக்களை பாதுகாப்பதாகும் என்றார் அவர்.

இந்த வார்த்தைகள் வடக்கில் அரசியல் தலைமைத் துவத்துக்கு முயன்று வரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு எரிச்சல் மூட்டியிருக்கவேண்டும்.

இதற்கு எவ்வாறு பிரதிபலிப்பை வெளியிடவேண்டும் என்பதற்கான ஒரு வழிமுறையைத் தெரிவிக்கும்படி டிசெம்பர் 14 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவையில் அவர் ஜனாதிபதி ராஜபக்ஷவை கேட்டிருந்தார். இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி தேவானந்தா மட்டுமல்ல த.தே. கூட்டமைப்பிடமிருந்துவரும் கருத்து களுக்கு ஏனையவர்களும் கடுமையான எதிர்க்கருத்துக்களை வெளியிட உரித்துடையவர்கள் என்றார். இது தேவானந்தாவுக்கு இலகுவான விடயமாக இருக்க முடியாது. ஏனென்றால் அவர் சட்டத்துக்கு மதிப்பளிக்காமல் நடந்து கொண்டுள்ளார் என்ற

## அறிக்கை மீதான வெளிநாடுகளின் ஆழமான விமர்சனம் இன்னும் இல்லை

குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக புலனாய்வுகள் மேற் கொள்ளப் படவேண்டும் என்று நல்லிணக்க ஆணைக் குழு தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

**நடைமுறைக்கு ஒவ்வாது**

கடந்த செவ்வாய்க்கிழமை ஊடக சந்திப்பொன்றின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ த.தே.கூ. வெளிநாட்டிலிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்கின்றது என்று குற்றஞ் சாட்டினார். பயனுள்ள வகையில் அதனால் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடமுடியவில்லையென்றார். வடக்கு கிழக்குக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது நடைமுறைக்கு ஒவ்வாத விடயம் என்று அதனை நிராகரித்தார்.

எந்த நாடு என்று ஜனாதிபதி குறிப்பிடாது போனாலும் அதுபற்றி அறிந்துகொள்ளும் ஆர்வம் வெளிநாட்டு தூதரக வட்டாரங்களில் காணப்பட்டது.

இந்திய அதிகாரிகளோடும் தலைவர்களோடும் பேசுவதற்கு த.தே.கூ அவ்வப்போது இந்தியாவுக்கு சென்று வந்துள்ளார்கள் என்பது இரகசியமல்ல. அமெரிக்காவின் அதிகாரபூர்வ அழைப்பை ஏற்று அமெரிக்காவுக்கும் அவர்கள் சென்று வந்துள்ளார்கள். அரசுடன் பலகட்ட பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்த வேளையில் இந்தப் பயணம் இடம்பெற்றது.

குறிக்கப்பட்ட பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் அரசமைப்பின் மாகாண சபைகளுக்கான 13 ஆவது திருத்தத்தில் இடம்பெற்றுள்ளன. ஜே.ஆர். ஜயவர்தன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியுடனான கலந்துரையாடலுடன் இந்த திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இந்த நிலைமையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை அதிகாரப் பகிர்வு விடயத்தில் இரண்டு விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளது. அதில் ஒன்று உள்ளூராட்சி மன்றங்களில் மக்களின் அடிமட்ட நிலைகளிலிருந்தும் பங்கேற்புகளுக்கு உறுதியளிக்கப்பட வேண்டும் என்பதாகும் மற்றது மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அதிகாரப்பகிர்வுக்கான பொருத்தமான முறையொன்றை உருவாக்கும்போது மாகாண சபைகள் செயல்படுவதில் காணப்பட்ட குறைபாடுகளும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்பதாகும். அதேவேளை நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டின் வளமான பன்முகத் தன்மையைப் பேணுவதுடன் பாதுகாக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளது.

மேலும் நல்லிணக்க குழு தெரிவித்துள்ள மேலதிக பொறிமுறை மாகாண சபைகளிலிருந்து தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு இரண்டாவது சபையாகும். அவ்வாறானதொரு பொறிமுறை அரசியல் தலைமைத் துவங் களுக்கிடை யிலும் மாகாணங்களிடையிலும் நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் என்று குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகி இரண்டு கிழமைகளுக்கு மேலாகியும் இலங்கையின் நட்பு நாடுகள் உட்பட எதுவும் அறிக்கையை வரவேற்று அறிக்கை வெளியிடவில்லை. இந்த வகையில் வெளிநாட்டமைச்சு அதிகாரிகள் வேகமாக இறங்கி செயல்பட்டதாகத் தெரியவில்லை. வெளிநாட்டு

**தொகுப்பு: கோகுலன்**

அமைச்சரும் கூட நாடாளுமன்றத்தில் சிங்களத்தில் பேசியதைக் கவனிக்கையில் இலங்கை தொடர்பில் உள்நாட்டில் அல்லது வெளி நாட்டில் புலன் விசாரணைகள் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது என்று தெரிகின்றது.

(27 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை**

மார்கழி 11, செவ்வாய்க்கிழமை 27.12.2011

திதி: திருதியை மு.இ. 9.42 வரை

நட்சத்திரம் - உத்தராடம் மு.ப. 8.16 வரை

சுபநேரம்: 10.57- 12.27 வரை, ராகு காலம்: 3.27 - 4.57 வரை

# வீதிகளில் கூடி நின்று கதைப்பதை இளையோர் தவிர்க்க வேண்டும்

## கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம், டிசெம்.26

தேவையின்றி வீதிகள் சந்தி களில் கூடி நிற்பதையும் கதைப் பதையும் தவிர்த்துக் கொள்ளு மாறு இளம் சமூகத்தினரிடம் கோப்பாய் பொலிஸ் பொறுப் பதிகாரி அறம்பொல கேட்டுள் ளார்.

இவ்வாறு வீதிகளில் கூடி நிற்போரால் பல்வேறு பிரச் சினைகள் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் 'உதயனுக்கு' மேலும் தெரி வித்ததாவது:

தேவையின்றி வீதிகள் மற் றும் சந்திகளில் கூடி நிற்ப வர்களால் பிரச்சினைகள் எழு கின்றன. கூடி நிற்பவர்கள் வீதிப் போக்குவரத்துக்கு இடைஞ் சல் ஏற்படுத்துகின்றனர்.

பெண்களுடன் சேஷ்டை புரிகின்றனர். சில இடங்களில் வீதியோரமாக கிரிக்கெட், கரம் போட், சீட்டு ஆகிய விளை யாட்டுக்களை விளையாடு கின்றனர்.

இவ்வாறு வீதிகளில் தேவை யின்றி கூடி நிற்பவர்கள், மற் றும் விளையாட்டுக்களில் ஈடு பட்டிருப்பவர்களால் வீதியால் பயணிப்போர் பல்வேறு நெருக் கடிகளைச் சந்திக்க வேண்டி ஏற்படுகின்றது.

இது தொடர்பாக சில முறைப் பாடுகள் பொலிஸ் நிலையத் துக்குக் கிடைத்துள்ளன.

எனவே வீதிகள் சந்திகளில் கூடி நிற்பதையும் கதைப்பதை யும் தவிர்த்துக் கொள்ளுமாறும் இவ்வாறு நிற்போர் கைது செய்யப்படுவர் எனவும் இதற் குத் தயங்க மாட்டோம் என்றும் அவர் மேலும்கூறினார். (ம-14)

# கலைவிழாவும் பரிசில் வழங்கலும்

சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீமுருகன் முன்பள்ளிச் சமூக மும் சங்கத்தானை சனசமூக நிலைய சமூகமும் இணைந்து நடத்திய கலைவிழா சாவகச் சேரி இந்துக் கல்லூரி மண்டபத் தில் சனிக்கிழமை இடம்பெற் றது.

முன்பள்ளி அபிவிருத்திச் சபை தலைவர் கு.சதாசிவ மூர்த்தி தலைமையில் நடை பெற்ற விழாவுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயி லாயபிள்ளையும் கௌரவ விருந்தினராக இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் பொ.நாக ரத்தினமும் கலந்து கொண்ட னர்.

நிகழ்வில் முன்பள்ளிக் கல் வியை நிறைவுசெய்து பாட சாலைக் கல்வியை ஆரம் பிக்கவுள்ள மாணவர்கள் சாவ கச்சேரி வடக்கு கிராம அலு வலர் பிரிவைச் சேர்ந்த கடந்த ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் முன்பள்ளியின் பழைய மாணவர்கள் கடந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சை யில் சித்தி பெற்று பல்கலைக் கழக அனுமதி கிடைத்த மாண வர்கள் இப்பிரிவில் கடமை யாற்றி இளைப்பாறிய கிராம அலுவலர் எஸ்.கே.வேலாயுத பிள்ளை ஆகியோர் கௌரவிக் கப்பட்டனர்.

முன்பள்ளிச் சிறார்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற் றன. (ம-207)

# பண்டிகைக் காலங்களில் கடைகள் திறக்க அனுமதி

தென்மராட்சி, டிசெ.26

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் ஆகிய பண்டிகைகளை முன் னிட்டு நேற்றுத் தொடக்கம் ஜனவரி 15 ஆம் திகதிவரை யுள்ள ஞாயிற்றுக்கிழமைக ளில் அனைத்து வர்த்தக நிலை யங்களையும் திறக்க அனுமதித் துள்ளனர்.

01.01.2012 08.01. 2012, 15.01.2012 ஆகிய ஞாயிற் றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்கள் வியாபாரத் துக்காகத் திறந்திருக்குமென வணிகர் மன்றத் தலைவர் வ.சிறி பிரகாஸ் தெரிவித்தார்(ம-207)



காரைநகர் கடற்படையினரின் மருத்துவப் பிரிவால் எழுவை தீவில் நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் கலந்துகொண்ட மக்களுக்குச் சிகிச்சை வழங்கப்படுகின்றது. (250)

# புங்குடுதீவுக்கான பிரதான வீதி சேதம்

யாழ்ப்பாணம், டிசெ.26

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக வேலணை புங்குடுதீவுக் கான பிரதான வீதி சேதமடைந்துள்ளது.

வேலணை புங்குடுதீவுப் பாலம் பெருங்காட்டுச் சந்தி உட்பட குறி காட்டுவான் வரையான வீதிகள் மோச மாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் நெடுந் தீவு நயினாதீவுக்குச் செல்லும் இந்த முக்கிய வழித் தடத்தில் வாகனங் களைச் செலுத்துவது மிகவும் கஷ்ட மாக இருப்பதாகவும் இதனால் வாக னங்கள் சேதமடைவதுடன் விபத்துக் களும் ஏற்படக் கூடிய சூழ்நிலை உள்ள தாக வாகனச் சாரதிகள் கவலை தெரி விக்கின்றனர். பண்ணைப் பால வீதியைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் கூட இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என்பது குறித்து தீவுப் பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர். (ம-7)

# ஈழத்துச் சிதம்பரத்தில் சிறப்பாக நடக்கவுள்ள திருவெம்பாவை

யாழ்ப்பாணம், டிசெம்.26

காரைநகர் சிவன்கோயிலில் வருடாந்த திருவெம்பா உற் சவத்தை இந்த முறை மிகச் சிறப்பாக கொண்டாடுவதற் கான ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே. ஆனைமுகன் தெரிவித்தார்.

இந்த உற்சவம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ள தாகவும் அவர் மேலும் கூறி னார்.

(ம-26)

# பஸ்தரிப்பிடத்தில் ஆணின் சடலம்

தென்மராட்சி டிசெ.26

சாவகச்சேரி வைத்தியசாலை முன்பாக உள்ள பஸ் தரிப்பிடத் தில் ஆணின் சடலம் நேற்று முன்தினம் காலைமீட்கப்பட் டுள்ளது.

இது தொடர்பாக வைத்திய சாலை நிர்வாகத்தினர் சாவ கச்சேரி பொலிஸாருக்கு அறி வித்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண் டனர்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் (வயது 57) என்பவரது சடலமே இதுவென்று அவரது உறவினர் களால் அடையாளம் காணப் பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் பதில் நீதிவானின் கவனத்திற்கு கொண்டு வந்த னர்.

சடலம் தொடர்பான விசா ரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதி காரிக்கு உத்தரவிட்டதுடன் சாவ கச்சேரி வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மூலம் உடற்கூற்றுப்பரிசோதனை நடத் திய பின்னர் சடலத்தை உற வினரிடம் ஒப்படைக்குமாறு பதில் நீதிவான் செ.கணபதிப் பிள்ளை உத்தரவிட்டார்.

(ம-207)

# குமுதினி நேற்று தடைப்பட்டது; மக்கள் பெரும் அசௌகரியம்

யாழ்ப்பாணம், டிசெ.26

குறிகாட்டுவான் - நெடுந் தீவு படகுச்சேவை நேற்றைய தினம் சேவையில் ஈடுபடாத காரணத் தால் பொதுமக்கள் பெரும் சிரமங் களை எதிர்கொண்டனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான பட குச் சேவை மட்டுமே நேற்றைய தினம் சேவையில் ஈடுபட்டது.

எனினும் எந்தவித முன்னறி வித்தலும் இன்றி இடை நிறுத் தப்பட்ட இந்தப் படகுச் சேவை யால் குறிகாட்டுவான், நெடுந் தீவுக்குச் செல்வதற்காகக் காத்தி ருந்த மக்கள் திரும்பி வீடு களுக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அத்துடன் நேற்றைய தினம் கிறிஸ்மஸ் பண்டிகை என்ப தால் ஆலயங்களுக்கு இரவு நேர ஆராதனைக்குச் சென்று திரும் பிய மக்கள் தமது வீடுகளுக்குச் செல்ல முடியாமல் நீண்ட நேரக் காத்திருப்பின் மீளவும் யாழ்ப் பாணம் நோக்கிப் புறப்பட்டனர்.

இந்த நிலையில் அரச பட குச் சேவையான குமுதினிப் பட குச் சேவையை ஞாயிற்றுக் கிழமைகளிலும் சேவையில் ஈடு படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313-7)

# கட்டாக்காலி கால்நடைகளை பகிரங்கமாக விற்க முடியாதநிலை

## காரைநகர் பிரதேச சபைத் தலைவர்

யாழ்ப்பாணம், டிசெம்.24

காரைநகர் பிரதேச சபை யால் பிடிக்கப்படும் கட்டாக் காலி மாடுகளை ஏலத்தில் விற் பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகச் சபையின் தலைவர் வே. ஆனைமுகன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தப் பிரதேசத்தில் கட் டாக் காலியாகத் திரியும் கால் நடைகள் தினமும் தொழிலாளர் களால் பிடிக்கப்பட்டு வருகின் றன.

பிடிக்கப்படும் மாடுகள் உரிய வர்கள் உரிமை கோராத விடத் தில் அவற்றைப் பகிரங்கமாக விற்பனை செய்வதற்கும் தடங் கல் ஏற்படுகின்றது.

குறிப்பாக கால்நடை வைத்திய அதிகாரியின் சிபார்சு கிடைக்கப்பெறுவதில் தாமதம் ஏற்படுகின்றன.

இவற்றால் கட்டாக் காலி யாக பிடிக்கப்படும் மாடுகளை ஏலத்தில் விற்பனை செய்வதற் கும் தாமதம் ஏற்படுவதாக பிர தேச சபை தலைவர் மேலும் கூறினார். (ம-26)

# இரும்பு விலைக்கு திருடர்களால் விற்கப்பட்ட 20 ஆயிரம் பெறுமதியான இரும்புக் கதவு

யாழ்ப்பாணம், டிசெ.26

20 ஆயிரம் ரூபாவுக்கு மேற் கொள்வனவு செய்து பொருத் திய இரும்புக் கதவை ஒரு மாதம் ஆக முன்னர் திருடிச் சென்ற திருடர்கள் 2 ஆயிரத்து 800 ரூபா வுக்கு இரும்பு விலைக்கு விற் றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்புத் துறையில் இடம்பெற்றது.

இந்தச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

வீடு புனரமைப்புப் பணிகள் இடம்பெறுவதால் வேறு வீட் டில் வீட்டுச் சொந்தக்காரர் தங்கி யுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த வீட்டுக்குப் பொருத்தியிருந்த கதவு திருட்டுப்போயுள்ளதாகத் தெரிவித்தனர்.

அதன் பின்னர் தேடுதல் நடத்திய போது யாழ். மானிப் பாய் வீதியில் நாற்சந்தியில் உள்ள இரும்பு கொள்வனவு செய்யும் கடையில் இந்த இரும் புக் கதவு இருப்பதைக் கண்டு அத் தகவலை படையினருக்கு தெரிவித்தனர்.

அங்கு வந்த படையினர் விசா ரித்த போது லாண்ட் மாஸ்ரரில் வந்த இருவர் அதனை நிறுத்தி 2 ஆயிரத்து 800 ரூபா பெற்றுச் சென்றதாகக் கடை உரிமையாள ரால் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் அறிவுறுத்த லுக்கமைய கடை உரிமையா ளர் கேற்றை விற்ற நபர்களுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்தார்.

அவர்களிடம் விசாரித்த படை யினர் கேற்றை மீண்டும் அந்த இடத்தில் பொருத்துமாறு உத்தர விட்டனர். வாங்கிய பணத்தை கடைஉரிமையாளரிடம் கொடுத்து விட்டு கேற்றைப் பெற்றுக் கொண்டு லாண்ட் மாஸ்ரரில் ஏற் றிச் சென்று அந்த இடத்தில் பொருத்தினர் திருடர்கள்.(ம-207)

# உருளைக் கிழங்கு உற்பத்தி குடாநாட்டில் அதிகரிப்பு

### 32 ஹெக்ரேயர் நிலப்பரப்பில்இம்முறை செய்கை

அச்சுவேலி, டிசெம்.26

யாழ்மாவட்டத்தில் நீண்டகால இடைவெளிக்கு பின்னர் இந்த வருடம் கூடுதலான நிலப் பரப்பில் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இந்த வகையில் 32 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த வருடத்திலும் பார்க்க 15 ஹெக்ரேயரில் கூடுதலாக செய்கை பண்ணப்பட்டுள்ளது.

விதை உருளைக் கிழங்கின் விலை ஒரு பெட்டி 11850 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட போதிலும் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஆர்வத்தோடு ஈடு பட்டுள்ளனர்.

விதை உருளைக் கிழங்கை தனியார் இறக்குமதி செய்து யாழ். மாவட்டத்துக்கு எடுத்து வந்து 50 கிலோ நிறை கொண்ட ஒரு பெட்டி 11850 ரூபா வீதம் விவசாயிகளுக்கு விற்பனை செய்தனர்.

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் நுவரேலியாவில் செய்கை பண்ணப்பட்டு விதையாக பயன்படுத்துவதற்கு தயார் செய்யப்பட்ட விதை கிழங்கை 7 ஆயிரம் ரூபா வீதம் 50 கிலோ கொண்ட பைகளை மட்டுப்படுத் தப்பட்ட அளவில் விநியோகித் துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் அனோவா, கல்வை2, டிசைறி, றெட்லசோ போன்ற உருளைக் கிழங்கு இனங்கள் பயிர் செய்யப்பட்டுள்ளன. பெருமளவில் நவக்கிரி, குட்டியப்புலம், உரும்பிராய், கோப்பாய், தொல்புரம் பகுதியில் உருளைக் கிழங்கு செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உருளைக் கிழங்கு செய்கை தொடர்பாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள பாட விதான அபிவிருத்தி அதிகாரி இராமலிங் கம் சௌந்தரராஜன் தெரிவிக்கை யில்:

''யாழ்.மாவட்டத்தில் செய்கை பண்ணப்படும் உருளைக்கிழங்கு வகைகளுக்கு தென்னிலங்கை பாவனையாளர் மத்தியில் தனிப்பட்ட வரவேற்பு உள்ளது. இராசயணத் தாக்கம் குறைவாக இருப்பதால் சுவையின் தரம் உயர் நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது. இந்த வகையில் தம்புள்ள பொளாதார மத்திய சந்தையில் கடந்த வருடம் ஆகக்கூடிய விதைக்கு விற்பனை செய்யப்பட்டது.

புதிய தொழில் நுட்பங்களை பிரயோகித்து சராசரி ஒன்றுக்கு பத்து அத்தருக்கு மேற்பட்ட விளைச்சலை பெறுவதற்கு ஏதுவானமுறையில்செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் விவசாயிகளுக்கு கணிசமான லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது'' எனத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் யாழ். மாவட்ட உருளைக் கிழங்கு வெளிமாவட்ட உருளைக் கிழங்கின் தரத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் மிகக் குறைவான முறையில் விற்பனை செய்யப்பட்டது. அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால் இந்த வருடம் மிக ஆர்வத்தோடு விவசாயிகள் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டுள்ளனர். (ம-11)

# சாவகச்சேரி நகரசபையின் அபிவிருத்தி வேலைத்திட்டம்

தென்மராட்சி, டிசெ.26

சாவகச்சேரி நகர சபையால் அடுத்த வருடம் மேற்கொள்ளப் படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக சபை உறுப்பினர்களால் முன் வைக்கப்பட்ட வேலைத் திட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி வேலைகள் நிறைவேற்ற சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சபை நிதியில் நுணாவில் சேகண்டி வாய்க்கால் வீதி, கண்டுவில் முதலாவது ஒழுங்கை, யாழ்ப்பாண வீதி முதலாம் ஒழுங்கை, புனித லிகோரியார் வீதி, நாகலிங்கம் வீதி, கல்லடி மூட்ட வீதி, மீசாலை புதிய வீரபத்திரர் வீதி, சங்கத்தானை முதலாம் ஒழுங்கை, மீசாலை பாலையடி விநாயகர் வீதி ஆகியவையும், மாகாண அபி விருத்தி நன்கொடை நிதியில் மீசாலை வெள்ளைமாவடி பிள்ளையார் கோவில் வீதி மீசாலை நூலக வளாகத்தில் கிணறு அமைத்தல் ஆகியவையும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

பிரமான அடிப்படையிலான வேதன நன்கொடை நிதியில் மீசாலை நூலக மாடிக் கட்டட வேலை செல்வ விநாயகர் சனசமூக நிலையம், திருவள்ளுவர் சனசமூக நிலையம் ஆகிய நிர்மாணம் ஆகியவையும் மேற்கொள்ளவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (ம-207)

# இறால் பிடிப்பதில் ஆர்வம்

யாழ்ப்பாணம், டிசெம்.26

அரியாலை கிழக்கு கடற் பகுதியில் மீனவர்கள் கூடுதலாக இறால் பிடிக்கும் தொழிலிலேயே ஈடுப்பட்டு வருவதாக யாழ். காடல் தொழில் நிலையியல் வள அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

இப்பகுதிகளில் மீளக் குடியமர்ந்த மீனவர்கள் தமது மீனவத் தொழிலில் இறால் பிறக்கும் தொழிலிலேயே கூடுதலான கவனம் செலுத்தியுள்ளனர்.

இந்த இறால் பிறக்கும் வலையில் மீன்களும் சிக்குகின்றன என்றும் தெரிவிக்கின்றனர்.

அதனைவிட இந்தக் கடற் பகுதியில் இறாலின் பெருக்கமும் அதிகரித்தும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

# மருந்து தெளிக்கப்பட்ட பழவகைகள் விற்பனைக்கு வருவதாக முறைப்பாடு

### நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.26

நல்லூர்ப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட திருநெல்வேலி, கொக்குவில் பொதுச் சந்தைகளிலும் ஏனைய தனியார் கடைகளிலும் மருந்து தெளித்துப் பழுக்க வைக்கப்பட்ட பழவகைகளை விற்பனை செய்வது தடை செய்யப்படும் என நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

மருந்து தெளிக்கப்பட்டு பாவனைக்கு உதவாத பழ வகைகளை பழக்கடை வியாபாரிகள் விற்பனை செய்வதாகவும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச சபைக்கு பொதுமக்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பாக பிரதேச சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு மருந்து தெளித்த பாவனைக்கு உத வாத பழவகைகளை விற்பனை செய்வது தடை செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

பொது சுகாதார பரிசோதகர்கள் சம்பந்தப்பட்ட கடைகளில் பரிசோதனைகளை மேற்கொண்டு பாவனைக்கு உதவாத மருந்து தெளிக்கப்பட்ட பழவகைகள் காணப்படின் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கூறப்பட்டது. அத்துடன் பழவகைகளை அழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# பாதை சேவைக்கு கேபிள்

யாழ்ப்பாணம், டிசெ. 26

ஊர்காவற்றுறைக்கும் காரைநகர் இறங்கு துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் பாதை சேவைக்கான புதிய கேபிள் ஒன்று கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்தப் பாதை சேவையின் கேபிள் அறுந்து பழுதடைந்ததால் கேபிள் இன்றியே இந்தச் சேவை இடம்பெற்று வருகின்றன.

பாதைக்கான கேபிள் வசதி இல்லாமையால் குறித்த பாதையில் வாகனங்களை ஏற்றுவதும் பாதிக்கப்பட்டது.

தற்போது புதிய கேபிள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளதால் இந்தப் பாதையில் அதை பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வீதி அபி விருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-26)

# திவநெகும சுய தொழில் முயற்சியாளருக்கு உடுவிலில் ஒருநாள் பயிற்சிப் பட்டறை

வாழ்வெழுச்சி பொருளாதாரத் திட்டத்தின் கீழ் சுயதொழில் முயற்சிக்கான உதவி கோரியவர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இளைஞர் விவகார வாழ்க்கைத் திறன் அபிவிருத்தி அமைச்சின் சிறு அபிவிருத்தி வியாபார பிரிவால் நடத்தப்பட்டது.

கடந்த மாதம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சியில் கலந்து கொண்டு தொழில்முயற்சிக்கான உதவிகளைக் கோரிய இளைஞர் யுவதிகள் உட்பட 87 பேர் தெரிவு செய்யப்பட்டு இந்த கருத்தரங்கு இடம் பெற்றது.

உடுவில் பிரதேச செயலக திறன் அபிவிருத்தி அலுவலர் எஸ். பீஸ்மன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலர் கே.பிரபாகரமூர்த்தி விருந்தினராகக் கலந்துகொண்டார். விரிவுரைகளைக் கொழும்பில் இருந்து வருகை தந்த முயற்சியாண்மை அபிவிருத்தி அலுவலர் எ.தாசீர் நடத்தினார். (ம-86)

# திடீரென நிறுத்தப்பட்ட பஸ்சேவை மக்கள் பெரும் நெருக்கடியில்

தென்மராட்சி டிசெ.26

ஆறு மாதங்களாக நடத்தப்பட்டு வந்த பஸ் சேவை திடீரென நிறுத்தப்பட்டதால் மக்கள் மீண்டும் தமது சொந்த தேவைகளுக்காக நீண்ட தூரம் நடந்து செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலின்போது சைக்கிள் பவனியில் சென்ற அமைச்சர் குழுவிடம் மந்துவில், வேம்பிராய், இயற்றாலைப் பகுதி மக்கள் பருத்தித்துறையிலிருந்து வரணி, இயற்றாலை, மந்துவில், வேம்பிராய் ஊடாகச் செல்லும் 754 மார்க்க பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு விடுத்த வேண்டுகோளையடுத்து இப்பகுதிக்கான பஸ்சேவை இடம்பெற்றுவந்தது.

இந்த நிலையில் இந்த பஸ் சேவை திடீரென நிறுத்தப்பட்டுள்ளதால் இப் பிரதேச மக்கள் தமது பயணங்களை மேற்கொள்ள வரணி மற்றும் மீசாலை புத்தூர்சந்தி ஆகிய இடங்களுக்கு சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்லவேண்டிய நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம எடுப்பார்களா என்று இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம- 207)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வெள்ளிக்கிழமைகளில் குழந்தைகளுக்குச் சிகிச்சை

தென்மராட்சி, டிசெ.26

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் குழந்தைகள் சிகிச்சை நிபுணரின் சேவை பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்படவுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் முயற்சியாலும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளரின் வழி நடத்தலுடன் யாழ்.பல்கலைக்கழக குழந்தைகள் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகள் சிகிச்சை நிபுணர் பிரதி வெள்ளிக்கிழமைகளில் சாவகச்சேரி வைத்தியசாலையில் குழந்தைகளுக்குச் சிகிச்சையளிக்கவுள்ளார்.

வைத்தியசாலையில் பிரதி சனிக்கிழமை தோறும் நடத்தப்படும் குழந்தைகள் கிளினிக்கில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகளால் சிபாரிசு செய்யப்படும் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வைத்திய நிபுணர் சிகிச்சையளிக்கவுள்ளார்.

இந்த நிலையில் இந்த வைத்தியசாலைக்கு கண், காது, தோல், கர்ப்பிணிகள் போன்ற வற்றுக்கான வைத்திய நிபுணர் களின் சேவைகளும் கிடைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த வைத்திய நிபுணர்களின் சேவைகளும் கிடைப்பின் இந்த வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெற வரும் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, கிளிநொச்சி, வடமராட்சி கிழக்கு, பூநகரி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்லும் காலவிரயம், செலவுகள் போன்றவை பெருமளவில் குறையுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குழந்தைகள், கண்,காது, தோல், கர்ப்பிணிகள் போன்ற நிபுணத்துவ சேவை வழங்குவோர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நிரந்தரமாகக் கிடைக்கும் வரை யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தென்மராட்சி பிரதேசத்தையும் ஏனைய பிரதேசங்களையும் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் மாதத்தில் ஒருநாள் சாவக்சேரி வைத்தியசாலையில் நிபுணத்துவ சேவையை வழங்கினால் நெருக்கடிகளையும் குறைக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

சாவகச்சேரி வைத்திய சாலையில் போதிய கட்டட வசதிகள் இருப்பதால் வைத்திய நிபுணர்களை இங்கு அனுப்பி வைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளமாட்டார்களா எனவும் கேட்டுள்ளனர். (ம-207)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
25.07.1960





பிறப்பு
15.01.1991

**கந்தசாமி மனோகரன்** **மனோகரன் செந்தூரன்**

ஆழியின் பிடியில் - 26.12.2004

ஆண்டுகள் ஏழானதுவோ பாரினிலே உமைப்பிரிந்து
எம்மினிய உறவுகளே பன்னிரு செல்வங்களே
காணுகின்றோம் உமை என்றும் காளித்தாய் பாதமதில்

மில் லேன், மல்லாகம்.
இ. மனோகரன் (பாலன்) குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பு



**அமரர் சின்னத்தம்பி கதிரேசு (ஐயா)**

தோற்றம்: 17.03.1944

மறைவு: 26.11.2011

கடந்த 26.11.2011 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சின்னத்தம்பி கதிரேசுவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம். அத்துடன் இன்று (26.12.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளவும்.

அல்லாரை தெற்கு, மீசாலை.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை சந்திரசேகரம்



ஆவரங்கால் கிழக்கைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத் துரை சந்திரசேகரம் (ஓய்வு பெற்ற தபால் ஊழியர்) 24.12. 2011 சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், புத்தூர் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம்-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் முத்தம்மா, காலஞ்சென்ற குலசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பராசக்தி, சிவசக்தி, தணிகைநாதன், யோகேஸ்வரி, சிவகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சன், தணிகைச்செல்வி, முருகதாஸ், மணிவண்ணன், பிரதாபன், தேன்மொழி, வளர்மதி, மணி வண்ணன் ஆகியோரின் அன்பு மாமனும், சாதனன், சலோனி, விகாஸ், ரஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.
தகவல்: மனைவி, பிள்ளைகள்.

### திருமதி கதிர்காமு பாலாம்பிகை



233/3, கோயில் வீதியைச் சேர்ந்த திருமதி கதிர்காமு பாலாம்பிகை நேற்று (25.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமுவின் (முன்னாள் ஊழியர், யாழ். மாநகரசபை) அன்பு மனைவியும், தவமணி, பாலசிங்கம் (இத்தாலி), யோகேஸ்வரி (இத்தாலி) நவரட்ணம் (லண்டன்), சிறிகெங்காதரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத்தாயும், தனபாலசிங்கம் (முன்னாள் கிளை முகாமையாளர், யாழ்ப்பாணம் ப.நோ.கூ சங்கம்), இந்திராதேவி, காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற் றும் இந்திராணி, வதனி ஆகியோரின் மாமியும், ரவீந்திரன், சுகீர்தா (லண்டன்), காலஞ்சென்ற ராஜகுமார் மற்றும் அம லதாஸ், சஜிதா (பிரான்ஸ்), கஜரூபன், வினோத், சர்மிளா ஆகியோரின் பேர்த்தியும், சனோஜா, ராஜகுமாரி, றெக்சன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தகவல்: சி. தனபாலசிங்கம் (மருமகன்).

# ஐ.தே.கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு ரவியும், கருவும்

கொழும்பு, டிசெ.26

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு நாடாளுமன்ற உறுப்பி னர்களான கரு ஜயசூரிய மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோரை மீண்டும் உள்வாங்க தலைவர் ரணில் விக்கிரம சிங்க தீர்மானித்துள்ளார்.

கட்சித் தலைவருக்கு உள்ள உத்தி யோகபூர்வ அதிகாரத்தின் அடிப்படை யில், மத்திய செயற்குழுவின் 20 பேருக் கான நியமனங்களின் ஒரு கட்டமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளது.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலை வரின் உறுப்பினர் நியமன அதிகாரத் தின் கீழ் இதுவரை 16 பேர் மத்திய செயற்குழுவுக்கு உள்வாங்கப்பட்டுள் ளனர்.

அண்மையில் இடம்பெற்ற முக்கிய உறுப்பினர் தெரிவுக்கான தேர்தலில் பிரதித் தலைவர் மற்றும் தேசிய அமைப் பாளருக்கான பதவிகள் கிடைக்காததன் காரணமாக மத்திய செயற்குழு உறுப்பினர் உரிமையையும் அவர்கள் இழக்க நேர்ந்தது.

எதிர்வரும் ஜனவரி மாதம் இரண்டாம் வாரம் இடம்பெறும் 2012 ஆம் ஆண்டுக்கான முதலாவது மத்திய செயற்குழு கூட் டத்தில் கரு ஜயசூரிய மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.(ஓ-323)

## ஜன்னலைப் பிரித்துச் சென்று நகைகள், பணம் சூறை

### பொலிகண்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ.26

பொலிகண்டி கிழக்கில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் அதிகாலை வேளை கழிப்பறை ஜன்னலைப் பிரித் துக் கொண்டு சென்ற சிலர் தங்க நகை கள், பணம் போன்றவற்றை அபகரித்துக் கொண்டு சென்றுள்ளனர்.

துணியால் முகங்களை மூடிக் கட்டிக் கொண்டு உட்புகுந்த அந்தக் கோஷ்டி வீட்டாரைக் கட்டி வைத்துவிட்டு தேடு தல் நடத்தி நகைகளையும் பணத்தை யும் எடுத்துக் கொண்டு அங்கிருந்து தப் பிச் சென்றது.

வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ஓ-319)

## 3 சொகுசு வாகனங்கள் கொழும்பு மாநகர சபை கொள்வனவு

கொழும்பு, டிசெ.26

கொழும்பு மாநகரசபைத் தேர்தல் முடிந்து ஒரு மாதம் முடிவதற்குள் அதி சொகுசு வாகனங்கள் மூன்றை மாநகர சபை கொள்வனவு செய்துள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

இந்த வாகனங்களின் பெறுமதி சுமார் 10 கோடி ரூபா என்றும், ஏற்கனவே உள்ள வாகனங்கள் பாவிக்கக்கூடிய நல்ல நிலையில் இருக்கும்போதே இந்த மூன்று வாகனங்களும் கொள்வனவு செய்யப் பட்டுள்ளன என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

எதிர்காலத்தில் வாகனங்களை வாட கைக்கு அமர்த்துவது பற்றியும் மாநக ரசபை பரிசீலித்து வருவதாக கொழும்பு மாநகரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின் றன. (ஓ-சி)

## நிவாரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.26

நல்லூர் கிராம அலுவலர் ஜே/89 மணியந்தோட்டம், உதயபுரம் பகுதி களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நல் லூர் பிரதேச சபை அரிசி, சீனி போன்ற பொருள்களை இலவசமாக வழங்கவுள்ளது. நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த 401 குடும்பங்கள் இந்த உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் என்று நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

(ம-7)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமநாதன் ஈஸ்வரி



காரைநகர், களபூமி, பொன் னாவளை யைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமநாதன் ஈஸ்வரி நேற்று (25.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கம் பரமநாதன் (முன் னாள் கம்பளை வர்த்தகர்) இன் அன்பு மனை வியும், காலஞ்சென்றவர்களான பொன்னம் பலம் (ஹட்டன் வர்த்தகர்)-பொன்னம்மா தம் பதியின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், தவ நாயகி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு தாயும், சபாரத் தினம், திலகநாயகி ஆகி யோரின் பாசமிகு மாமியும், பாக்கியத் தின் அன்புச் சகோதரியும், கஜேந்திரன், கஜேந்தினி, தியாகேந் திரன், பாலேஸ்வரி, நிஷாந் தன், ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அருள்ராசா, தவராசா, நற்குணராசா, பிரணவராசா ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2011) திங் கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாவளை, களபூமி, காரைநகர்.
தகவல்: ப. பாலசுப்பிரமணியம் (மகன்) மு. சபாரத்தினம் (மருமகன்)

### திருமதி செல்வரத்தினம் சறோஜினி



நுணாவில் மத்தி சாவகச்சேரியை பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சறோஜினி 23.12.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை செல்வரத்தினத் தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற வர்களான வல்லிபுரம்- தங்கம்மா தம்பதிய ரின் மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை -இராசபூபதி தம்பதியரின் மருமகளும் நவரத்தினத்தின் அன்புச் சகோதரியும் திவாகரன் (லண்டன்), செல்வறஞ்சன்-காயத்திரி (லண்டன்), சுயேந்தி, பிரதிகரன், தவக்குமார்-கௌசல்யா ஆகி யோரின் பாசமிகு தாயும் செல்வக்குமார் -துசியந்தினி(லண்டன்), ஜெந்திரபாலா-செல்வறஞ்சினி(லண் டன்), பவானந்தன்-செல்வயேந்தினி (பிரான்ஸ்), செல்வ நந்தன்(லண்டன்) ஆகியோரின் மாமியும் முத்துலட்சுமியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2011) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

கல்வயல் வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி.
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி யோகரட்ணம் செல்வதுரை



இல. 11, சங்கரப் பிள்ளை வீதி, மானிப் பாயை வசிப்பிட மாகக் கொண்ட திரு மதி யோகரட்ணம் செல்வதுரை நேற்று (25.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற க. செல்வது ரையின் அன்பு மனை வியும், Dr.அருணா, ஜெயசீலன் (UK), காலஞ்சென்ற குணசீலன் மற் றும் Dr. சுசீலா (அவுஸ்திரேலியா), சத்தியசீலன் (கனடா), சாரதா (ஆசிரியை) ஆகியோரின் அன் புத் தாயும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப 2 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 11, சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்
தகவல்: சாரதா(மகள்).

# ஜனாதிபதி பயணிப்பதற்கு 2 உலங்கு வானூர்திகள்

கொழும்பு,டிசெ.26

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பயணங்களுக்குப் பயன்படுத்தப்படுத்துவதற்காக மேலும் இரண்டு உலங்கு வானூர்திகள் இலங்கை விமானப் படைக்கு வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் கொள்வனவு செய்யப்பட்ட இந்த இரண்டு உலங்கு வானூர்திகளும், இந்த வாரம் இலங்கை விமானப் படைக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவை ஒவ்வொன்றும் சுமார் 2 மில்லியன் டொலர் பெறுமதி கொண்டவையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் பயணங்களுக்குப் பயன்படுத்தப்படும் விமானப் படையின் முக்கிய பிரமுகர்களுக்கான விமான அணியில் இவை சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மாதத் தொடக்கத்திலும் இரண்டு உலங்கு வானூர்திகள் இலங்கை விமானப் படைக்கு விநியோகிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மகாவம்ச அத்தியாயங்களிலும் பொன்சேகாவின் குறிப்பு நீக்கம்

கொழும்பு,டிசெ.26

இலங்கை இராணுவ வரலாற்று நூலில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பற்றி, புதிதாக எழுதப்படும் மகா வம்ச அத்தியாயங்களிலும் சேர்க்கப்படமாட்டார் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை வரலாற்று நூலான மகாவம்சத்தில் புதிதாக மூன்று பகுதிகளைச் சேர்க்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார்.

இலங்கையின் 30 ஆண்டு காலப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய பங்களிப்பை மையப்படுத்தியதாக மகாவம்சத்தின் புதிய பகுதிகள் சேர்க்கப்படவுள்ளன.

மகாவம்சத்தின் புதிய பகுதிகளில் சரத்பொன்சேகா பற்றிய எந்தக் குறிப்புகளும் இடம் பெறமாட்டாது என்று இலங்கையின் கலாசார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிதாக உருவாக்கப்படவுள்ள மகாவம்சப் பகுதிகளில் 1978 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியின் நிகழ்வுகள் உள்ளடக்கப்படவுள்ளதாகவும், இதில் முக்கியமாக விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டது பற்றிய வரலாற்றுக் குறிப்புகளே இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்துக்கு தலைமையேற்று விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து 30 ஆண்டுகாலப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததில் சரத் பொன்சேகா முக்கிய பங்கு வகித்திருந்தார்.

நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து முன்னாள் இராணுவத் தளபதிகள் வரிசையில் இருந்து நீக்கப்பட்ட சரத் பொன்சேகா பற்றிய குறிப்புகள் இலங்கை இராணுவ வரலாற்று நூலில் இருந்தும் நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ச)

# அரசின் கருத்தை முஸ்லிம் காங்கிரஸ் ஆராய்வு

கொழும்பு,டிசெ.26

வடக்கு, கிழக்கு இணைப்பு மற்றும் அந்த மாகாணத்துக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது ஆகிய அரசின் அறிவித்தல்கள் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆராயவுள்ளது என்று காங்கிரஸின் உதவிச் செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு இணைப்பு மற்றும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாமல் இனப் பிரச்சினை தீர்வுக்காக நாடாளுமன்ற தெரிவுக் குழுவை செயற்படுத்துவதில் அர்த்தமில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)

# ஜனநாயகத்தை ஏற்படுத்தப் போராடுவேன்

கொழும்பு,டிசெ.26

ஐக்கிய தேசியக்கட்சியில் ஜனநாயகத்தை ஏற்படுத்த தாம் தொடர்ந்தும் போராடவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மல்வத்து பீட மகாநாயக்க திப்பட்டுவே சுமங்களதேரர் மற்றும் அஸ்கிரிய பீட அத்த தஸ்தி தேரர் ஆகியோரை நேற்று முன்தினம் சந்தித்து ஆசி பெற்றபின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

சிறிகொத்த மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் தமது தரப்பும் பக்கச்சார்பற்ற விசாரணை நடைபெற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் இடம்பெற்ற போது வெளி நபர்கள் சிறிகொத்த கட்சி அலுவலகப் பகுதியில் இருந்ததாகத் தகவல் கிடைத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)



இராணுவ வீரர்களுக்காக கட்டப்பட்ட 29 வீடுகளை கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை களுத்துறையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு வீடுகளைக் கையளித்தார்.

# மாலைதீவு ஜனாதிபதி இலங்கை வருகை

கொழும்பு,டிசெ.26

உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு மாலைத்தீவு ஜனாதிபதி மொஹமட் நசீட் இன்று இலங்கை வரவுள்ளார்.

இராணுவப் பயிற்சி அதிகாரிகளின் பிரியாவிடை நிகழ்வொன்றில் கலந்துகொள்ளவென அவர் இலங்கை வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

(ச)

# ரணிலின் வாகனம் மீது தாக்குதல்; ஐந்து மில்லியன் ரூபா நட்டம்

கொழும்பு,டிசெ.26

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் குண்டு துளைக்காத காரின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது 5 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக அந் தக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் முக்கிய பதவிகளுக்கான தேர்தல் அண்மையில் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம் பெற்றது.

இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இதனையடுத்து அவருக்கு எதிராக கட்சியில் செயற்படுவோர், கட்சியின் தலைமையகம் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் ரணிலின் குண்டுத்துளைக்காத காருக்கு சேதம் ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் காரின் சேதமடைந்த பகுதிகளை திருத்த வேண்டுமாயின் அவற்றை ஜேர்மனியில் இருந்தே இறக்குமதி செய்ய வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து சம்பவத்தை விசாரணை செய்ய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு, சம்பவத்தின் போது எடுக்கப்பட்ட வீடியோ காட்சிகளைக்கொண்டு, விசாரணை அறிக்கையை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அளிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# ஆபத்தான நிதிக் கட்டமைப்பில் இலங்கை

## பிட்ச் ரேடிங் நிறுவனம் தகவல்

கொழும்பு,டிசெ.26

ஆபத்தான நிதிச் சந்தைக் கட்டமைப்பைக் கொண்ட நாடுகளின் வரிசையில் இலங்கையின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உலகின் முதனிலை கடன் மதிப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான பிட்ச் ரேடிங் நிறுவனத்தின் புதிய அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன் அதிகரிப்பினால் சொத்துக்களின் விலைகள் உயர்வடைந்து செல்வதாகவும் இதனால் உலகின் ஆபத்தை எதிர்நோக்கிவரும் நிதிக் கட்டமைப்புக்களில் ஒன்றாக இலங்கை காணப்படுகின்றது.

ஆசிய பசுபிக் பிராந்திய வலய நாடுகளின் வங்கிகளில் வழங்கப்படும் கடன்களின் அடிப்படையில் பிட்ச் ரேடிங் நிறுவனம் ஆய்வு நடத்தியுள்ளது. இதேவேளை,பிட்ச் ரேடிங்கின் அறிக்கை பிழையா னது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆணையாளர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். (ச)

# கிறிஸ்மஸ் பண்டிகைக்கால வீதி விபத்துக்கள் அதிகம்

கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாட்ட நேரமான நேற்றுமுன் தினம் நள்ளிரவு தொடக்கம் நேற்று காலை வரை பல்வேறு விபத்துக்களில் காயமடைந்த 262 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கென வந்துள்ளனர்.

இவற்றில் 109 வீதி விபத்துக்கள் அடங்குவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு பணிப்பாளர் பிரசாத் ஆரியவங்ச தெரிவித்துள்ளார். கடந்த கிறிஸ்மஸ் பண்டிகையுடன் ஒப்பிடுகையில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை 13 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (ச)

# உலக வங்கி கேட்டாலும் அரச ஊழியர் எண்ணிக்கையை குறைக்க அரசு தயாரில்லை

## பிரதமர் ஜயரத்ன தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.26

இலங்கை அரச ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு உலக வங்கி வேண்டுகோள் விடுத்தபோதும், அதனைச் செய்வதற்கு அரசு தயார் இல்லை என்று பிரதமர் டீ.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

கண்டி, மலையக கலை, கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்டி மாவட்ட ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:

இலங்கையில் 12 லட்சம் அரச ஊழியர்களும், ஆறு லட்சம் ஓய்வூதியம் பெறுபவர்களும் அரச கொடுப்பனவுப் பட்டியலில் உள்ளனர்.



இது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு பெரும் சுமை என்றும் அதனை எட்டில் ஒன்றாகக் குறைக்க வேண்டும் என்றும் உலக வங்கி உட்படப் பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றன.

இருப்பினும் ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையில் அரச ஊழியர்களுக்குக் கூடிய அந்தஸ்து வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. அதற்கு அமைய ஒருபோதும் ஆள்குறைப்புச் செய்ய நாம் தயார் இல்லை. மாறாக அரச ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவே நடவடிக்கை எடுப்போம்.

2015ஆம் ஆண்டாகும் போது இலங்கையில் ஒருவரது வருடாந்த வருமானம் நான்கு லட்சம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே எமது உழைக்கும் படையில் 18 லட்சம் பேரை நாம் இழக்கத் தயாரில்லை.

அதேநேரம் ஒருவர் ஓய்வூதிய வயதை அடைந்துவிட்டார் என்பதற்காக அவரது ஆற்றல் அனைத்தும் குறைந்து விடுவதில்லை. எமது நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களது பங்களிப்பையும் பயன்படுத்த முடியும் என்றும் கூறினார்.

(ஒ)

# போலி வீசா ஆவணங்களைத் தயாரித்த கும்பல் கைதானது

வெளிநாட்டு வீசா பெற்றுக் கொள்வதற்காக போலி ஆவணங்களைத் தயாரித்த கும்பல் ஒன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஒருவருடமாக இந்த போலி ஆவணத் தயாரிப்பு நடவடிக்கை இடம்பெற்று வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கு வீசா பெற்றுக்கொள்ளத் தேவை யான அரச ஆவணங்கள் இவ்வாறு மோடியாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

வீசா பெற்றுக் கொள்வதற்காக போலி ஆவணங்களைக் கோரும் நபர் ஒருவரிடமிருந்து ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அறவீடு செய்யப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடமிருந்து, பல்வேறு முக்கிய அரச நிறுவனங்களின் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரைகள் மற்றும் ஏனைய முக்கிய ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி பலர் ஏற்கனவே வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்களே அதிகளவில் இவ்வாறு போலி ஆவணங்களைத் தயாரித்து அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

வெளிநாட்டு தூதரக மொன்றின் அதிகாரிகள் புலனாய்வுப் பிரிவினருக்கு செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் மற்றும் கடவுச்சீட்டு என்று பல்வேறு ஆவணங்கள் போலியாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தரகராகச் செயற்பட்ட நபரையும், பிரதான சந்தேக நபரையும் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

# வடக்கு, கிழக்கு திணைக்களங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சிங்களமொழி அவசியம்

## வடமாகாண பிரதேச செயலர் கருத்து



யாழ்ப்பாணம், டிசெ.26

வடக்கு கிழக்கில் அரச திணைக்களங்களில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் சிங்களமொழி அவசியமாகிறது. மொழிகளில் வேறுபாடின்றி சிங்கள மொழியையும் தாய்மொழி போல் கற்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண பிரதேச செயலாளர் திருமதி விஜயலட்சுமி.

முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தின் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்களுக்கு சிங்கள மொழியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் சிங்கள மொழிப் பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்வு யாழ். பண்ணை காசநோய் வைத்திய சாலைமண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எதிர்வரும் காலங்களில் அரச திணைக்களங்களில் பணிபுரிவதற்கு சிங்களமொழி அவசியமாகிறது. மொழிப்பரீட்சை சித்தியடைந்தால் மட்டுமே அரச திணைக்களங்களில் பணிபுரிய முடியும்.

தற்போது இந்தப் பயிற்சி ஆரம்பநெறி மட்டுமே. ஒவ்வொருவரும் மொழித்திறன், ஆளுமை, திறமை என்பவற்றை தன்னகத்தே வளர்த்துக் கொள்ள வேண்டும். என்றார் அவர்.

மேற்படி பயிற்சி நெறியானது கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் இடம்பெற்று நேற்றுமுன்தினத்துடன் நிறைவடைந்தது.

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற சிங்கள மொழிக் கற்கை நெறியில் யாழ். மாவட்டத்தில் உள்ள 76 அரச ஊழியர்கள் கலந்து கொண்டனர். மொழிப் பயிற்சியின் இறுதி நாள் நிகழ்வில் சிங்கள மொழியில் கலை நிகழ்வுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின்பணிப்பாளர் எஸ்.கிருஸ்ணன், தேசிய மொழிக் கல்வி மற்றும். பயிற்சி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரசாந் ஆர்.கேரந் ஆகியோரும் , வளவாளர்களாக சிங்கள மொழி விரிவுரையாளர் கரிமாஜெயசீர, சுனில் ஆரியரட்ண இந்திக விஜயசிங்க, அனுஷா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள அரச ஊழியர்களுக்கு ஏப்ரல் மாதத்தில் மொழிப் பயிற்சிகள் இடம் பெறவுள்ளன. (வ-311)

# போதைப்பொருள் கடத்த முயன்ற பாகிஸ்தான் பிரஜை கைது

போதைப் பொருளைப் கடத்த முயன்ற பாகிஸ்தான் பிரஜை ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாகிஸ்தான் பிரஜை ஹெரோயின் போதைப் பொருளை நூதனமான முறையில் சிறிய பொதிகளாக உருவாக்கி அவற்றை விழுங்கியிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரான பாகிஸ் தான் பிரஜை நீர்கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் போதைப் பொருள் அடங்கிய பொதிகள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரிடமிருந்து 861 கிராம் எடையுடைய சுமார் 120 பொதிகளை குறித்த நபர் விழுங்கியிருந்ததாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயிற்றுக்குள் பெரியளவு தொகை போதைப் பொருள்கள் மீட்கப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இது கருதப்படுகின்றது. (வ)

# தோத்திரப்பாடல் ஒலிப்பேழை வெளியிடப்பட்டது

சுன்னாகம், டிசெ.26

தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான சைவசமயப் பாட நூலில் இடம்பெறும் தோத் திரப் பாடல்கள் பண்ணுடன் பாடி ஒலிப்பேழையாக வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் இந்து மன்றத்தின் ஆதரவுடன் விரிவுரையாளர் த.கோபால கிருஷ்ணன் இதனைவெளியிட்டுள்ளார்.

ஐம்பத்தொரு பாடல்களை உள்ளடக்கிய இந்த ஒலிப் பேழையின் வெளியீட்டு நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் யோக மண்டபத்தில் இ.குபேந்திரன் தலைமையில் இடம் பெற்றது. ஒலிப் பேழைக்கான வெளியீட்டுரையை விரிவுரையாளர் ச.லலீசன் ஆற்றினார். ஒலிப் பேழையின் முதற் பிரதியை விரிவுரையாளர் த.கோபாலகிருஷ்ணன் வெளியிட்டு வைக்க கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை பெற்றுக்கொண்டார். தோத்திரப் பாடல்களை பண்ணுடன் பாடும் திறனை மேம்படுத்தும் நோக்குடன் இந்த ஒலிப் பேழை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(வ-38)

# தும்பு உற்பத்தி கழிவுப்பொருள் விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ். கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் உள்ள அல்லாரை தும்புத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் தும்பு உற்பத்திப் பொருள்களின் கழிவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆர்வமுடையவர்கள் அல்லாரை தும்புத் தொழில் கூட்டுறவுச் சங்கத்துடனோ அல்லது கைத்தொழில் அதிகார சபையின் யாழ். மாவட்ட காரியாலயத்துடனோ தொடர்பு கொண்டு பெற் றுக் கொள்ளலாம் என கூறப் பட்டுள்ளது. (வ-313)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## நெஞ்சைவிட்டகலா நினைவலைகள்



அன்னை மடியில்: 1950.07.10

ஆண்டவன் அரவணைப்பில்: 2006.07.03

அமரர் சின்னத்தம்பி இராசேந்திரன்



அன்னை மடியில் முத்தாக: 1983.07.20

சுனாமிஅழிவின் விதையாக: 2004.12.26

அமரர் இராசேந்திரன் நிசாந்தன்

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
ஆயிரம் ஆயிரமாய் தாரகைகள்
வானில் தோன்றி மறைந்தாலும்
அவனியிலே நீவீர் எம்முடன்
வாழ்ந்த அந்தப் பசுமையான நினைவுகள்
என்றென்றும் மாறாது...
அணையாத் தீபமாய் இப்பூவுலகில்
இறுதிவரை வாழும்...

'விக்ன பவனம்'
காளி கோயிலடி, மல்லாகம்.

உங்கள் பிரிவுத் துயரால் வாடும்:
குடும்பத்தினர்

## 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15.04.1936
உதிர்வு: 26.12.1990

அமரர் நாகலிங்கம் குமாரமூர்த்தி

(நில அளவையாளர், மண்டைதீவு)

அன்பினால் வாழ வைத்த
பண்பியலாளனே - எமை
பண்பாய் வழி நடத்திய - கோமானே
என்றுதான் - எமைக்காண இனிவருவீர்!

104, காரைநகர் வீதி,
தொல்புரம், சுழிபுரம்.

மனைவி, மகன், மருமகள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நடராசா சிவபாக்கியம்

மலர்வு: 15.08.1941
உதிர்வு: 06.01.2011

குடும்பத்தின் ஒளி விளக்காய்
திகழ்ந்து அன்புடனும் பண்புடனும்
பாசத்துடனும் எம்மையெல்லாம்
இவ் வையகத்துள் வாழ வழிநடத்தி
இன்று வையகம் உறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்பத்தின் குத்து விளக்கே
உங்கள் பாதக் கமலங்களில்
இந்த மலரினை ஓராண்டு நினைவாக
நினைவு கூருகின்றோம்

மகன் (ஸ்ரீதரன், கனடா)
மகள் (இராசலட்சுமி),
பேரப்பிள்ளைகள்

சென் .அந்தனீஸ் வீதி,
பண்டத்தரிப்பு.

நத்தார் புதுவருட பரிசில்களுக்கு......

★ சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
★ நவீன டிசைன், ரெடிமேட் ஆடைகள்
★ நவநாகரிக நங்கையர்களுக்கேற்ற சல்வார், சுடிதார், ஸ்கேட் அன் பிளவுஸ் மற்றும் ஆடைகளுக்கும்
★ ஆடவர்களுக்கான சிறுவர்களுக்கான அனைத்து ஆடைத் தெரிவுகளுக்கும்

15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
30 ஆயிரம் ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒருவருட உத்தரவாதத்துடன் அழகிய கைத் தொலைபேசி ஒன்று வழங்கப்படும். (இச்சலுகை 21.12.2011 முதல் 31.12.2011 வரை மட்டுமே)

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்
MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR
No.10,11,POWER HOUSE RD.
GRAND BAZAAR, JAFFNA
(மலாயன் கபே முன்பாக)
T.P: 021 222 9399

# ரஷ்யாவின் நாடாளுமன்றத் தேர்தலில் முறைகேடுகளை எதிர்த்துப் பேரணி

மாஸ்கோ, டிசெ.26

ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் அண்மையில் நடந்து முடிந்த நாடாளு மன்றத் தேர்தலில் நடைபெற்ற முறைகேடுகளை எதிர்த்து நேற்று முன்தினம் பிரமாண்ட பேரணி இடம்பெற்றது.



ரஷ்யாவில் கடந்த 4 ஆம் திகதி நாடா ளுமன்றத் தேர்தல் நடந்தது. அதில் பிரதமர் விளாடிமிர் புடினின் ஆளும் கட்சி பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டது என்று குற்றம் சுமத்தப்பட்டது.

இதேவேளைஜனாதிபதி டிமிட்ரி மெட் வடேவ் முறைகேடுகள் குறித்து விசா ரணை நடத்தப்படும் என்றும், அரசியலில் சீர்திருத்தங்கள் செய்யப் படும் என்றும் அறிவித்தார். ஆனால் மக்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மறுதேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ள னர். இதனால் கடந்த வாரங்களில் எதிர்க் கட்சிகள் பல்வேறு பேரணிகளை நடத்தின.

இந்தநிலையில் நேற்றுமுன் தினம் இதுவரை ரஷ்யா எதிர் பாராத அளவுக்கு தலைநகர் மாஸ்கோவில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு பிரமாண்டமான பேரணி நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை வகித்த எழுத்தாளரும், சமூக ஆர்வலருமான அலக்சி நவான்லி பேசியதாவது:

ரஷ்யா இனியும் ஊழலைப் பொறுத்துக் கொள்ளாது. இந்தக் கூட்டம் நாடாளு மன்றத்தைக் கைப்பற்ற போதுமானது தான். ஆனால் நாம் அமைதியான முறை யில் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். நாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள விளாடிவோஸ் டோக் உட் பட பல்வேறு நகரங்களில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நேற்று முன் தினம் நடந்தன. (வ)

# கியூபாவின் சிறைக் கைதிகள் 3,000 பேருக்கு பொது மன்னிப்பு

## அந்தநாட்டு ஜனாதிபதி அறிவிப்பு

கியூபாவில் மனிதாபிமான அடிப் படையில் மூவாயிரம் சிறைக்கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்று அந்தநாட்டு ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோ அறிவித்துள்ளார்

கியூபா நாடாளுமன்றத்தின் இரண்டா வது கூட்டத் தொடரின் முடிவில் பேசிய ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோ கூறியதாவது:

கத்தோலிக்க சர்ச், பல்வேறு பிராட்டஸ்டண்ட் சர்ச்சுகள் ஆகியவற்றின் கோரிக்கைகளின் அடிப் படையிலும், அடுத்தாண்டில் முதன் முறையாக போப் கியூபாவுக்கு வருவதை முன்னிட்டும் மூவாயிரம் கைதிகள் விடுவிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த 1998ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அப்போதைய போப் ஜான்பால் கியூபாவுக்கு பயணம் மேற்கொண்டதை ஒட்டி 299 சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

தற்போது மிகப் பெரிய எண்ணிக்கையில் கைதிகள் விடுவிக்கப்பட உள்ளனர்.

இவர்களில் 25 நாடுகளைச் சேர்ந்த 86 கைதிகளும் அடங்குவர். ஆனால் 2009 ஆம் ஆண்டு டிசெம்பரில் கைதான அமெரிக்க வெளிவிவகார அமைச்சகத்தின் ஒப்பந்ததாரர் ஆலன் கிராஸ் என்பவரை விடுதலைப் பட்டியலில் ஜனாதிபதி சேர்க்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடை விதிக்கும் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் ரவுல் காஸ்ட்ரோ தெரிவித்துள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டில் பிடல் காஸ்ட் ரோவிடம் இருந்து ஜனாதிபதி பதவியை பெற்றபோது இந்த திருத்தங்களைக் கொண்டு வருவதாக உறுதியளித்த ரவுல் இதுவரை கொண்டு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# பாகிஸ்தான் எல்லைகளில் தாக்குதல் நிறுத்தி வைப்பு

## அமெரிக்கா அறிவிப்பு

வோஷிங்டன், டிசெ.26

பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் பதுங்கி யிருக்கும் தீவிரவாதிகள் மீது ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தப்படுவது நிறுத்தி வைக்கப்பட் டுள்ளதாக அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ. தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் அமெரிக்க கூட்டுப் படையினர் நடத்திய வான்வெளித் தாக்கு தலில் 24 பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப் பட்டனர். இதற்கு பாகிஸ்தான் அரசு கடும் ஆட்சேபம் தெரிவித்தது.

இதனால் இரு நாடுகளிடையே சுமுக உறவு பாதிக்கப் பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் பழங் குடியினப் பகுதிகளில் தலிபான் தீவிரவாதிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதாக சி.ஐ.ஏ. தெரிவித்துள்ளது. (வ)

**நீங்கா நினைவுகளுடன் ஏழாண்டுகள்**

மண்ணில்
09 ✱ 06 ✱ 1975





மண்ணில்
26 ✱ 01 ✱ 2004

திருமதி செல்வந்தா டிலானி ஜெயறஞ்சினி

அருட்செல்வம் ஆகாஷ் செல்வந்தா

விண்ணில்- 26.12.2004

" உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
மரித்தாலும் வாழ்வான்"

நல்லூர், யாழ்ப்பாணம். (12044)

என்றும் உங்கள் நினைவுடன்:
தாய், சகோதரர்கள்.

**தென்மராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)**

**பானை முறையிலான வடிகலன் தொகுதியை திருத்தம் செய்தல்**

எமது வரணி வடிசாலையில் உள்ள பானை முறையிலான வடிகலன் தொகுதியை முழுமையாகத் தொழிற்படுத்துவதற்காக இந்தத் துறை சார்ந்த தொழில்நுட்பவியலாளர் மூலம் அதனை திருத்தம் செய்ய உள்ளோம். செய்ய வேண்டிய திருத்தத்தைப் பரீட்சித்து திருத்தத்துக்கான உத்தேச செலவு மதிப்பீட்டைக் குறிப்பிட்டு தலைவர், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் கொத் தணி, வரணி என்ற முகவரிக்கு 10.01.2012 ஆம் திகதிக்கு முன்னர் மூடி ஒட்டிய நிலையில் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கூறுவிலை அனைத்தும் எமது நெறியாளர் குழுவுக்குச் சமர்ப்பித்து இறுதி முடிவு அவர்களால் மேற்கொள்ளப்பட்டுத் தங்களுக்கு அறிவிக்கப்படும்.

- தலைவர்

**கண்ணீர் அஞ்சலி**



எமது கழக அங்கத்தவரான
Dr. ந.அரவிந்தன் அவர்களின்
அன்புத் தாய்
**திருமதி பரமேஸ்வரி நல்லதம்பி**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.

வளர்மதி முன்னேற்றக் கழகமும்
வளர்மதி நிறைவாழ்வகமும்.

**31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்**



அமரர்
**சின்னையா சிவராஜா**

தாயின் மடியில்
18.08.1958

ஆண்டவன் அரவணைப்பில்
26.11.2011

கடந்த 26.11.2011 இல் காலமான சுவிற்சர்லாந்து லிஸ் பேர்ன் (Lyss Bern) நகரை வசிப்பிடமாகக் கொண்ட சின்னையா சிவராஜா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு ஓடி வந்து ஆறுதல் கூறிய நல்ல உள்ளம் கொண்டவர்களுக்கும் தொலைபேசி , தொலைநகல் மூலம் ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமத்தில் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டு விநியோகித்தவர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.

பிரிவால் துயருறும்
அக்கா, அத்தான், அண்ணா,
மைத்துனி, மருமக்கள்,
பேரமக்கள்.

# ராணுவ ரகசியக் குறியீடுகளை மாற்றியமைத்தது வடகொரியா

## திணறுகிறது தென்கொரியா

வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் இல்லின் மரணத்துக்குப் பின் தென் கொரியா உளவு பார்த்து வருவதால், அதைத் தடுக்கும் வகையில் தகவல் பரிமாற்றங்களில் ரகசியக் குறியீடுகளை வடகொரியா மாற்றியுள்ளது.

வடகொரியத் தலைவர் கிம் ஜாங் இல் மறைந்த பின் அந்தநாட்டில் நடக்கும் அரசியல் மாற்றங்கள் குறித்து அறிந்து கொள்ள தென் கொரியா அதிக ஆர்வம் காட்டி வருகிறது.

இதனால் தென் கொரிய உளவுத்துறை முடுக்கி விடப்பட்டுள்ளது. கிம் ஜாங் இல் மரணம் அடைந்த செய்தி கூட உடனடியாக வெளியுலகுக்குத் தெரிந்து விடாதவாறு வட கொரியாவின் உளவுத்துறை செயற்பட்டதைக் கண்டு தென் கொரியா அதிர்ச்சியில் உறைந் திருந்தது. அதன் பின் தான் தென் கொரிய உளவுத்துறை, வடகொரியாவை உளவு பார்ப்பதில் அதிக வேகம் காட்டி வருகிறது.

மேலும், கிம் ஜாங் இல் இறந்த உடன் பல்வேறு இடங்களில் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்த ராணுவத்தினரை உடனடியாக பயிற்சிகளைக் கைவிட்டு தமது தளங்களுக்குத் திரும் பும்படி புதிய தலைவர் கிம் ஜாங் உன் முதன் முதலாக உத்தரவு பிறப்பித்ததாக தென் கொரிய ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டிருந்தன.

இந்த உத்தரவு ரகசியக் குறியீடுகளாக கம்பியில்லாத் தந்திகள் மூலம் ராணுவத்தினருக்கு அனுப்பப்பட்டிருந்தது. இந்தக் குறியீடுகளை தென் கொரிய இராணுவம் கண்டுபிடித்து தகவலை அறிந்து கொண்ட பின் தான் தென் கொரிய ஊடகங்களில் கிம் ஜாங் உன்னின் முதல் உத்தரவு பற்றிய தகவல்கள் வெளி வந்தன.

இதையடுத்து தற்போது வட கொரியா தனது உளவு மற்றும் ராணுவத் தகவல்களுக்கான ரகசியக் குறியீடுகளை மாற்றி அமைத்துள்ளது. இதனால் தென் கொரியா உளவு பார்ப்பதில் மேலும் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.(வ)

# பெண்களை இழிவுபடுத்தும் சொற்பதங்கள், பழமொழிகள்

■ உமா



எம்மையறியாமல் நாளாந்தம் நாம் பல பழமொழிகள்,சொற்றொடர்களை உபயோகிக்கின்றோம். அவற்றின் கருத்துக்கள், நோக்கங்கள், அவை ஏன் உருவாக் கப்பட்டவை என்பவற்றை நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை. நாம் அவ்வாறு பிரயோகிக்கும் பல பழமொழி களை,சொற்பதங்களைக் கூர்ந்து கவனித் தோமானால், அதில் எத்தனை பெண்களை இழிவுபடுத்தும் முகமாக அமைந்திருக்கின்றன. இவை எவ்வித ஆட்சேபனையுமின்றி பல நூற்றாண்டுகளாக வழக்கிலுள்ளன.
எமது சமூகம் பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென வரையறைகளை வகுத் துள்ளதென்பதை நாம் அன்றாடம் உபயோகிக்கும் சொற் பதங்கள் காட்டி நிற்கின்றன. பெண் என்றால் அடக்கமாக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அடங்கா பிடாரி, அடக்கமில்லாதவள்,ஆட்டக்காரி என்னும் வசைமொழிகளை அவள் சந்திக்க நேரிடுகிறாள். சமூகத்தில் பலருடன் - குறிப்பாக ஆண்களோடு-சகசமாகப் பழகினால் நடத்தை கெட்டவள், தேவடியாள் என அழைக்கப்படுகிறாள். இந்தச் சொற்பதங்கள் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு,சாதாரணமாக நாளாந்த வாழ்வில் பாவனையிலுள்ளன. இவை தம்மை இழிவுபடுத்தும் சொற்கள் என்பது புரிந்தும் பெண்களும் இவற்றை தொடர்ந்தும் பயன்படுத்துகின்றனர்.
பெண் என்பவள் இளம் வயதிலேயே மணம்முடித்து தாய்மையடைய வேண்டுமென்பதே சமூகத்தின் எதிர்பார்ப்பு. திருமணமாகாத பெண்களை அது வீட்டில முத்துது என சொல்வதைக் கேட்டிருக்கின்றோம். ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் இல்லாத பட்சத்தில் பெண்களே நிந்தனைக்குள்ளாகிறார்கள். இக் காரணத்தினால் அவள் அடிவாங்கும் சந்தர்ப்பங்களும்,உறவினர்களின் வசைமொழிகளுக்கு ஆளாகும் சந்தர்ப்பங்களும் ஏராளம். எல்லாவற்றிற்கும் மேலாக மலடி என பட்டம் சூட்டப்பட்டு சமூக ரீதியானதும் மதரீதியானதுமான வைபவங்களின் போது அவளின் பங்களிப்பு நிராகரிக்கப்படுகின்றது. சிறுவயதிலிருந்து இந்தச் சமூகத்தில் ஊறி வளர்ந்த பெண்களுக்கு இந்தச் செயல்கள் வேதனையைத் தருகின்றன. பழமை வாய்ந்ததும்,மொழியின் உயிர்நாடியெனவும் கருதப்படும் பழமொழிகள் சிலவற்றைப் பார்ப்போம். ஒரு பெண் எவ்வாறு இருத்தல் வேண்டுமென தமிழ்ப் பெரும் சமூகம் எதிர்பார்க்கின்றதோ அந்தக் கருத்துக்களை அப்படியே எமது பழமொழிகள் கூறிநிற்கின்றன. பெண்ணின் அணிகலன்களாக நோக்கப்படும் அச்சம்,மடம்,நாணம்,பயிர்ப்பு என்பவற்றில் நாணத்தை வலியுறுத்தும் சில பழமொழிகள்.
நாணம் இல்லாத சிறுக்கிக்கு நாலுதிக்கும் வாசற்படி நாணம் இல்லாத பெண் நகைப்புக்கு இடம் வைப்பாள் நாணமில்லாக் கூத்தியாளுக்கு நாலுதிக்கும் வாசல் பெண்டிற்கு அழகு நாணம்
இதுபோலவே அடக்கமும் பெண்கள் மேல் திணிக்கப்படுகின்றது. பெண்கள் என்றால் அடக்கமாக இருத்தல் வேண்டும். பெண்கள் அதிகம் கதைத்தல் கூடாது,வெளியில் செல்லக் கூடாது, சிரிக்கக் கூடாது,சொல்வதைக் கேட்கவேண்டும்,திரும்பிக் கதைக்கக்கூடாது. இந்தக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருப்பின்,அவள் அடக்கமான பெண்.
ஒரு பெண்குழந்தை சுறுசுறுப்பாக இருந்தால்-உதாரணமாக மரத்தில் ஏறினால்,காலைத்தூக்கி மேலே வைத்தால்- நீ என்ன ஆம்பிளைப் பிள்ளையோ? என அதட்டப் படுகிறாள்.
அத்தகைய சந்தர்ப்பங்களில் பழமொழிகள் பெரும்பாலும் பிரயோகிக்கப்படுகின்றன.
அடக்கத்துக்குப் பெண்ணுக்கு அழகேன்? அடக்கமே பெண்ணுக்கு அழகு
அடக்கமற்ற பெண் அவிந்துபோன கண் பொம்பிளை சிரிச்சாப் போச்சு புகையிலை விரிச்சால்
போச்சு நன் மாட்டிற்கு ஓர் அடி நற்பெண்டிருக்கு ஒரு
வார்த்தை உதறுகாலி வந்தாள் உள்ளதும் கெடுத்தாள்
அண்டாதபிடாரி யாருக்கு அடங்குவாள்?

[வளரும்]

# எனக்கதை சொல்லிவிடு......

குங்குமத் திலகம் வைத்து
மங்கலப் பொருளும் வைத்து
முற்றத்தில் கேலமிட்டு
முழு நிலவாக மிளிர்ந்தார்
அம்மா காதினில்
பூவும் வைத்து
சங்கிலி கழுத்தில் மின்ன
சால்வையும் தோளிலிட்டு
சபை கலக்க வருவோரை
வரவற்கக் காத்திருந்தார்
வரன் வீட்டார் மனம் மகிழ
அறுசுவை உணவுமாக்கி
அலங்காரப் பொருளும்
வைத்து அன்புடன்
அழைத்து என்னை
மஞ்சளில் நீருமாட்டி
கொஞ்சிடும் கிளியுமாக்கி
குதூகலித்து மகிழ்ந்திருந்தார்
கனடாவில் குடியிருப்போர்
கைபேசியில் வருவரென்ற
கனவுடனே காத்திருக்க
ஆட்டோவில் வந்திறங்கி
அண்ணாமலைத் தரகரும்
வாட்டமுடன் வந்தார்
வந்தவர் வாய்திறந்து
சீதனம் திருப்தி என்றார்
குலத்தாலும் குணத்தாலும்
குறைவில்லை
நிறத்தில் குறை கண்டார்
எனக்கூறி அடுத்த வரன்
பார்ப்பதற்கு.
கால கண்ட ஐயராகி
கை நீட்டிப் பல்லிளித்தார்
நான் ஏது செய்வேன்
என்ன குறை கண்டார்
எனக்கதை சொல்லிடுவீர்.

நடராசா சந்திரலிங்கம்,
அச்சுவேலி வடக்கு.



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
“திலகம்”,
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# இது கதையல்ல 3

■ யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

என் மகள் என்னிடமிருந்து ஏதோவொரு விடயத்தை மறைக்க விரும்புகிறாள் என்பது எனக்குத் தெளிவாகி விட்டாலும் அதை உடனடியாகப் போட்டு உடைப்பது உசிதமானது அல்ல. அவள் சின்னவள். உலகத்தில் அடிபட்ட அனுபவம் அற்றவள். ஆனாலும் தான் வளர்ந்துவிட்டதாகவும் தனக்குப் பல விடயங்கள் தெரியும் எனவும் கருதும் பருவம். நான் மனோதத்துவம் படித்ததில்லை. ஆனாலும் என் மகளைக் கையாளப் பொறுமை அவசியம் என்பதை உணர்கிறேன். என் மனம் கோபத்தில் கொதித்துக்கொண்டிருக்கிறது. உறக்கம் முழுமையாக விடைபெற்றுவிட்டது. ஆனாலும் நிதானமாகச் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவென்பதையும் என் அறிவு உணர்த்தியதால் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு சிந்திக்கிறேன்.
தன் வாழ்க்கையை,குடும்பத்தின் சுமுக நிலைமையை,பெற்றோரின் உடல் நலனை என்று எத்தனையோ விடயங்களைக் கெடுக்கும் காரியத்தைத் தான் செய்துகொண்டிருப்பது விளங்காமல் என் மகள் இப்படிச் செய்கிறாளே. என் வீட்டுக்கு நான்கைந்து வீடுகளுக்கு அப்பால் இருக்கும் சுசீலாவின் மகள் வித்தியா பெற்றோரை எதிர்த்துக் கொண்டு தான் விரும்பியவரை பதிவுத் திருமணம் செய்து கொண்டாள். இப்போது அவனுடன் சேர்ந்துவாழ முடியாது என வந்து நிற்கிறாளாம். சுசீலாதான் வழியில் சந்தித்தபோது கூறிக் கவலைப்பட்டாள்.
வித்தியாவின் கதையை மகளிடம் கூறினால் என்ன? என்றோர் எண்ணம் என் மனதினுள் எட்டிப் பார்த்தது. அவளைப் பற்றிக் கூறியாவது இவளுக்கு அறிவு புகட்டலாம் என்றோர் எதிர்பார்ப்பு என்னுள் முளைவிட்டது. எழுந்து மகளிடம் சென்றேன் . அவள் படித்தாளோ பாவனை செய்தாளோ விரித்த புத்தகத்துக்கு எதிரே தான் உட்கார்ந்திருந்தாள். முன்பென்றால் அவள் படிக்கிறாள் என்று அகமகிழ்ந்து போயிருப்பேன் . அவள் கூறிய ஒரு பொய் இந்தத் தாய் மனதில் சந்தேகங்களையும் நம்பிக்கையீனத்தையும் விதைத்துவிட்டது.
இப்படி அவள் படிக்கும் வேளைகளில் சுடச்சுட கோப்பி தயாரித்துக் கொடுப்பது என் வழமை. அந்த எண்ணம் முந்திக் கொண்டு வந்தது.''விஜி... கோப்பி தரவா?''என்ற என் வினாவுக்கு விடையேதும் தராமல் அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மூளை வேறேதோ வேலைக்குப் போய்விட்டது போலும்.நான் சென்று கோப்பி தயாரிக்கத் தொடங்கினேன். பின்னே அரவம் கேட்டது. விஜிதாதான் வந்து நின்றாள்.''நான் போய் படுக்கப் போகிறேன்'' என்றாள்.''கோப்பி தயார்,குடித்துவிட்டுப் படன்''. ''நித்திரை வராதாம்''. ''அப்ப இருந்து படி''.''மூளைக்குள் ஏறாதாம்''. ''படிக்கிற நேரம் படிக்க வேண்டும் விஜி. வித்தியாவின்ரை கதை கேள்விப்பட்டனியே? சுசீலாவின் மகள் உன்னுடன் தானே படித்தவள். காதல் காதல் என்று படிப்பை விட்டுட்டு போய் கல்யாணம் செய்து இப்ப வீட்டில வந்து நிற்கிறாள்.



விஜிதாவின் முகத்தை அலசியபடியே கூறினேன்''. பிழை வித்தியாவிலையும் இருக்கலாந்தானே'' தயாராக இருந்தவள் போல் விஜி பதில் கூறினாள்.''நான் கூறுவது எதுவும் விஜிதாவுக்கு ஏறாது.
ஒரு பகீரதப் பிரயத்தனம் செய்தால் பலன் கிட்டலாம் ''. சிந்தித்தப்படியே நான் அதற்கு ஆயத்தமானேன்.
என் சிந்தனை நீண்டது.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும்

## ம.தொ.மு.செயலாளர் கோரிக்கை

நுவரெலியா, டிசெ. 26

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குரிய கௌரவமும், அந்தஸ்தும் உரியவகையில் வழங்கப்படவேண்டும் என்று மலையகத் தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் க.சுப்பிரமணியம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்தியாவிலிருந்து எமது முன்னோர்கள் கூலித் தொழிலாளர்களாக இலங்கைக்கு அழைத்துவரப்பட்டபோது அவர்களுக்கு எந்த விதமான மனித கௌரவமுமே வழங்கப்படவில்லை என்பது வேறுவிடயம். ஆனால், இப்போதும் அதே அவலநிலைதொடர்வதுதான் துர்ப்பாக்கியமானது.

ஒவ்வோர் உயிரினமும் தனக்கானசுயமரியாதையுடன்வாழவே நினைக்கும். நாம் வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகள் கூட நாம் அவைமீது அன்பு வைத்தால்தான் அவையும் எம்மீது அன்பைக்காட்டும்.

இதேபோல, பூச்செடிகள், தாவரங்கள் கூட நாம் பராமரிப்பு தற்கேற்ப எமக்குப் பலன்களையும், மகிழ்ச்சியையும் தருகின்றன. ஆனால், தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரமே சமூக அந்தஸ்துமில்லாமல் தனிமனித மரியாதையும் வழங்கப்படாமல், சடப் பொருளாகவே கணிக்கப்படுகின்றார்கள்.

நிர்வாகங்களும் இவர்களைக் கௌரவிப்பதில்லை. கம்பனிகள் இவர்களை மனிதப் பிறவிகளாகவே கணிக்காததுபோல நடந்துகொள்கின்றன. இவர் களைக் காப்பாற்றுவதாகக் கூறும் தொழிற் சங்கங்களோ, இந்த மக்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படும்போதெல்லாம் ஏதாவது வழியில் தப்பித்துக்கொள்கின்றன.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் தொழிலாளர்கள் விழிபிதுங்கி நிற்கிறார்கள். தங்களது வாழ்வாதாரப் பிரச்சினையே கேள்விக்குறியாக இருக்கும்போது இவர்களால் தமது சமூக அந்தஸ்தைப் பற்றியோ தனிமனித மதிப்பு, மரியாதை பற்றியோ எவ்வாறு யோசிக்கமுடியும்?

ஆகவே, தற்போதைய இக்கட்டான நிலைமை ஒட்டுமொத்த சமூக வளர்ச்சியையே பாதித்துவிடுமென நாம் அஞ்சுகிறோம்- என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# இடியுடன் கூடிய மழை கிழக்கில் அதிகரிக்கும்

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

இலங்கையை அண்மித்த கடற்கரைப் பகுதிகளில் நிலவும் காலநிலை மாற்றத்தினால் கிழக்கின் கடற்கரைப் பகுதிகளில் பாதிப்புகள் ஏற்படக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

கிழக்கில் தற்போது நிலவும் இடியுடன் கூடிய மழை மேலும் அதிகரிக்குமென்றும், புயல்காற்று வீசும் சூழ்நிலை காணப்படுவதால் மீனவர்களைஅவதானமாக இருக்குமாறும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

# நத்தார் பண்டிகை ஆராதனையில் அதிகளவு மக்கள்

மட்டக்களப்பு, டிசெ. 26

மலர்ந்துள்ள நத்தார் பண்டிகையை மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர். திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேராலயத்தில் நடைபெற்ற ஆராதனைகளில் பெருமளவு கத்தோலிக்க மக்கள் பங்கு கொண்டனர்.

நேற்று நத்தாரையொட்டி மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் இணைப்பேராலயத்தில் அருட்தந்தை கே.இரட்ணகுமார் அடிகளாரால் நடத்தப்பட்ட விசேட ஆராதனையிலும் பெருமளவிலானோர் கலந்து கொண்டனர். (ச-21)



தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக கல்முனை, நாவிதன்வெளி பிரதேசங்களை இணைக்கும் கிட்டங்கி பாலத்துடனான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் மக்கள் சிரமங்களுக்கு மத்தியில் வீதியைக் கடந்து செல்கின்றனர்.

# அம்புலன்ஸில் எரிபொருள் பீப்பாய்கள்

நுவரெலியா, டிசெ. 26

ஹற்றன் நகர மத்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வட்டவளை பெருந்தோட்டக் கம்பனிக்கு உட்பட்ட ரொசலை விக்டன் தோட்ட அம்புலன்ஸில் பீப்பாய்கள் மூலம் டீசல் மற்றும் பெற்றோல் நிரப்பப்படுவதை அவதானித்தபோது பெரும் அதிர்ச்சிக்குள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நோயாளிகளை மிகவும் அவதானமாகவும், சுகாதாரத்துடனும் கொண்டு செல்லக்கூடிய அம்புலன்ஸினுள் இரண்டு பீப்பாய்கள் வைக்கப்பட்டு, அதனுள் எரிபொருள் நிலையத்தின் டீசல் நிரப்பு குழாய் மூலமாக டீசல் நிரப்பப்பட்டதை பாதசாரிகள் அவதானித்துள்ளனர். சிறிய கொள்கலன்களில் பெற்றோல் நிரப்பப்பட்டு அந்தக் கொள்கலன்களும் அம்புலன்ஸில் ஏற்றப்பட்டன.

டீசல் நிரப்பப்பட்ட மணத்துடன் அந்த அம்பிலன்ஸில் அவசரநோயாளிகளைக்கொண்டு செல்லவேண்டிய நிலைமை ஏற்படும்போது நோயாளிகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

பெருந்தோட்டக் கம்பனிக்கு உட்பட்ட தோட்டப் பகுதிகளின் சுகாதார நலனோம்பு விடயங்களைப் பொறுப்பெடுத்துள்ள பெருந்தோட்ட மனித வள நிறுவனத்தின் ஆலோசனைகள் தோட்ட நிர்வாகங்களினால் எவ்விதம் பின்பற்றப்படுகின்றன?

இவ்வாறான நடவடிக்கைகளால் தொழிலாளர்களின் நலன்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது குறித்து பொறுப்பு வாய்ந்த தரப்புக்கள் இந்த ஆதாரத்துடனான தகவலைக் கொண்டு உரிய நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (ச)

# மட்டக்களப்பில் கடல் கொந்தளிப்பு; படகு கவிழ்ந்து இரு மீனவர்கள் பலி

## கடலுக்குச் செல்வதைத் தடுக்க சிவப்பு நிறக் கொடி



மட்டக்களப்பு,டிசெ.26

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடல் கொந்தளிப்பு காணப்படுகின்றது.

இதன் காரணமாக நேற்று நண்பகல் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களின் படகு கவிழ்ந்து இரு மீனவர்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன் மற்றொரு மீனவர் உயிர் தப்பிக் கரைசேர்ந்துள்ளார் என்று மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டொமினகோ ஜோர்ஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு முகத்துவாரம் கடலில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் திராய்மடுவைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான அழகையா பாக்கியராசா (வயது-56) புன்னச்சோலையைச் சேர்ந்த தர்மலிங்கம் கரன் (வயது-39) ஆகியோரே நீரில் மூழ்கியுள்ளனர்.

இவர்களது சடலங்களைத் தேடும்பணிகள் இடம்பெறுகின்றன. மீனவர்களை கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று சிவப்பு நிற எச்சரிக்கைக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. (ச-21)

# சிறுபான்மை இன மக்கள் பிரதமராக வரமுடியாது

## கவலைக்குரிய விடயம் என்கிறார் உயர் கல்வி அமைச்சர்

கண்டி, டிசெ. 26

நூற்றுக்கு ஒரு சதவீதம் மட்டுமாக இருக்கின்ற சீக்கியர் ஒருவர் இந்தியாவில் பிரதமராக பதவி வகிக்க முடிந்தபோதும் சிறுபான்மை இனத்தவர் ஒருவர் இலங்கையின் பிரதமராக வர முடியாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்தார்.

கண்டி, மடவளை வை.எம்.எம்.ஏ. இயக்கத்தினர் மடவளை மதீனா தேசிய பாடசாலையில் ஒழுங்கு செய்த கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் எமது நாட்டை இன, மத பேதமற்ற நாடாக மாற்ற வேண்டும். ஆசியாவில் மிகவும் கூடிய கல்வித் தரத்தைக் கொண்ட ஒரு நாடாக்க முடிந்தது எமக்கு இது கடினமான விடயமல்ல.



இந்தியாவில் 274 மதங்கள் இருக்கின்றன. பிரதான மதங்கள் 72 இருக்கின்றன. இன்றும் இந்தியாவில் ஆட்சிபுரியும் கட்சியின் தலைவியாக இருப்பவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இந்தியாவின் பிரதமர் நாட்டின் ஒரு சதவீதம் மட்டும் இருக்கின்ற சீக்கிய இனத்தவர். ஆனால் இது எதுவும் இந்திய மக்களுக்கு பிரச்சினையல்ல.

ஆனாலும், இலங்கையில் சிங்களவர் அல்லாத ஒருவர் தலைமைத்துவத்திற்கு வர முடியுமா என்று கேட்டால் அது இயலாது என்றுதான் பதில் கூறவேண்டும். இது கவலைக்குரிய விடயமாகும்.

நாங்கள் பல்கலைக்கழகங்களை ஒரு போதும் இன,மத அடிப்படையில் பிரிக்கமாட்டோம். ஆனாலும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நூற்றுக்கு 90 சதவீதமான மாணவர்கள் முஸ்லிம்களாவர். மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் மூன்றில் ஒரு பங்கு முஸ்லிம் மாணவர்கள். நாட்டின் மற்றைய பல்கலைக்கழகங்களில் சன விகிதாசாரத்திற்கும் சமமாக அதிகமான முஸ்லிம் மாணவர்கள் இருக்கின்றார்கள்.

இன்று கூடுதலான அபிவிருத்தி நடப்பது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கே. நாட்டின் அபிவிருத்தி வேகம் எட்டு சதவீதம். வட கிழக்கில் அபிவிருத்தி வேகம் 24 சதவீதம்.

நாங்கள் வரலாற்றில் தவறிழைத்து விட்டோம். அந்தத் தவறை மீண்டும் செய்யக் கூடாது.-என்றார். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
ஒய்வின்றி பல வேலைகளைச் செய்யலாம். எதிர் பாராத தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். வீடு, விட்டு உபயோகப் பொருள்கள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். சிலர் உங்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல் தவிக்க விடலாம். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வருவது தள்ளிப் போகும்.

**இடபம்:**
பொறுப்பு, சகிப்புத் தன்மையுடன் நடந்து சாதனை படைப்பீர்கள். உறவினர்கள், உங்களிடம் பாசமாக நடந்து கொள்வர். அரசியல்வாதிகள் நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். விருந்து, விசேடங்களால் மகிழ்ச்சி சந்தோஷம் உண்டு. பிள்ளைகளின் செயற்பாடுகளை மற்றவர்களிடம் சொல்லி பெருமை அடைவீர்கள்.

**மிதுனம்:**
குடும்பத்தினரின் மனம்கோணாமல் நடந்து பாராட்டுக்கள் பெறுவீர்கள். உடன் பிறப்புக்கள், சக ஊழியர் கேட்ட உதவிகளைச் செய்து பெருமைப்படு வீர்கள். தேக ஆரோக்கியம் சீராகும். எதிர்பார்த்த பணவரவு ஒன்று கிடைக்கலாம். மனதில் பற்றத்தை வெளிப்படையாகப் பேசுவீர்கள். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கலாம்.

**கடகம்:**
கணவன், மனைவி இடையே மனஸ்தாபம் ஏற்படலாம். பெண்கள் வீட்டுச் செலவுகளைக் குறைக்க வேண்டும். நண்பர் அல்லது உறவினர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லலாம். மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வும். சிறிய விடயத்துக்கு, சிலரிடம் பெரிய அளவில் கோபப்படுவீர்கள்.

**சிங்கம்:**
சொந்த பந்தங்கள் வழியில் மனதுக்கு இனிய உதவிகள் கிடைக்கும். சொல்வாக்கைக் காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள். தாய் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பல நாள்களாகப் பார்க்காமல் இருந்த நண்பர் ஒருவரைத் திடீரெனப் பார்க்கலாம். ஆதாயமில்லாத விவகாரம் ஒன்றில் தலையிட நேரிடலாம்.

**கன்னி:**
தன்னம்பிக்கையுடனும், தந்திரமாகவும் செயற்படும் நாள். கணவன், மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். எந்த வேலையையும் அக்கறையோடு செய்து முடிப்பீர்கள். பெண்கள், மகிழ்ச்சி சந்தோஷமாகக் காணப்படுவர். குடும்பத்தில் நிம்மதி குடிகொள்ளும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**துலாம்:**
நல்லவர்கள் சிலரின் உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். தந்தை வழி உறவுகளால் அனுகூலம் உண்டு. ஆரம்பித்த வேலை ஒன்றை இடையில் விட்டுவிட நேரிடலாம். அயலார் விவகாரங்களில் மூக்கை நுழைக்கலாம்.

**விருச்சிகம்:**
நினைத்த காரியங்களைச் சாதிப்பீர்கள். வீடு, மனை வாங்கப் போட்டத் திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. வியாபாரிகள் ஆதாயமான பணவரவுகளைப் பெறலாம். மூத்த சகோதரர்கள் வழியில் சிறு தொல்லைகளுக்கு ஆள்படலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு.

**தனுசு:**
செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க வேண்டியநாள். யாரையும் பரிகாசம் செய்து பேச வேண்டாம். குடும்ப உறுப்பினர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். பயணங்களின் போது பொருள்களின் மீது கவனம் அவசியம். நண்பர் ஒருவர் நீங்கள் கேட்ட உதவியை செய்ய மனம் இல்லாமல் கையை விரிக்கலாம்.

**மகரம்:**
மனதில் உற்சாகம், தெம்பு அதிகரிக்கும். எதிர்காலத் திட்டம் ஒன்றுக்கு நண்பர்கள் நல்ல யோசனை சொல்லலாம். உதிரி வருமானம் பெறலாம். உங்களுக்குப் பிடித்தமான பொருள் ஒன்றை சிலர் கொடுக்கலாம். சில வேலைகளைத் தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். தொழில் ஆதாயம் அதிகரிக்கும்.

**கும்பம்:**
பிள்ளைகள், பெற்றோர் வழியில் உருவான மனஸ்தாபம் மாறி பாசம், நேசம் அதிகரிக்கும். கடனாகக் கொடுத்த பணத்தைக் கேட்டு வாங்குவீர்கள். நீண்டநாள்களாக மனதைக் குடைந்துக் கொண்டிருந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டுக்கு'வராத உறவினர் ஒருவர் வரலாம். அரசு காரியங்கள் அனுகூலமாகும்.

**மீனம்:**
சவால்களைச் சந்திக்கும் நாள். நீங்கள் கூறும் யோசனைகளுக்கு மற்றவர்கள் மத்தியில் மதிப்பு இருக்கும். உறவினர்கள் தொடர்பான விடயங்களால் மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். குடும்ப விடயங்களை மற்றவர்களிடம் விவாதிக்க வேண்டாம். சிறிய செலவுக்கு யோசித்த நீங்கள் ஒரு காரியத்துக்கு பெரிய அளவில் செல. செய்ய நேரிடலாம்.



# ஆழிப்பேரலை

# அழி

ஆழிப்
அழி
நினைவு
ஆண்

ஐம் பூதங்களின் தாக்கங்களால் ஏற்படும் பேரழிவுகளை பண்டைய தமிழர்கள் நன்கு அறிந்ததால் அவற்றைத் தெய் வங்கள் என எண்ணி வணங்கினார் கள். தமிழர்களின் தலைநகராக இருந்த இந் தியாவின் காவிரிப் பூம்பட்டினமும் இலங்கை யில் இராணவன் வணங்கிய பழைய திருக் கோணேஸ்வரத் திருக்கோயிலும் ஆழிப் பேரலைகளால்தான் அழிந்தன.

### நீர் அலைகள்

ஒரு நிலப்பரப்பிலிருந்து அதிக தூரம்வரை நீண்டு ஆழமாக இருக்கும் நீர் நிலைகளை சமுத்திரங்கள் என அழைக்கின்றோம். சமுத்தி ரங்களின் எல்லைப் பகுதிகளில் அமைந்திருக் கும் சில நூறு கிலோமீற்றர் நீளமுள்ள நீர்ப் பகுதிகளை கடல் என்கின்றோம். கடலின் மேல் தோன்றும் நீர் அலைகளைக் கடல் அலைகள் என்றும் சமுத்திரத்தில் தோன்றும் உயரமான அலைகளை ஆழிப்பேரலை என்றும் சொல் கின்றோம்.

பூமியின் ஈர்ப்புச் சக்தியைவிட சந்திரனின் ஈர்ப்புச் சக்தி 0.1653 ஆகக் குறைந்தும், சூரியனின் ஈர்ப்பு சக்தி 29.79 ஆகக் கூடியும் இருந்தாலும் சூரியன் சந்திரனை விட 390 மடங்கு தொலைவில் சஞ்சரிப்பதால் சமுத்திரங் களில் உள்ள நீரைச் சற்று உயரமாக இழுக்கும் சக்தி சந்திரனுக்கு உள்ளது.

பூமியைச் சுற்றி 139, 440,000 சதுர மைல் பரப்புள்ள சமுத்திரங்களும் 57, 510 000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பும் உள்ளன. எனவே பூமியின் 70.79 சதவீதமான பகுதிகள் சமுத்திரங்களாக உள்ளன. இதில் இந்து சமுத்திரம் 28,400,000 சதுர மைல் பரப்பளவை உடையது.

சந்திரன், பூமி, சூரியன் ஒரு விநா டிக்கு முறையே 4.59 மீற்றர், 29.79 கிலோமீற்றர், 19.5 கிலோமீற்றர் வேகத்தில் தங்களைத் தாங் களே அண்டவெளியில் சுற்றுகின்றன.

இந்தக் கோள்களின் சுழற்சி வேகங்கள் மற்றும் ஈர்ப்புச் சக்திகளின் வேறுபாட்டால் பூமிக்கு மேல் இருக்கும் கடலின் மட்டம் சந்திரனினால் மேலே இழுக்கப்படுகின்றது. அதேநேரம் பூமி அதிக வேகத்தில் சுற்றுவ தால் சந்திர னின் ஈர்ப்புச் சக்தியில் உள்ள நீர் மட்டம் இருக்கும் இடத்தைவிட்டு வேறு இடத் துக்கு பூமி செல்லுகின்றது. இதனால் கடல் மட்டம் நிலை குலைந்து மேலும் கீழுமாக அசைந்து நீர் அலைகள் தோன்றுகின்றன.


### நில்நடுக்கம்

பூமியின் உட்புறத்துக் குச் செல்லச் செல்ல வெப்பநிலை அதிகரிப் பதால் சராசரி 30 கிலோ மீற்றர் ஆழத்தில் உள்ள பாறைகள் உருகி விரிவ டையும் போது பூமியின் அமைப்பு மாறுபடுவதா லும் அசைவதாலும் நிலநடுக்கம் ஏற்படு கின்றது.



### ஆழிப்பேரலை

சமுத்திரங்களின் அடித்தளங்கள் நிலப் பரப்புக்களை விட அதிக தாழ்வாக இருப்ப தால் சமுத்திரங்களின் அடியில் ஏற்படும் நில நடுக்கத்துக்குச் சமனாக சமுத்திரங்களின் நீர் மட்டங்களும் உயர்ந்து உயரமான அலைகள் தோன்றுகின்றன. இந்த நீர் அலைகளைத் தான் ஆழிப்பேரலை என்கின் றோம்.



### ஆழிப்பேரலை -2004

யாழ்ப்பாணத்திலிருந்து தென் கிழக்காக 3000 கிலோமீற்றர் தூரத்தில் யகார்த்தா நகரம் யாவாத் தீவின் தலைநகராக உள்ளது. இந்த யாவா, சுமாத்திரா, பன்கா, பாலி, சும்பாவா, சும்பா, திமோர் முதலிய தீவுகளை ஒன்றாகச் சேர்த்து இந்தோனேசியா என அழைக்கின்றோம்.

இந்த யகார்த்தா நகருக்குத் தெற்காக இந்துமா சமுத்திரம் 28, 400.000 சதுர மைல் பரப்பளவு பரந்து விரிந்துள்ளது. யாவாத் தீவுக்குத் தெற்கிலுள்ள இந்து சமுத்திரம் மிகத் தாழ்வாக உள்ளதால் இந்தப் பகுதிகளில் அடிக்கடி நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன.

இந்தச் சூழ் நிலையில் 200 ஆம் ஆண்டின் கிறிஸ்மஸ் விழா சிறப்பாக கொண்டாடப்பட்ட அடுத்த நாளான டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி காலை யகார்த்தா நகருக்குத் தெற் காகப் பல கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சமுத்திரத்தின் அடித் தளத்தில் சராசரி 30 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 8.6 புள்ளியாகப் பதியப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் சமுத்திரத்தின் அடித்தளம் மேலும் கீழுமாக ஆடி அசைந்தது. அந்த அசை வுக்கு ஏற்றவாறு சமுத்திரம் கொந்தளித்துத்

பேர
குள்
வீடு
கான
செல்
களு
பேர
என்



# நினைவுகளுடன்..

அதிகாலை வேளை ஆர்ப்பரித்து வந்த கடல்
அன்புக் கூட்டில் வாழ்ந்த எம் உறவுகளை
ஈவிரக்கமின்றி அள்ளிச் சென்று அழித்த நாளை
மறக்க முடியுமா? நினையாது இருக்க முடியுமா?

அள்ளி அள்ளித் தந்து எமை வாழ வைத்த கடலே
ஆர்ப்பரித்து சீற்றம் கொள்வோம் என்றோ
அழுது புரண்டு துடிதுக்க வைப்பாய் என்றோ
நினைக்கவில்லை ஐயோ மறக்க முடியவில்லை

பெற்றெடுத்த பிள்ளைகளை இழந்து தவிக்கும் பெற்றோர்
அம்மா அப்பாவின்றி அனாதைகளாய் நிற்கும் பிள்ளைகளை
துடிதுடித்து கதறி அழ ஏனம்மா வைத்தாய்
பால்குடி மாறாத பாலகனை கூட பறித்தெடுத்தாயே
நாம் உனக்கு என்ன பாவம் செய்தோம்

ஓடி ஆடி பாடித் திரிந்த மணல் வெளியை
சவப்பிணம் விதைத்த மண்ணாய் மாற்றியதேனோ
பெற்ற தாயினும் மேலாய் நினைத்த உன்னை
பேயிலும் பயங்கரமாய் நினைக்க வைத்ததேனோ

அன்னை தாயே, கடற்றாயே மீண்டும் வந்திடாதே
நம்மினம் பட்ட துன்பம் போதுமம்மா
துடிதுடித்து பதைபதைத்து செத்தது போதுமம்மா
எம்மினம் வாழ பூமித்தாயே ஆர்ப்பரியாது இருந்திடம்மா

# லகளால் ஏற்பட்ட
# வுகள்



ழிப்பேரலையால்
அழிவுற்றோரின்
ாவுகளுடன் கழிந்தன
ூண்டுகள் ஏழு



துள்ளித் துள்ளி மேலேழுந்தது. கடல் வாழ் பிராணிகள் பயத்தால் கிலியடைந்து எல்லாத் திசைகளிலும் ஓடின. கப்பல்கள் திசை திருப்பி விடப்பட்டன. உலகத்திலுள்ள கடல் கண்காணிப்பு மையங்களுக்கு இந்தச் செய்தி பரப்பப்பட்டது.

யாவாத் தீவின் தெற்குக் கரைகளை 30 அடி உயரமான ஆழிப்பேரலைகள் முற்றாக மூடின. பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினார்கள். சற்று நேரத்தில் ஆழிப்பேரலைகள் நகருக்குள் புகுந்துவிட்டன. ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர முடியாமல் ஆழிப் பேரலைக்குள் சிக்கி மாண்டனர்.

தப்பியோடக் கூட முடியாத அளவுக்கு கடலோரப் பகுதிகளை ஆழிப் பேரலைகள் அடுத்தடுத்துத் தாக்கி, நகரங்களுக்குள் புகுந்து வீடுகளைத் தரைமட்டமாக்கியதுடன் வீடு களின் இடிபாடுகளையும் நூற்றுக்கணக்கான வாகனங்களையும் கடலுக்குள் இழுத்துச் சென்றன. மின்சாரமும் தொலை பேசித் தொடர்புகளும் செயலிழந்தன. யாவாத் தீவில் ஆழிப் பேரலையை சுனாமி என்று கூறுகின்றார்கள.

ஆழிப்பேரலையை ஆங்கிலத்திலும் 'சுனாமி' என்றுதான் சொல்கின்றார்கள். இப்போது சுனாமி என்ற சொல் எல்லா மொழிகளிலும் பேரழிவுகளைக் குறிப்பிடப் பயன்படுகின்றது. அநேக நாட்டு நாடாளுமன்றங்களிலும் பத்திரிகைகளிலும் இந்தச் சொல் உபயோகிக்கப்படுகின்றது.

இந்து சமுத்திரத்தின் கரைகளிலுள்ள 12 நாடுகளில் இந்தச் சுனாமியின் தாக்கத்தால் இரண்டு லட்சத்து இருபதினாயிரம் மக்கள் இறந்தனர். அத்துடன் பல கோடி பெறுமதி யான பொருள்களும் சொத் துக்களும் அழிந்தன.

**இலங்கையையும் சுனாமி தாக்கியது**

சுனாமி உருவாகிய யகார்த்தாப் பகுதியிலிருந்து வடமேற்குத் திசையாக சராசரி 3000 கிலோமீற்றர் தொலைவில் இலங்கைத் தீவின் வட முனையிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்குக் கரையிலிருந்து பருத்தித்துறை, வெற்றிலைக் கேணி, சுண்டிக்குளம், முல்லைத் தீவு, கொக்கிளாய், நிலாவெளி, திருகோணமலை, கல்குடா, மட்டக்களப்பு, திருக்கோயில், பொத்துவில், அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் காலி வரையிலுள்ள கரையோரப் பிரதேசங்களை இந்தச் சுனாமி தாக்கியதால் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டதுடன் லட்சக் கணக்கான வீடுகளும் கட்டடங்களும் பிற அமைப்புக்களும் போக்குவரத்துச் சாதனங்களும் அழிந்தன.

அழிக்கப்பட்ட பன்னாட்டு நிவாரண உதவிகளும் உரிய காலத்தில் நிறைவேறவில்லை எனச் செய்திகள் தெரிவித்தன. அமெரிக்காவின் சார்பில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிங்ரன் நிவாரண வேலைகளைப் பார்வையிட நியமிக்கப்பட்டார்.

சுனாமி நிவாரண வேலைகள் தொடர்ந்தும்

**எந்திரி க.யோகராசா**

நடைபெறுகின்றன. 26.12.2004 இல் நிகழ்ந்த சுனாமிக்குப் பின்பு ஒவ்வொரு ஆண்டும் அதன் நினைவு தினத்தில் மக்கள் இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வணங்குகின்றார்கள். இன்றும் நாம் இறைவனைப் பிரார்த்திப்போம் ✱

# மனம் போல் வாழ்வு....



நமது வாழ்க்கையின் போக்கை நிர்ணயிப்பது எது? நமது எண்ணங்கள். வாழ்க்கையை நிர்ணயிப்பது சென்ற ஜென்மங்களின் விதி என்று சொல்லாது எண்ணங்கள் என்று ஒரு சமயவாதி சொல்வதா? யாரும் ஆச்சரியப்பட வேண்டாம். ஏன் என்றால் விதி என்பதே நமது முந்தைய ஜென்மத்தில் உருவான எண்ணங்களின் ஆற்றல்தான்.

நல்ல வலுவான எண்ணங்களை் உருவாக்க உருவாக்க செயல் உருவாகிறது. வாழ்க்கையை அந்தச் செயல்கள் உருவாக்குகின்றன. எனவே எண்ணங்களை ஒழுங்குபடுத்துவது மிக மிக அவசியம்.

ஓர் இடத்தில் வீடு கட்டுகிறோம் என்றால் அங்கு வீடு கட்ட வேண்டும் என்கிற எண்ணத்தை முதலில் உருவாக்குகிறோம். எப்படி எப்படி வீடு இருக்க வேண்டும் என்கிற கற்பனை - நினைப்பு - அதற்கேற்பவே வீடு உருவாகிறது.

கர்னன் குந்திதேவியின் மூத்த மகன். இளம் வயதில் திருமணத்துக்கு முன்பே சூரியன் மூலம் பெற்ற பிள்ளை. அவனைப் பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டு விட்டாள் குந்தி. திருதராஷ்டிரனின் தேரோட்டி கையில் அந்தப் பிள்ளை கிடைத்தான். நெடு நாள்களாக இந்தத் தம்பதியினருக்கு குழந்தை இல்லை என்ற வேதனையிருந்ததால் ஆற்றில் கிடைத்த பிள்ளையை, சேற்றில் கிடைத்த சிந்தாமணியாக போற்றி வளர்த்தார்கள். வாலிப வயதில் பிள்ளையை தேரோட்டியாக்கத் திட்டம் தீட்டினான் வளர்ப்புத் தந்தை. இது எந்தத் தந்தைக்கும் உள்ள இயல்பான பலவீனம் தனது தொழிலுக்கு - பதவிக்கு - வேலைக்கு மகனைக் கொண்டு வர விரும்புவது பரம்பரைப் பலவீனம்.

தேரோட்டியாகும் மனோநிலையில் கர்னன் இல்லை. எவ்வளவு கெஞ்சியும், ''நான் ஓர் அரசனுக்கு தேரோட்டமாட்டேன்; நாளை ஓர் அரசனை எனக்குத் தேரோட்ட வைப்பேன்'' என்று சாதித்தான். பிள்ளைப் பருவத்தில் நொள்ளைக் கதை என்றுதான் தந்தை எண்ணினார். ஆரம்பத்தில் முரண்டு பிடித்து, அனுபவத்தில் வளைந்து கொடுப்பான் என்று அனுமானித்தார் தந்தை.

அந்தக் காலத்தில் க்ஷத்திரியன் அல்லாதவன் எவனுக்கும் அரசகுல வில்வித்தைகளைக் கற்றுத் கொடுப்பது வழக்கம் அன்று. ஒரு தேரோட்டியின் குமாரனுக்குத் தேரோட்டத்தான் தெரிய வேண்டுமே ஒழிய, அரச குல வில்வித்தை அவசியமற்றது; ஆடம்பரமானது என்று குருகுலங்கள் விலக்கி வைத்தன. கர்னன் சளைக்கவில்லை. நிராகரிப்புக்களைச் சகித்துக் கொண்டே முயற்சியில் முன்னேறினான். கடைசியில் பரசுராமனிடம் அவனுக்கு வில்வித்தை கற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

துரியோதனன் தயவால் அங்க தேசத்து அரசனும் ஆனான். வாழ்நாளில் அவன் நினைத்ததும் ஒருநாள் நிறைவேறியது. பாரத யுத்தகளத்தில் கர்னன் தலைமை ஏற்றபோது, சல்லியன் என்கிற அரசன் தனக்குத் தேரோட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். சல்லியன் சுலபத்தில் சம்மதிக்கவில்லை. ஊர் பெயர் தெரியாத தேரோட்டியின் மகனுக்குத் தேரோட்ட அவனுக்கு விருப்பமில்லை. ''அர்ச்சுனனுக்கு, அவனை விடவும் அந்தஸ்தில் உயர்ந்த கண்ண பெருமான் தேரோட்டும் போது - கர்னனுக்கு அவனை விட உயர்ந்த நீ தேரோட்டக் கூடாதா?'' என்ற துரியோதனனின் வாதம் சல்லியன் மனத்தில் பதிந்தது. இதில் இருந்து ஒன்று தெரிகிறது. எதையுமே சொல்லுகிற முறையில் சொன்னால் எவரை வேண்டுமானாலும் எந்த வேலையை வேண்டுமானாலும் செய்ய வைக்கலாம் என்பதே அது. மகிழ்வுடன் தேரோட்ட உடன் பட்டான். எப்படியோ இளம் வயதில் கர்னன் நெஞ்சில் வீழ்ந்த எண்ணம் பாரத யுத்தகளத்தில் செயலாகி விட்டது.

ஒரு தேரோட்டியாகத் தன் நிலையை இறைவன் குறைவுபடுத்திக் கொண்டதால் தான் கர்ணன் விருப்பமும் நிறைவேறியது. அதை முன்னுதாரணம் காட்டி அல்லவா சல்லியனைத் துரியோதனன் சம்மதிக்க வைத்தான். நமது எண்ணங்கள் வலிமையாக இருந்தால் அதை நிறைவேற்ற கடவுள் ஒத்துழைக்கிறான் என்பது இதன் சாரம்சம். எனவே எண்ணங்களைச் சீரமைப்பதும் - செம்மைப்படுத்துவதும் அதை வலிமைப்படுத்துவதும் நமது தலையாய கடமை.

**சுகி. சிவம்**



மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசில் நாளும் நிறுவுநர் தினமும் வைபவத்தின் போது பிரதம விருந்தினராக வருகை தந்த யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி செல்வி. ம.சரவணமுத்து மற்றும் விருந்தினர்களாக வருகை தந்த கிழக்கு மாகாண கல்வியமைச்சு ஆலோசகரும் ஆறுதல் நிறுவன இயக்குநருமான சுந்தரம் டிவகலாலா, தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் மற்றும் உப அதிபர், ஆசிரியர்கள். (எ)

# வாசிப்பு பழக்கமானது கல்வித்திறனை மேம்படுத்துவதுடன் சிறந்த பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொடுக்கிறது

## கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.26

வாசிப்புப் பழக்கமானது பிள்ளைகளின் கல்வித் திறனை மேம்படச் செய்வதுடன் சிறந்த பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுப்பதற்கும் கைகொடுக்கிறது. எனவே பிள்ளைகளின் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கப் பெற்றோர்கள் வழி காட்டிகளாகச் செயற்பட வேண்டும். என வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

இருபாலை தெற்கு ஆனந்தபுரம் கலைவாணி சனசமூக நிலையத்தின் நூலகத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே ம.பிரதீபன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:-

கிராம மக்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க ஒவ்வொரு கிராமத்திலும் வாசிகசாலைகளும், நூலகங்களும் அவசியமாகும்.

சமூகசேவைகள் அமைச்சின் ஊடாக வாசிப்பு நிலையங்கள் அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக இருபாலைக் கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

அத்துடன் பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டிய தேவையும் உள்ளது. ஏனெனில் வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குவதுடன் சிறந்த குணங்களையும் கற்றுக்கொடுக்கிறது.

ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளை ஊக்கப்படுத்தும்போது வாசிப்புப் பழக்கத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும். மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் எந்தளவுக்கு உயர்வடைகின்றதோ அந்தளவுக்குக் கல்வியில் முன்னேற்றம் காண முடியும்.

பாடசாலைக் கற்றலுடன் மட்டும் நின்றுவிடாது மாலை நேரங்களில் கிராமங்களில் உள்ள வாசிகசாலைகள், நூலகங்கள்போன்றவற்றுக்குச் சென்று பத்திரிகைகள், நூல்கள் போன்றவற்றை வாசிப்பதன் மூலம் பல தகவல்களைப் பெற்றுக் கொண்டு தமது அறிவுத் திறனை விருத்தியடையச் செய்ய வேண்டும். - என்றார் (எ-313-121)

# கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சேவைகள் மக்களுக்கு எந்தளவுக்கு பயன்பெறும் என்பதை அவதானிக்க வேண்டும்

## கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், டிசெ.26

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மக்களுக்கான சேவையை சட்ட திட்டங்களுக்கு அமைவாக நிறைவேற்றுவதுடன் அவை மக்களை எந்தளவுக்குப் பயனடையச் செய்கின்றன என்பதையும் அவதானிக்க வேண்டும் என தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ரவிகரன் தெரிவித்தார்.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கலந்துரையாடல் நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது:

கிராம அபிவிருத்திச் சங்கமானது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் பலன் அடையக் கூடிய முறையில் தனது செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும்.

இதற்கு சட்ட ஒழுங்கு முக்கியமாகக் கொள்ளப்படுகிறது. சட்டத்தை மீறி எந்தவித செயற்பாடுகளையும் நிறைவேற்றக் கூடாது. இது மக்களைத்தான் பாதிப்படையச் செய்யும்.

எனவே சங்கத்துக்கென ஒரு யாப்புக் கோவைகள் உள்ளது. அதன்படி சங்க நிர்வாகத்தினர் செயற்பட வேண்டும்.

அத்துடன் கிராம முன்னேற்றத்தை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளை சங்கம் முன்னெடுக்க வேண்டும்.

தனியொருவரின் நலன்களைக் கருத்தில் கொள்ளாமல் மக்கள் பிரதிநிதிகளாகச் செயற்பட முன்வர வேண்டும்.

ஏனெனில் கிராம முன்னேற்றம், மக்களின் வாழ்வாதார மேம்பாடு என்பன ஒவ்வொரு கிராம அபிவிருத்திச் சங்கங்களிடமே உள்ளது. - என்றார். (எ-313-122)

# தேசிய கலை இலக்கிய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.26

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நடத்தப்பட்ட இந்தவருடத்துக்கான தேசிய கலை இலக்கியப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**கனிஷ்ட பிரிவு**

**கட்டுரை**

கணேசலிங்கம் கலையரசி - முதலாமிடம் (தெல்லிப்பழை), யதுஷா சண்முகானந்தம் - இரண்டாமிடம் (உடுவில்), டிலக்சினி ரவீந்திரன் - மூன்றாமிடம் (நல்லூர்)

**கட்டுரை (ஆங்கிலம்)**

விஷ்ணுகா ஸ்ரீரஞ்சன் - முதலாமிடம் (சங்கானை), கண்ணதாசன் ஹரிகரசர்மா - இரண்டாமிடம் (பருத்தித்துறை), காயத்திரி தேவசுதன் - மூன்றாமிடம் (சங்கானை)

**கவிதை**

கி.விதுசன் - முதலாமிடம் (வேலணை), நிறோஷா சாந்தன் - இரண்டாமிடம் (யாழ்ப்பாணம்), றொசாயினி நடராசா - மூன்றாமிடம் (சங்கானை).

**கவிதை (ஆங்கிலம்)**

காயத்திரி தேவசுதன்- முதலாமிடம் (சங்கானை)

**சிறுவர் கதை**

வில்வராசா துளசிகரன் - முதலாமிடம் (ஊர்காவற்றுறை), அருச்சுனன் டன்ஸ்ரன் - இரண்டாமிடம் (ஊர்காவற்றுறை), சொரூபிகா வரதராஜா - மூன்றாமிடம் (உடுவில்)

**கையெழுத்துப்போட்டி**

டயானா சிவராசா - முதலாமிடம் (சாவகச்சேரி), இரங்கநாதன் ராகவன் - இரண்டாமிடம் (சங்கானை), கோபிதா அருந்தவகுமார் - மூன்றாமிடம் (உடுவில்)

**சிரேஷ்ட பிரிவு**

**கட்டுரை ஆக்கம்**

பாலினி பாலசுப்பிரமணியம் - முதலாமிடம் (சாவகச்சேரி), மஞ்சுகா மனோகரன் - இரண்டாமிடம் (உடுவில்), சு.சோபிகா -மூன்றாமிடம் (தெல்லிப்பழை), உஷாந்தி மகாலிங்கம் - மூன்றாமிடம் (கரவெட்டி)

**கட்டுரை ஆக்கம் (ஆங்கிலம்)**

புவனேந்திரம் வைகுந்தன் - முதலாமிடம் (பருத்தித்துறை)

(தொடரும்)

# வாசிப்பை கடமையாகக் கொண்டுவருவோமானால் வாழ்க்கையில் துன்பம் என்பதே ஒருபோதும் வராது

## சிதம்பராக் கல்லூரி அதிபர் இராஜதுரை தெரிவிப்பு

வடமராட்சி, டிசெ.26

[illegible]ாசிப்பை நாளாந்தம் கடமையாகக் கொண்டு வருவார்களின் வாழ்க்கையில் துன்பம் என்பதே ஒருபோதும் ஏற்படாது என வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அதிபர் இ.இராஜதுரை தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் வாசிப்பு மாத நிகழ்வு நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட அதிபர் இ.இராஜதுரை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

நான் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைக் கற்றுக் கொண்டிருந்த பொழுது கல்வியில் திறமையானவனாக இருக்கவில்லை. பொதுப் பரீட்சையில் குறைவான புள்ளிகளைப் பெற்ற பொழுதுதான் கல்வி கற்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது. அதற்குப் பின்னரே நான் நூலகத்தைப் பயன்படுத்தத் தொடங்கினேன். நூலகத்தைப் பயன்படுத்தத் தொடங்கிய நாள் முதல் என் வாழ்க்கையில் ஒரு மாற்றம் ஏற்படத் தொடங்கியது. அதன் விளைவாக நான் இன்று உங்கள் முன்னால் ஒரு முதன்மையான கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றுகின்றேன்.

எனவே ஒவ்வொருவரும் வாசிப்பை ஒரு நாளாந்த கடமையாகக் கொண்டு வருவார்களாயின் அவர்களுக்கு வாழ்க்கையில் துன்பம் என்பதே ஏற்படாது. என்றார்.

பிரபல கிராமியக் கூத்துக் கலைஞரும், யாழ் பல்கலைக் கழக சட்ட பீடத் தலைவருமான கலாநிதி த.கலாமணி, நூல் வெளியீட்டாளரும் ஆவணக் காப்பாளருமான கலைப்பரிதி து.குலசிங்கம் ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள்.

நிகழ் வில் வரவேற்புரையை வல்வை நகரசபை பொதுமக்கள் தொடர்பு அலுவலர் செல்வி பிரேமாவதி யும் நன்றியுரையை நூலகர் செல்வி ரேவதியும் ஆற்றினார்கள்.

இலக்கியப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து வல்லை மகளிர் கல்லூரி மாணவிகளின் குழு நடனமும் இடம்பெற்றது. (எ-236)

# மக்கள் பங்களிப்புடன் அனர்த்தத் தவிர்ப்பு திட்டங்கள் தேவை!

■ உமா

கோரத் தாண்டவம் ஆடிய கடல் தாய் கண்ணீரையும் ஆறாத் துயரத்தையும் மக்களுக்குப் பரிசளித்துவிட்டுச் சென்று இன்றுடன் ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன.

2004 டிசெம்பர் 26 இல் இடம்பெற்ற இந்த சுனாமி இயற்கை அனர்த்தம் காரணமாக ஆசிய நாடுகள் உள்ளடங்கலாக 12 நாடுகள் பேரழிவைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டது. 2லட்சத்து 90 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் காவு கொள்ளப் பட்டுள்ளனர். சுமார் ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் இடம் பெயரவேண்டி ஏற்பட்டது. ஒட்டு மொத்த இந்து சமுத்திரக் கரையோர சமூகங்களையும் அழித்துத் துவம்சம் செய்ததுள்ளது.

தற்போதும்கூட இயற்கைப் பேரனர்த்தங்கள் சர்வசாதாரணமாக உலகெங்கும் இடம் பெறும் நிகழ்வாகி விட்டது. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. செய்தி ஊடகங்களின் தினசரி முக்கிய செய்திகளில் ஒன்றாக இயற்கை அனர்த்தம் ஏற்படுத்திய அழிவுகள் இடம்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது. அந்தளவுக்கு அனர்த்தங்களால் மக்களது உயிர்கள் உடைமைகள் காவு கொள்ளப்படுவது தொடர் கதையாகிவிட் டது.

இன மத மொழி வேறுபாடுகளின்றி, நினைத்தாலும் மறக்கமுடியாத வலிகளை ஏற்படுத்திய அந்தச் சுனாமிப் பேரலை அழிவுகளிலிருந்து தற்போது ஒருவாறு மக்கள் மீண்டெழுந்துள்ளனர். இந்த நிலையில் அழிவுகளை மட்டும் மீளவும் சொல்லிக்கொள்வதில் பயனேதும் ஏற்படப்போவதில்லை.

இவ்வாறான அழிவுகள் இனிமேலும் ஏற்படாமல் தடுக்கப்பட வேண்டும். இதுவே இடம்பெற்றுள்ள ஒவ்வொரு அனர்த்தமும் உணர்த்திவிட்டுள்ள படிப்பினையாகும்.

ஆனால், இந்தப் படிப்பினை இலங்கையில் எந்தளவுக்கு உணரப்பட்டுள்ளது? அனர்த்தத் தணிப்பு திட்டங்களை அமுல்படுத்துவது என்பது தேர்தல் காலங்களில் வாக்கு வங்கிகளை நிரப்பக்கூடிய காரியமல்ல.

இதனையறிந்துள்ள அரசு எனைய துறைகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தைப் போல் இந்தத் துறைக்கு முதன்மையளிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.

அதேபோன்று மக்கள் சமூகமும் அனர்த்தத் தவிர்ப்புக் குறித்து கருத்தில் கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டு மறுபுறம். இந்தக் குற்றச்சாட்டுகள் சீர் செய்யப்படும்போதே மக்கள் பாதுகாக்கப்படுவார்கள்.

அனர்த்த முகாமைத்துவத்துக்கான இறுதிப் பொறுப்பை அரசே கொண்டிருக்க வேண்டும்.

இயற்கை அனர்த்தத்துக்கு முன்னதாக இடம்பெறும் அனர்த்தத் தணிப்பு முகாமைத்துவத்துக்காக செலவழிக்கப்படும் ஒவ்வொரு டொலரும் பின்னைய பொருளாதார இழப்புகளிலிருந்து ஏழு டொலரைச் சேமிக்கிறது என வேள்ட் வோர்ச் இன்ஸ்ரிரியூட் என்ற நிறுவனம் ஆய்வொன்றின் மூலம் கூறியுள்ளது கருத்தில் கொள்ளப்படவேண்டியது.

ஆனால் குறித்தவொரு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒவ்வொரு வருடமும் மறுபடி இடம்பெறும் அதே அனர்த்தத்தால் மீளவும் பாதிக்கப்படுகின்ற நிலைமை நாட்டில் உள்ளது. இந்த நிலைமை வட பகுதியிலும் தொடர் கிறது.

அபிவிருத்தி எனக்கூறிக்கொள்ளும் நடவடிக்கைகளில் இந்த விடயம் கருத்தில் கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை. அபிவிருத்திச் செயன்முறைக்குப் பிரதான இடமளிக்கப்படுவதாக அனர்த்த முகாமைத்துவம் உள்ளடங்கியிருக்க வேண்டும்.

இயற்கை அனர்த்தம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கலாம், ஆனால் அனர்த் தம் ஏற்படுத்தும் அழிவுகளைக் தடுத்துக் கொள்ள அல்லது குறைத்துக் கொள்ளமுடி யும்.

எனவே அனர்த்தங்களில் இருந்து மக்களை யும் அவர்களது உடைமைகளையும் பாதுகாக்கக் கூடிய திட்டங்கள் முன்னெடுக் கப்படுவது அவசியமாகிறது.

நாட்டிலுள்ள மாவட்ட செயலகங்கள் தோறும் அனர்த்த முகாமைத்துவ நிலையங்கள் செயற்படலாம். அவை மக்கள் பங்கேற்புடனான அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை உரிய முறையில் அமுல்படுத்துவதன் மூலமே மக்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும். மக்கள் பங்களிப்பற்ற திட்ட அமுலாக்கங்கள் குறித்த இலக்கை காண்பதில் தோல்வி கண்டுள்ளன என்பது கடந்த காலத்தில் உணரப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் மக்கள் எதிர்கொள்ளக் கூடிய அல்லது எதிர்கொள்ளவேண்டியேற்பட்ட அனர்த்தங்கள், அவற்றிலிருந்து விடுபடுவதுக்கான மார்க்கங்கள் தொடர்பாக அந்தப் பிரதேசத்திலுள்ள மக்களே நன்கறிவார்கள்.

எனவேதான் திட்டமுன்மொழிவு, திட்டமிடல், திட்ட அமுலாக்கம், திட்ட மதிப்பீடு அகியவற்றில் கிராம மக்கள் முக்கிய இடம் வகிக்க வேண்டியது அவசியம்.

எனவே கிராமங்கள் தோறும் வினைத்திறனாகச் செயற்படக் கூடிய மக்களைத் தெரிவுசெய்து அனர்த்தத் தவிர்ப்புக் குழுக்கள் உருவாக்கப்படவேண்டும். அந்தக் குழுக்கள் மூலம் கிராமங்களில் ஏற்படக் கூடிய அனர்த்தங்களை இனங் காண வேண்டும். உள்ளூரிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப்பெறும் வழிமுறைகள் அறியப்படவேண்டும்.

அனர்த்த அபாய அறிவுப்புக்கள் விடுக்கப்பட்டால் கிராமத்திலுள்ள மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என மக்களுக்கு உணர வைப்பதற்காக அனர்த்த முன் எச்சரிக்கை ஒத்திகைகளைக் இந்தக் குழுக்கள் மேற்கொள்ளலாம்.

அத்துடன் ஊடகங்கள் வழியாக அறியத் தரப்படும் அனர்த்த முன்னெச்சரிக்கையை மக்களுக்கு வழங்கமுடியும்.

கிராமமட்ட அனர்த்தத் தவிர்ப்பு குழுவின் செயற்பாடு என்பது அனர்த்தம் இடம் பெறுவதற்கு முன்னர், அனர்த்தம் இடம் பெறும்போது, அனர்த்தத்தின் பின்னர் என்ற அடிப்படையில் அவசியமானது.

இங்கு அனர்த்தத்துக்கு முன்னர் என்பது அனர்த்தங்களைத் தடுத்தல், அனர்த்தங்களைக் குறைத்தல், அனர்த்தங்களுக்கான தயார் நிலை என்ற அடிப்படையில் அமையும்.

இந்தக் குழுக்களை மாவட்டங்கள் தோறும் உள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையங்கள் வினைத்திறனான முறையில் வழிப்படுத்த வேண்டும். இவ்வாறு மக்களைக் கொண்டு மக்களைப் பாதுகாக்கும் அனர்த்த தவிர்ப்புத் திட்டங்களே உரிய இலக்கை அடையும் என்பது திண்ணம். ★






## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் குமாரசாமி
பிரதீபன்



அன்னையின் மடியில்:
30.11.1977

ஆழியின் பிடியில்:
26.12.2004

ஏழு ஆண்டுகள் ஆனால் என்ன?
எழுபது ஆண்டுகள் ஆனால் என்ன?
மறப்போமா இவரை நாம்....
ஈரேழு ஜென்மத்துக்கும் எழுதவேண்டும் உன் புகழை
ஆனால் எழுத மறுக்கிறது எம் கரங்கள்
உன் பிரிவைத் தாங்காது துடிக்கின்றது எம் நெஞ்சு
பன்னிரு உறவுகளுடன் உன் ஆத்மா சாந்தியடைய
காளித்தாயை வேண்டுகின்றோம்

மில்.ஒழுங்கை,மல்லாகம். நா.குமாரசாமி (பொன்னர்)

# இருளில் மூழ்குகிறது கொடிகாமம் பஸ் நிலையம்

யாழ்ப்பாணம், டிசெ.26

கொடிகாமம் பஸ் நிலையத்தில் இரவு நேரத்தில் மின் சாரம் இன்மையால் சமூகச் சீர்கேடுகள் இடம்பெறுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளளனர்.

இந்தப் பஸ் நிலையத்தில் மின்சார இணைப்புப் பணிகள் இடைநடுவில் இடை நிறுத்தப்பட்டுள்ளதால் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்காக பஸ்ஸுக்குக் காத்திருக்கும் மக்கள் பஸ்நிலையத்துக்குள் தங்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

சமூகச் சீர்கேடான விடயங்கள் இடம் பெறுவதுடன் திருட்டுச் சம்பவங்களும் இடம் பெறுகின்றன.

இதனால் பயணிகள் வீதியோரத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது.

எனவே பயணிகளின் நலன் கருதி பஸ் நிலையத்துக்கு இரவு நேர மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-313)

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
தவசிப்பிள்ளை
இராமலிங்கம்
(ஓய்வுபெற்ற பஸ் காப்பாளர்)



மண்ணில்: 19.01.1921
விண்ணில்: 10.01.2008

திதி: மார்கழிப்
பூர்வபக்க துதியை
26.12.2011

இவ்வுலகம் விட்டு இறையடி சேர்ந்து
இன்றோடு நான்காண்டு நகர்ந்துவிட்டபோதும்
இனிமையான உங்கள் நினைவுகள்
இன்றும் என்றும் எம்மனதில் நிலைத்திருக்கும்

243, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு:
08.01.1980

உதிர்வு:
26.12.2004

செல்வி
தனுசியா
கொன்சன்ரைன்

(யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, 3 ஆம் அணி முகிழ் நிலை ஆசிரியை, உள்ளகப் பயிற்சி ஆசிரியை, யா/சிவப்பிரகாசம் ம.வித்தியாலயம்)

இனியவளே!
உன் நாமம் உச்சரிக்கும் போதெல்லாம்
உள்ளம் உருக்குலைந்து போகுதம்மா - நீ
இறந்துவிட்டாய் என நினைக்க - எமக்கு
இரும்பினால் ஆன இதயம் தான் வேண்டும்
கடைக்குட்டியே!
துள்ளிநடை பயின்று துன்பங்கள் துடைத்து
எல்லை இல்லா அன்பால் எங்கும் இடம் பிடித்து
எண்ணி எண்ணி ஏங்க வைத்து எம்மைவிட்டு
எங்கம்மா சென்றுவிட்டாய் ஏதிலரானோமம்மா
சின்னக்கா!
அம்மாவும் அப்பாவும் உன்பிரிவால் ஆறுதலிழந்திருக்க
சின்னக்காவென சின்னஞ்சிறுசுகள் புலம்பித்தவிக்க உன்
உறவுகள் எல்லாம் ஊமையாகி உடைந்து உருக
உன் இடம் நிரப்ப முடியாத இடைவெளியாக...
மறுபிறப்பு உண்டென்றால் மறுமடியும் வந்திடம்மா

'இலக்குமி வாசா', மாரக்காய்,
புலோலி தெற்கு, புலோலி.

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் கந்தப்பு
கிருஸ்ணபிள்ளை



அன்னையின் மடியில்:
05.01.1924

ஆண்டவன் அடியில்:
26.12.2004

துன்பியல் களைந்து துலங்கிடச் செய்து
எம் வாழ்வே தன் வாழ்வென எண்ணிய
எம் ஐயா என்றென்றும் ஏற்றமுடன்
எம் இதயங்களில் நிறைந்திருப்பார்

'இலக்குமி வாசா', மாரக்காய்,
புலோலி தெற்கு, புலோலி. குடும்பத்தினர்

## நினைவலைகள்

எட்டாம் ஆண்டு
தோற்றம்:
21.09.1921
மறைவு:
09.03.2004
சோமசுந்தரம்
நடராசா



ஐந்தாம் ஆண்டு
மலர்வு:
02.06.1926
உதிர்வு:
22.12.2006
நடராசா
அழகம்மா

குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்பின் இருப்பிடமாய்
நற்பண்புகளுடன் நல்வாழ்வுக்கு வழிகாட்டி
எமக்காகவே வாழ்ந்த எம் அன்புத் தெய்வங்களே
உங்கள் நினைவுடன் என்றும் வாழ்கின்றோம்

82 A , சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்


## வெளிநாட்டு பொதிகளிற்கான மாபெரும் விலைச் சலுகை 25.12.2011 - 31.12.2011

10 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் UK 625 /= Germany 710/= France 765/=

மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் யாழ்மாவட்டம் ஆகிய இடங்களில் எடை கூடிய பொதிகளை
உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.



குறிப்பு :- 25Kg - 100 Kg வரையான பொதிகளுக்கு 550/= மட்டுமே

Arrul Global Express
International Courier & Cargo Service

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 6113

# முதியோருக்குப் புகலிடம் அளிக்கும் கொழும்புத்துறை சென். ஜோசப் இல்ல சேவைகள் தொடரட்டும்...

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆயிரக்கணக்கான முதியோரின் புகலிடமாக விளங்கி மகத்தான சேவையின் மூலம் சமூகத்துக்கும் நாட்டுக்கும் நற்பெயரையும், 'மனிதம்' என்ற சொல்லுக்கு அர்த்தத்தையும் கொடுத்துவரும் கொழும்புத்துறை சென். ஜோசப் முதியோர் இல்லத்தை பல அர்ப் பணிப்புமிக்க அருட்சகோதரிகள் பொறுப்பாக வழிநடத்தி வந்துள்ளனர். அருட்ச கோதரிகளான மரிய கொறற்றி, ஆன் மேரி இமெல்டா, இனிக்கா, இம்மானுவல், தன்னியா, ஜெம்மா ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள். பலவருடங்கள் உதவிப் பொறுப்பில் இருந்த அருட்சகோதரி பெனிற்றா கடந்த 5 வருடங்களாக பொறுப்பாளராக வழிநடத்தி வருகிறார்.




தற்போது 18 ஆண்களும் 39 பெண்களுமாக 57 முதியோர் இங்கே ஒரே குடும்பமாக அன்புடனும் மகிழ்வுடனும் தமது காலத்தைக் கழித்து வருகின்றனர். 5 அருட்சகோதரிகளும் 14 பெண் பணியாளர்களும் சேவையில் ஈடுபட்டுள்ளனர். வறுமையான குடும் பங்களிலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்ட இந்தப் பணியாளர்களுக்கு வேதனத்துடன் எதிர்காலத்தை வளப்படுத்தும் நோக்கில் தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் வங்கியில் சேமிப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

காலைமுதல் இரவு வரை அனைத்துச் செயற்பாடுகளும் நேரக்கிரமப்படி நடைபெறுகின்றன. நாளாந்த திருப்பணிகள், திருவருட்சாதனங்கள் போன்ற ஆன்மீகத் தேவைகளை அருட்தந்தையர்கள் நிறைவேற்றி வருகின்றனர். அதேபோன்று இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் பண்டிகைக் காலங்களில் இந்து ஆலயத்துக்குச் சென்றுவரவும் சமய அநுட்டானங்களில் ஈடுபடவும் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. புத்தாண்டு காலங்களில் புத்தாடைகள் வழங்கப்படுகின்றன.

இங்கு கடந்த 16 வருடங்களாக வசித்துவரும் யாழ் மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை செபமாலை என்பவர் கருத்துக் கூறுகையில்; எனக்கு வயது 95. கொழும்பு டொக்யாட்டில் (கப்பல் கட்டுதல்) பணியாற்றினேன். ஓய்வூதியம் கிடைக்கிறது. பிள்ளைகள் இல்லாததால் எவருக்கும் பாரமாக இருக்க விரும்பவில்லை. அமைதியாக நிம்மதியாக ஆரோக்கியமாக எல்லோரும் அன்பாகப் பழகிவருகிறோம். அருட்சகோதரிகளின் அன்பும் பரிவும் பாசமும் பராமரிப்பும் மனநிறைவைத் தருகிறது. பணம் செலுத்துவோர், செலுத்தாதோர் என்ற வேறுபாடின்றி சமமாகக் கவனிக் கப்படுகின்றனர்.

இங்கு உள்ளவர்கள் உறவுகள் பிள்ளைகள் உள்ள வர்கள் தான். ஆனாலும் அந்த உறவுகளால் பெறமுடி யாத அன்பையும் அமைதியையும் இங்கு சுவைக்க முடிகிறது. அன்பு, இரக்கம், தர்மம், சந்தோசம் ஆயுளைக் கூட்டும் கவசங்கள் என்பதை உணர முடிகிறது - என்று தெரிவித்தார்.

இவ்வாறு வயோதிப உள்ளங்களுக்கு மன நிறைவை வாழ்க்கைப் பற்றுதலை இதய ரணங்களைக் குணப்படுத்தும் கூடாரமாக விளங்கும் இந்த அந்திம காலத் தொண்டு நிலையத்திற்கு இன்னும் பல அடிப்படைத் தேவைகள் உள்ளதாகக் கூறப்படுகிறது. மின்பிறப்பாக்கி வசதி, நீண்டகால மின்சார இணைப்புகளை சீர்செய்ய வேண்டிய தேவைகள், கட்டில்கள், தளபாடங்கள், நவீன வசதி கொண்ட நோயாளர் கட்டில்கள், பொழுது போக்கு சாதனைங்கள் போன்ற தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

பெற்றாலும் பெறாவிட்டாலும் முதியோர் எமது சொத்துக்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும். வசதி படைத்த வள்ளல் குணம் கொண்ட பரோகபகாரிகள் இவர்களுக்கு உதவ முன்வரவேண்டும்.

**யேசுதாஸ்**

முன்னைய காலங்களில் வீடுகளில் இன்ப துன்ப நிகழ்வுகள் இடம்பெறும் போது பணமாகவோ, உணவுப் பொருள்களாகவோ முதியோர் இல்லத்துக்கு உதவும் வழக்கம் இருந்து வந்தது. தற்போது இந்த தர்மகுணம் அருகிவருவது கவலை தருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

மனித வாழ்வில் அனைவரும் முதுமைக்கு விதிவிலக்கல்ல. அறிவு அனுபவதைக் கொண்டுள்ள ஆரோக்கியமான முதியோர் சமூகம் நல்ல வளமுள்ள பகுத் தறிவு கொண்ட சமூகமாகும்.

(தொடர்ச்சி)

PATRICIAN INSTITUTES
பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

ஆரம்பம் : 02.01.2012

மாணவர்களுக்கு மகிழ்ச்சியான ஒரு நற்செய்தி:

எமது நிறுவனம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதியப்பட்டு பயிற்சிகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை வழங்குகிறது என்பதை அறியத்தருகின்றோம்.

TVEC REG-NO-P 25/0021

COMPUTER COURSES

Advanced in computer programming, Diploma in Microsoft office, Diploma in Desk top Publishing, Diploma in Video Editing, Diploma in Type Setting, Diploma in Computerized Accounting, Diploma in Software engineering, Diploma in Micro Midia, Diploma in Web Multimedea, Professional Diploma in Graphic Design, Computer Hardware Technology, Internet & E-mail, General Information Technology (GIT), Information & Communication Technology (ICT), With adequate Practical

ஏனைய பயிற்சிகள்:-

1. Shorthand Typing (English) ஆங்கிலதட்டெழுத்து சுருக்கெழுத்து
2. Shorthand Typing (Tamil) தமிழ்தட்டெழுத்து சுருக்கெழுத்து

Practical And theory வழங்கப்படும்.

1. General Moto Mechanism மோட்டார் வாகனம் திருத்துதல்
2. Motorcycle Mechanism மோட்டார் சைக்கிள் திருத்துதல்
3. General Electrician (Wiring & Re Winding) வயறிங்
4. Radio & T.V. Repairing றேடியோ திருத்துதல்
5. Refrigeration and Air conditioning குளிர்சாதனப்பெட்டி திருத்துதல்

ON THE JOB TRAINING வழங்கப்படும்.

1. Lathe machine operation கடைச்சல்
2. Arc Welding ஒட்டு வேலை
3. Carpentry (with use of machinery) மரவேலை
4. Sewing தையல்

வாகனத்தின் தகுதிச் சான்றிதழ் Vehicle fitness certificate 2012 ஆம் ஆண்டுக்கான வாகனத்தின் தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதனை வாகன உரிமையாளர்களுக்கு தெரிவிக்கின்றோம்.

குறிப்பு:
1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் பயிற்சிக்கட்டணத்தில் சலுகைகள் பெறலாம்.
3. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு Register, Patrician Institute, 61 (59), St. Patrick's Road, Jaffna.
T.P. 0212226148
Fax. 0212226148
E.mail. spitee@sltnet.lk



# பரீட்சைக் குளறுபடிகளுக்கு பொறுப்புக் கூறுவது யார்?

## கேள்வி எழுப்புகிறது இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்

அம்பாறை,டிசெ.26

''இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடத்திவரும் தேசிய மட்டப் பரீட்சைகள் தொடர்பில் வினாத்தாள் தயாரிப்பு முதல் பெறுபேறு வெளியீடுவரை அண்மைய ஆண்டுகளில் பெரும் குளறுபடிகள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்த நிலைமைகளுக்குப் பொறுப்புக் கூறுவது யார்?''

இவ்வாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் இந்தக் கேள்வி விடுக்கப்பட்டுள்ளது. சங்கத்தின் சார்பில் அதன்தேசியத் தலைவர் எம்.அனஸ் இந்த ஊடக அறிக்கையை விடுத் துள்ளார்.

இந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

இலங்கையின் கல்விப் புலத்தில் பயிலும் பாடசாலை மாணவர்களுக்கான மூன்று முக்கிய தேசிய மட்டப் பரீட்சைகளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பாகவிருந்து ஆண்டுதோறும் நடத்துகின்றது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை என்பனவே அவையாகும். இந்த பரீட்சைகளுக்கான வினாத்தாள் தயாரிப்பு முதல் பெறுபேறுகள் வெளியீடு வரை அண்மைய ஆண்டுகளில் பெரும் குளறுபடிகள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்த நிலைமைகளுக்குப் பொறுப்புக் கூறுவது யார்? என்பது எமது சங்கத்தின் கேள்வியாகும்.

கடந்த 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்துக்குத் தோற்றியமாணவர்களுக்கு 17 புள்ளிக்கு சாதாரண சித்தி வழங்கப்பட்டு இந்தப் பாடத்துக்கான சித்திவீதம் அதிகரித்திருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

இதுபற்றி எதிரணி உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் எழுப்பிய வினாவுக்கு முதலில் மறுத்த பிரதிக் கல்வி அமைச்சர் ஒரு தடவை வினாத்தாள் தயாரிப்பில் ஏற்பட்ட தவறுகள், முரண்பாடுகள் காரணமாகச் சில பாடங்களுக்கான சித்தியடைதல் புள்ளி குறைக்கப்பட்டதாகத் தெரிவித்த பின்னர் விசாரணைக்கு ஒப்புக் கொண்டுள்ளார்.

அது மாத்திரமன்றி வழமையாக மூன்றாம் தவணை விடுமுறைக்கு முன் வெளியிடப் பட்டு வந்த ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை இந்தமுறை தவணை முடிந்து நாள்கள் பல கடந்தும் வெளியிட முடியாது போயுள்ளது.

இஸட் புள்ளியைத் தீர்மானிப்பதில் ஏற்பட்ட தாமதமே இதற்குக் காரணமெனச் சொல்லப்படுகின்றது. குருநாகல் ஹிஸ்புல்லா வித்தியாலயத்தில் தமிழ்ப் பாடத்துக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தமிழ்ப் பாட வினாத்தாள் பொதி அனுப்பப்பட்டிருக்கவில்லை.

அவை பின்னர் குருநாகல் மலியதேவ வித்தியாலயத்திலிருந்து கொண்டுவரப்பட்டு காலம் தாழ்த்தி அப்பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

இதனால் அந்த மாணவர்கள் புகைப் படப் பிரதி செய்யப்பட்ட வினாத்தாளில் ஒரு மணி நேரம் கழித்தே பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

அன்றைய தினம் சென்.பிரிஜெட் கொன்வன்ரில் பாடவேளை முடிவில் ஒன்றாகச் சேகரிக்கப்பட வேண்டிய மொழிப் பாட வினாத்தாளின் முதலாம் பகுதி முன்னதாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பல குளறுபடிகள் நிறைந்ததாக ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதேவேளை நடந்து முடிந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் புரீட்சைகளுக்கான கொடுப்பனவுகள் மாதங்கள் பல கடந்தும் இன்னும் வழங்கப்படவில்லை- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# சதாம் ஹுசைன் கிராமத்தின் பெயரை மாற்ற முடியாது

## கிழக்கு மாகாண அமைச்சரவை தீர்மானம்

ஏறாவூர்,டிசெ.26

ஏறாவூர், சதாம் ஹசைன் கிராமத்தின் பெயரை மாற்றக்கூடாது. அது சதாம் ஹீசைன் கிராமம் என்ற பெயரிலேயே இயங்க வேண்டும் என்று கிழக்கு மாகாண அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் எம்.எஸ்.உதுமா லெப்பை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண அமைச்சரவைக் கூட்டம் கடந்த புதன்கிழமை திருகோணமலையில் இடம்பெற்றபோது கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் எம்.எஸ்.சுபைர் ஏறாவூர் சதாம் ஹுசைன் கிராமத்தின் பெயரை மாற்றம் செய்யக்கூடாது என்பது தொடர்பாக சமர்ப்பித்த யோசனைக்கு இந்த அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதையடுத்து அது தொடர்பாக ஏறாவூர்பற்று பிரதேசசபைக்கு உடனடியாகக் கடிதம் அனுப்பப்படவுள்ளதாக மாகாண அமைச்சரவைப் பேச்சாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

1978ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட சூறாவளி அனர்த்தத்தையடுத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க முன்வருமாறு அன்றைய ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுஸைனிடம் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஹமட் பரீட் மீராலெப்பை ஈராக்குக்குச் சென்று வேண்டுகோள் விடுத்ததையடுத்து, ஏறாவூர்ப் பிரதேசத்தைச் சேர்ந்த 100 முஸ்லிம் குடும்பங்களுக்கு மாதிரிக் கிராமமொன்றை அமைத்துக்கொடுக்க அன்றைய ஈராக் அரசு முன்வந்துள்ளது.

தற்போதைய ஈராக் அரசு இந்தக் கிராமத்தின் பெயரை மாற்றினால் மாத்திரமே உதவிபுரியும் என்று கொழும்பிலுள்ள ஈராக் தூதரகம் அறிவித்துள்ளமையினாலேயே பெயர் மாற்றம் தொடர் பில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அதிகாரத்தைக் கைப்பற்ற குறுக்குவழிகள் இல்லை

## ரணில் தெரிவிப்பு

அதிகாரத்தைக் கைப்பற்ற குறுக்கு வழிகள் இல்லை என்று எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டி - கட்டுகஸ்தோட்ட பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை கைப்பற்ற வென முறையான வழிகள் இல்லை எனவும் வழிகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதிகாரத்தை கைப்பற்ற பல உபாயங்களைப் பயன்படுத்தி செயற்பட வேண்டியது அவசியம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)

# புதையல் தோண்டிய 8பேர் கைது


கொழும்பு,டிசெ.26

புதையல் தோண்ட முயற்சித்த குற்றச்சாட்டில் நவகத்தேகம பிரதேசத்தில் 8 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்கள் நவகத்தேகம, பலுகஸ்வெவ பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து புதையல் தோண்டப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் மாத்தறை, மின்னேரியா, மீரிகம, அம்பன்பொல மற்றும் நாரம்மல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (ச)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
12.11.1971
15.10.1999
04.10.2002

மறைவு
26.12.2004

**கபிரியேயல்பிள்ளை (ராசன்)**
**மரியநிர்மலாறோஸ்**
**செபோஜினி, சஞ்சே**

கண் இமைக்கும் நேரத்திலே எங்கள் கண் முன்னே நீங்கள் கடலலைக்கு இரையான காட்சிதனை மறப்போமோ! இயற்கையின் சீற்றம் இப்படியும் செய்ததுவோ! ஆழியிலே பள்ளி கொண்டு ஆண்டுகள் ஏழு ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்

கட்டைக்காடு,
முள்ளியான்.

கணவர் -
எ. கவிரியேல்பிள்ளை (ராசன்)

## 7ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்

திருமதி
**வேலாயுதம்பிள்ளை மல்லிகாமலர்**
செல்வி
**வேலாயுதம்பிள்ளை இளவரசி**



மருத மண்ணில் முத்தாக
1966.06.08
1995.03.29

ஆழிப்பேரலையில் வித்தாக
2004.12.26

அம்மா எனும் விளக்கு அணைந்தமையால்
ஆயுள் முழுவதும் திக்கற்றவர்களாய் தவிக்கிறோம்.
தங்கையின் பாசத்தை இழந்தமையால்
தரணியிலே துன்பம் சுமக்கிறோம்.

மருதங்கேணி வடக்கு,
மருதங்கேணி

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**நந்தகோபால் நவநீதன்**

தாயின் மடியில்
25.10.1993

ஆழியின் பிடியில்
26.12.2004

நித்தம் நினைக்கின்றோம் நின் நினைவால் ஏங்குகின்றோம். முத்தம் பதித்த உந்தன் முகம் எங்கே தேடுகின்றோம் ரத்தம் உறையுதையா உடல் ரண களமாய் ஆனதையா பித்தம் பிடித்தின்றும் பிதற்றுகின்றோம் உனை நினைந்து

செபஸ்தியார் வீதி,
கற்கோவளம்,
பருத்தித்துறை

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
அப்பா நந்தகோபால்
அம்மா அன்னபாக்கியம்
மற்றும் சகோதரர்கள், உறவினர்கள்

**காணி விற்பனைக்கு**

நல்லூர் சுற்றாடலில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகள் மாலை 4 மணி முதல் 8 மணி வரை 0726803408

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நகரின் மத்தியில் பிரபல கல்லூரிகளுக்கு அண்மையில் நிலப்பரப்பு 3 விஸ்தீரணமான காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776120083

ஃபுபே செட்




ரூபா 3950/-யிலிருந்து

www.titusstores.com
டைடஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை, லிபர்டி பிளாஸா
2439422

## உத்தரப் பிரதேசத்தில் 7 கட்டங்களாக தேர்தல்

இந்தியாவில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் மட்டும் சட்டமன்ற தேர்தல் 7 கட்டங்களாக நடைபெற உள்ளது.

ஏனைய மாநிலங்களான பஞ்சாப், உத்தரகாண்டு, கோவா மற்றும் மணிப்பூரில் ஒரு நாளில் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையர் குரைஷி அறிவித்துள்ளார்.

மேற்படி மாநிலங்களில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் திகதிகளை இந்திய தேர்தல் ஆணையர் அறிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் நடைபெறும் அனைத்து மாநிலங்களிலும் வாக்கு எண்ணிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி நடைபெறும் என்று தலைமைத்தேர்தல் ஆணையர் எஸ்.ஒய். குரைஷி தெரிவித்துள்ளார். (வ)

# கருணா ஏற்பாட்டில் சுவிற்ஸர்லாந்தில் நடைபெறவுள்ள புத்தாண்டு நிகழ்வுகள்

## கலந்துகொள்ள மறுக்கும் ஜீவா

தமிழர்கள் மனதை புண்படுத்தும் விழாவில் கலந்துகொள்ள மாட்டேன் என்று நடிகர் ஜீவா தெரிவித்தார்.

சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் தமிழர்கள் சிலர், புத்தாண்டு விழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளனர். இந்த விழாவில் நடிகர் ஜீவா, நடிகை சங்கீதா, அவருடைய கணவரும், பின்னணி பாடகருமான கிரிஷ் ஆகியோர் கலந்து கொள்வதாகத் தகவல் வெளியானது.

அந்த விழாவில் ஜீவா, சங்கீதா, கிரிஷ் ஆகிய மூன்று பேரும் பங்கேற்பதற்கு கடும் எதிர்ப்பு வெளியானது. விடுதலைப்புலிகளின் எதிர்ப்பாளரான கருணா குழுவினர் அந்த விழாவுக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், அதில் ஜீவா, சங்கீதா, கிரிஷ் ஆகிய மூவரும் கலந்துகொள்ளக் கூடாது என்றும் கூறப்பட்டது.



இதைத்தொடர்ந்து ஜீவா தனது சுவிற்ஸர் லாந்து பயணத்தை ரத்து செய்து விட்டார்.

இதுகுறித்து ஜீவா, சங்கீதாவையும், கிரிஷையும் சுவிற்ஸர்லாந்தில் உள்ள தமிழ் சங்கம் கௌரவிக்க இருப்பதாகவும், அதில் நானும் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அழைத்தனர்.

அத்துடன் அங்கு நடைபெறும் புத்தாண்டு விழாவிலும் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

நான் வருடந்தோறும் மனைவியுடன் வெளிநாடு சென்று புத்தாண்டு கொண்டாடுவது வழக்கம். அதனால், சுவிற்ஸர்லாந்துக்குச் செல்லச் சம்மதித்திருந்தேன். ஆனால், அந்த விழா சர்ச்சையாகி இருக்கிறது.

தமிழர்கள் மனதை புண்படுத்தும் விழாவில், நான் கலந்துகொள்ள மாட்டேன். சுவிற்ஸர்லாந்து பயணத்தை ரத்து செய்துவிட்டேன் - என்றார் அவர்.

இதேவேளை ஜீவா சுவிற்ஸர்லாந்து பயணத்தை ரத்து செய்துவிட்ட நிலையில், சங்கீதாவும், கிரிசும் தங்களின் விளக்கத்தை இன்று திங்கட்கிழமை அளிக்கப்போவதாக கூறினர். (வ)

## ஊழலை ஒழிக்க 3 அம்சத் திட்டங்கள்

### கலாம் அறிவிப்பு



ஊழலை ஒழிக்க, மூன்று அம்ச திட்டத்தை, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அப்துல் கலாம் அளித்த பேட்டியில் கூறியதாவது:

ஊழலில் ஈடுபடும் நபர்களைத் தண்டிப்பதற்கு, லோக்பால் பிரேரணை உதவும் என்பதில், எந்தவித சந்தேகமும் இல்லை. ஆனால், ஊழலை விரைவில் ஒழிப்பதற்கு, வேறு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதற்கான நடைமுறைகளை உருவாக்க வேண்டும். ஊழலில் இருந்து, நாட்டை விடுவித்து, அமைதியான சூழலை உருவாக்க, மூன்று அம்ச திட்டத்தைச் செயற்படுத்தலாம். ஒழுக்க பண்புகளுடன் கூடிய கல்வி, ஊழலால் ஏற்படும் பிரச்சினைகளை பெற்றோர், தங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பது, தேசத்திடம் இருந்து நாம் எதிர்பார்ப்பதை விட, தேசத்துக்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை சிந்திப்பது ஆகிய, 3 அம்சத் திட்டங்களை செயற்படுத்தலாம். லோக் பாலுடன் சேர்த்து, இந்த திட்டங்களையும் செயற்படுத்துவதன் மூலம், ஊழல் இல்லாத இந்தியாவை உருவாக்க முடியும். - என்றார் அவர்.

# கூடங்குளத்தில் இன்று குழந்தைகள் பேரணி

கூடங்குளம் அணு உலைகளை மூட நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் பிரதமரைக் கண்டித்தும் கூடங்குளத்தில் குழந்தைகள் பங்கேற்கும் கண்டனப் பேரணி இன்று நடைபெறவுள்ளது.

இடிந்தகரையில் அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தினர் நடத்தி வரும் உண்ணாவிரதப் போராட்டத்தின் 68 ஆவது நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை, கூடங்குளம், இடிந்தகரை கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

எம்.ஜி.ஆர்., பெரியார் நினைவு தினத்தை யொட்டியும் உண்ணாவிரத மேடையில் பெரியார், எம்.ஜி.ஆர். உருவப் படங்களை கோவையைச் சேர்ந்த தமிழ் ஆர்வலர் தமிழ்வாணன் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். அவரைத் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்தவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

உண்ணாவிரதத்தில் திருநெல்வேலி, திருச்சியைச் சேர்ந்த மாணவர் அமைப்பினர் 50 பேர் கலந்து கொண்டனர். இன்று பிரதமர் மன்மோகன் சிங் தமிழகம் வருவதையொட்டி, அவருக்குக் கண்டனம் தெரிவிக்கும் விதமாக கூடங்குளத்தில் குழந்தைகள் பங்கேற்கும் கண்டனப் பேரணி நடைபெறுகிறது. இந்தப் பேரணியில் கூடங்குளம், இடிந்தகரை, விஜயாபதி, பெருமணல், உவரி, செட்டிக்குளம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான குழந்தைகள் பங்கேற்கவுள்ளனர். (வ)



அ.தி.மு.க.,நிறுவனர் எம்.ஜி.ஆர். நினைவு தினமான நேற்றுமுன்தினம் அவரது நினைவிடத்தில் அ.தி.மு.க.,வின் பொதுச்செயலர் ஜெயலலிதா மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

## காஷ்மீரில் பொலிஸாருக்கிடையே துப்பாக்கிச் சூடு

இந்திய மாநிலமான காஷ்மீரில் மத்திய மத்திய பொலிஸாருக்கும், மாநிலப் பொலிஸாருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் மத்திய பொலிஸ் படையைச் சேர்ந்த 3 பொலிஸார் உயிரிழந்துள்ளனர்.

காஷ்மீர் மாநிலம் குல்காம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு 10.45 மணி அளவில் மத்திய பொலிஸ் படை பொலிஸார் மீது மற்ற பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பொலிஸ் படையைச் சேர்ந்த 3 பேர் பலியானார்கள்.

இந்த சம்பவத்தில் 2 பொலிஸார் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். 2 பேர் படுகாய மடைந்துள்ளனர். பின்பு படுகாயமடைந்தவர்களில் ஒருவர் கிசிச்சை பலனின்றி வைத்தியசாலையில் பலியானார். (வ)

# அவதூறுச் செய்திகளை அகற்றுமாறு சமூக வலைத்தளங்களுக்கு 'நோட்டீஸ்'

உலகின் சமூக வலைத்தளங்களான பேஸ்புக், யூடியுப், கூகுள் ஆகியவைகளில் இடம்பெற்றுள்ள அவதூறான செய்திகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதிக்குள் அகற்று மாறு டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உலகில் சமூக வலைத்தளங்களால் ஏற்படும் நன்மைகளை விட தீமைகளே அதிகமாக காணப்படுகின்றன. பேஸ்புக், யூடியுப், கூகுள் போன்ற சமூக வலைத்தளங்களின் மூலமாக அரசியல்வாதிகள், நாட்டின் முக்கியஸ்தர்கள், சினிமா நட்சத்திரங்கள் போன்றவர்களைப் பற்றி விமர்சகர்கள் அவதூறாக எழுதிவருகின்றனர்.

இதன்காரணமாக நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இதையடுத்து அவதூறான செய்திகளை வெளியிட்டுள்ள 21 சமூக வலைத்தளங்களின் மீது டில்லி உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதிக்குள், தங்களுடைய வலைத் தளங்களில் இடம்பெற்றுள்ள அவதூறான செய்திகளை அகற்றுமாறு டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (வ)

# சுனாமியில் உயிரிழந்தோருக்கு நாகையில் இன்று அஞ்சலி

நாகை, டிசெ.26

சுனாமியின் 7ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு உயிரிழந்தவர்களுக்கு, இன்று நாகைக் கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி நாகை மாவட்ட மக்களின் வாழ்வில் மிகப்பெரிய சோக வடுவை ஏற்படுத்திய நாள். இந்தோனேசியாவில் ஏற்பட்ட நில நடுக்கம், தமிழகக் கடற்கரை மாவட்டங்களில் சுனாமியாகத் தாக்கியது. சுமார் ஒரு பனைமரம் அளவுக்கு ஆர்ப்பரித்து வந்த கடல் அலைகளால் தமிழகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

குறிப்பாக நாகை மாவட்டத்தில் தான் சுமார் 6 ஆயிரத்து 065 பேர் பலியாகி அதிக அளவு உயிர்ச் சேதமும், ரூ.700 கோடிக்கு பொருள் சேதமும் ஏற்பட்டது.

நாகை மாவட்டத்தில் நாகை, நாகூர், வேளாங்கண்ணி, பூம்புகார், வானகிரி, தரங்கம் பாடி, நாகை, அக்கரைப்பேட்டை, கீச்சாங் குப்பம், புதுபட்டினம், திருமுல்லைவாசல் ஆகிய பகுதிகளில் சுனாமியின் அலையால் ஆயிரக்கணக்கான பெண்கள், குழந்தைகள் பலியானார்கள்.

இன்று சுனாமி பேரலையின் 7 ஆது ஆண்டு நினைவு நாள் ஆகும். இதனால் இன்று காலை சுனாமியால் உயிரிழந்த தங்களது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு நாகை மாவட்ட மக்கள் கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்துகின்றனர். உறவினர்கள் மட்டுமின்றி, ஏராளமான பொதுமக்களும் சுனாமியால் பலியானவர்களுக்கு மலர் தூவி கண்ணீர் அஞ்சலி செலுத்துவார்கள். இதில் அரசியல் கட்சியினர் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். (வ)

# சுனாமி எச்சரிக்கை மையங்கள் தமிழகத்தில் அமைக்கத் திட்டம்

தமிழக கடற்கரைக் கிராமங்களில் 450 சுனாமி எச்சரிக்கை மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

தமிழக கடற்கரைப் பகுதிகளில் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, கடலோர மேலாண்மை தேசிய மையம், இந்திய நில அளவைத் துறை ஆகியவை இணைந்து கணினி மற்றும் மொபைல் தொழில் நுட்பத்துடன் 450 சுனாமி எச்சரிக்கை மையங்களை அமைக்க உள்ளது.

சுமார் 5 கோடி மதிப்பீட்டின் கீழ் தமிழ்நாட்டின் கும்மிடிப் பூண்டி முதல் கன்னியாகுமரி வரையிலான கடற்கரை கிராமங்களிலும் இந்தக் கருவிகள் பொருத்தப்பட உள்ளன.

மேலும் தமிழகம் முழுவதும் சுமார் 262 கோடி மதிப்பீட்டில் 120இற்கும் மேற்பட்ட இடங்களில் பல் நோக்கு நிவாரண மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

மேற்கண்ட இரு பணிகளும் அடுத்தவருடம் ஏப்ரலில் ஆரம்பிக் கப்பட்டு 2013 மார்ச் மாதத்துக்குள் பணிகள் முடிவு பெற்றுவிடும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து வழங்கப்பட்ட No.1 பிறிமா புறோயிலர், பேட்டுக்குஞ்சுகள் 29.12.2011 வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.
தொடர்பு: 01. நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் - 021 222 6944
02. நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் றோட், அம்பாள்குளம், கிளிநொச்சி - 0776225944




## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 26.11.2011 சனிக்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது
அன்புத் தெய்வம்

**அமரர்**
**துரையப்பா கோவிந்தசாமி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.12.2011) திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கல்லூரி வீதி, தாமரைக்குளத்தடி அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் வந்து உதவியோர்களுக்கும் உள்ளூரிலும் வெளிநாட்டில் இருந்தும் தொலைத் தொடர்பு மூலம் கடிதம் மூலமும் அனுதாபம், ஆறுதல் கூறியோருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2 ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

# நைஜீரிய தேவாலம் மீது நத்தார் தினத்தில் தாக்குதல்

## 25 பேர் சாவு

அபுஜா, டிசெ.26

ஒருங்கிணைக்கப்பட்ட வகையில் தாமே இந்தத் தாக்குதலை நடத்தியதாக இஸ்லாமிய தீவிரவாதக் குழுவான போகோ ஹராம் அமைப்பு கூறியுள்ளது.

தலைநகர் அபுஜாவில் உள்ள றோமன் கத்தோலிக்க தேவாலயத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் நத்தார் தின வழிபாட்டாளர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

25 பேர் கொல்லப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. மீட்புப் பணியாளர்கள் மீது, ஆத்திரமடைந்த கூட்டத்தினர் தாக்குவதை தடுப்பதற்காக சம்பவ இடத்துக்கு நைஜீரியப் படைகள் அனுப்பப்பட்டன.

மத்திய நகரான ஜொஸ்ஸில் நடந்த இரண்டாவது குண்டுத் தாக்குதலில் ஒரு பொலிஸ் அதிகாரி கொல்லப்பட்டார்.

மூன்றாவது குண்டுத் தாக்குதல் வட கிழக்கு நகரான டமத்துருவில் நடந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

இஸ்லாமிய கிளர்ச்சிக்குழுவான போகோ ஹராம் குழுவினருக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையிலான அண்மைய மோதல்களை அடுத்து, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் உள்ள கிறிஸ்தவ தேவாலய பூசைகளுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில மற்றும் இலக்கணம் by ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி முன்பாக, சண்டிலிப்பாய்.
தொடர்பு: 0776751649

## தவறிவிட்டது

ஸ்ரீஸ்கந்தராசா சயந்தன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்
**0775940378**

## தேவை

அச்சுவேலிப் பகுதியில் புதிதாக இயங்க உள்ள அச்சகத்துக்கு Computer Type Setting தெரிந்த/ பழக விரும்பும் பெண்கள் தேவை.
தொடர்பு: **0774531821**

# 7 ஆம் ஆண்டு நினைவலைகள்




ஆழியின் பிடியில்: 26.12.2004

அன்புக்கு அணிகலனாய் பாசத்தின் பிறப்பிடமாய்
அவனி போற்ற பல்லாண்டு வாழ்வீர் என்றிருக்க
எம்மை ஆறாத் துயரில் விட்டு அலைகடலில்
சங்கமித்து ஆண்டுகள் ஏழு ஆயிற்றோ? - ஆண்டுகள்
எத்தனைதான் ஆனாலும் என்றும் உம் நினைவுகளுடன்...

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## வலிதெற்கு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் - சுன்னாகம்

**வெற்றிடங்கள்**

களஞ்சிய முகாமையாளர் - பயிலுநர்
இலிகிதர் - பயிலுநர்

மேற்படி பதவிகளுக்கு கீழ்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயதெல்லை - 18-45 வருடங்கள்

கல்வித்தகைமை: கூட்டுறவுப் பணியாளர் சாதாரணதரப்பத்திரம் அல்லது க.பொ.த.சாதாரணதரத்தில் 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம்/ தமிழ் மொழி என்பவற்றினை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தி

விண்ணப்ப முடிவுத் திகதி: 02.01.2012

சம்பளம்: நேரில் பேசித்தீர்க்கப்படும்

சொந்தமாக விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்து 02.01.2012 ஆம் திகதிக்கு முன் தபாலில் தலைவர், வலிதெற்கு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம், சுன்னாகம் எனும் விலாசத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தலைவர்.

## வ/ புளியங்குளம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**பதவி வெற்றிடம்**

இதன் கீழ் காணப்படும் பதவிகளுக்கு வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி: 10.01.2012

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: தலைவர், புளியங்குளம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஏ-9 வீதி, புளியங்குளம்.

01. பதவி : கணக்காளர்
சம்பளகுறியீடு: 104/12
சம்பளத்திட்டம்: 10200-12100
90x10, 100x10

கல்வித்தகைமை: கூட்டுறவுப் பணியாளரின் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் இரண்டு வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆவது சம்பளத்திட்டத்திலான கணக்குச் சம்மந்தமான பதவியில் 04 வருடத்துக்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும். அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான இரண்டு வருடத்துக்கு குறையாத அனுபவம்.
அல்லது
கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தரம் அல்லது க.பொ.த. உயர்தரம். கணக்கியல் உள்ளடங்கலான மூன்று பாடங்களிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றின் கணக்கியல் தொடர்பான துறையில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

02. பதவி: களஞ்சிய முகாமையாளர்
சம்பளக்குறியீடு: 208/15
சம்பளத்திட்டம்: 9450-11000
75x10-80x10

கல்வித்தகைமை: கூட்டுறவுப் பணியாளரின் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில் இரண்டு வருடத்துக்கு குறையாத அனுபவம்.
அல்லது
கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதர) பத்திரம்/ க.பொ.த (சாதாரணதரத்தில்) இரண்டு அமர்வுக்கு மேற்படாமல் எண்கணிதம் 1/ வர்த்தக எண் கணிதம்/ தூய கணிதம், தமிழ் என்பவற்றை உள்ளடக்கியதாக ஆறுபாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

03.பதவி: கணினி இயக்குநர்
சம்பளக்குறியீடு: 305/15
சம்பளத்திட்டம்: 9450-11000
75x10-80x10

கல்வித்தகைமை: கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதர) பத்திரம்/ க.பொ.த (சாதாரணதரத்தில்) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக கணிதம்/ தூயகணிதம், தமிழ் என்பவற்றை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் கணினிக் கல்விக்கான சான்றிதழைப் பெற்றிருப்பதுடன் தமிழ்த் தட்டச்சு ஒரு நிமிடத்தில் இருபது சொற்களும், ஆங்கிலத் தட்டச்சு ஒரு நிமிடத்தில் முப்பது சொற்களும் தட்டச்சு செய்யக்கூடிய நிலையில் இருத்தல் வேண்டும்.

04. பதவி: விற்பனை உதவியாளர்
சம்பளக்குறியீடு: 307/17
சம்பளத்திட்டம்: 8950-10300
65x10-70x10

கல்வித்தகைமை: 8 ஆம் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

தலைவர்,
புளியங்குளம்,பனை,தென்ன வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்,
புளியங்குளம்.

# படையினரால் கொட்டப்படும் மலக்கழிவுகள் குடாநாட்டு நன்னீர்வளம் மாசுறும் அபாயம்

கோப்பாய் மயானத்தை அண்டிய பகுதிகளில்நன்னீர்த் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட பகுதிக்கு அண்மையாக ,படையினர் மலக்கழிவுகளை பெருமளவில் கொட்டி வருவதால் குடாநாட்டின் நன்னீர்வளம் மாசுறும் அபாயநிலை எழுந்துள்ளது.

இந்தப் பகுதியில் படையினர் அண்மைக்காலத்தில் பெரியவாகனங்களில் படையினர் மலக்கழிவுகளைக் கொண்டுவந்து கொட்டியுள்ளனர். படைமுகாம்களில் உள்ள மலசலகூடங்களில் இருந்தே இந்த மலக்கழிவுகள் எடுத்து வரப்பட்டு, கோப்பாய் மயானச் சூழலில் கொட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.இவ்வாறு மலக்கழிவுகள் கொட்டப்படும் இடத்துக்கு மிகச்சமீபமாகவே நன்னீர்த்திட்டத்தை பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்திருந்தார். எனவே இந்தப் பகுதியில் கொட்டப்படும் மலக்கழிவுகள் தற்போது பெய்துள்ள மழை காரணமாக நிலத்தடி நீருடன் விரைவாகவே கலந்துவிடும். இதனால் குடாநாட்டின் நன்னீர வளம் மாசுறுவதுடன், நெருப்புக்காய்ச்சல் போன்ற ஆபத்தான தொற்றுநோய்களும் ஏற்படக்கூடிய அபாய நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மலக்கழிவுகள் கொட்டப்பட்ட பின்னரும் கூட அதனை நன்னீருடன் கலக்கவிடாது தடுப்பதற்குரிய முயற்சிகளை சுகாதாரத்திணைக்களத்தினர் மேற்கொள்ளாமை குறித்தும் பலர் விசனம் தெரிவித்துள்ளனர். (ங-14)

# ஆள்கள் இல்லாத வீட்டில் பகலில் திருடன் கைவரிசை

சண்டிலிப்பாய், டிசெ.26

பட்டப்பகலில் எவரும் இல்லாத நேரம் பார்த்து வீட்டுக்குள் புகுந்த திருடன் அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த ரீ.வி, டெக் உட்பட 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களையும், ஒருதொகைப் பணத்துடன் இருந்த கைப்பையையும் திருடிச் சென்றுள்ளான்.

இந்தத்திருட்டுச் சம்பவம் சுதுமலை தெற்குப் பகுதியில் மாப்பியன் வீதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் இடம்பெயர்ந்த குடும்பம் ஒன்று வசித்து வருகின்றது. சம்பவ தினம் காலை கணவன் தொழில் ரீதியாக வெளியே சென்றுவிட்டார். இவரது மனைவி இரு தினங்களுக்கு முன்பு குழந்தைக்குச் சிகிச்சை பெறுவதற்காக கொழும்புக்குச் சென்றுவிட்டார். தாத்தாவும் பக்கத்துக் கடைக்குச் சென்று விட்டார்.

அங்கு தனிமையில் இருந்த இளம் பெண் குளிப்பதற்காக வீட்டைப் பூட்டாமல் கிணற்றடிக்குச் சென்றுவிட்டார். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய திருடன் பின்புற வழியாக வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த பெறுமதியான பொருள்களையும் ஒரு தொகைப் பணத்துடன் இருந்த கைப் பையையும்திருடிச் சென்று விட்டான். (ங-115)

# கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையை நகர சபையாகத் தரமுயர்த்த தீர்மானம்

கிளிநொச்சி, டிசெ.26

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினை நகர சபையாக்குவதற்கான முன்மொழிவுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரதேச சபை அமர்வில் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபையானது பரந்த பல பிரதேசங்களை கொண்டதுடன் பிரதான நகரம் ஒன்றினையும் கொண்டுள்ளது.

எனினும் கரைச்சிப் பிரதேச சபையானது தரமுயர்த்தப்படாமல் இன்னமும் பிரதேச சபையாகவே இருந்து வருகின்றது. இந்த நிலையில் கரைச்சிப் பிரதேச சபையினை நகர சபையாக தரமுயர்த்துவதற்கான தீர்மானங்கள் கடந்த ஆண்டுகளில் எடுக்கப்பட்டாலும் கூட அவை இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையே காணப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பிரதேச சபை உறுப்பினர்களின் விசேட அமர்வு ஒன்று நடைபெற்றது. இதன்போது 2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அமர்வில் கரைச்சிப் பிரதேச சபையினை நகர சபையாக தரமுயர்த்துவதுடன் உப பணிமனையாக உள்ள கண்டாவளைப் பிரதேச சபையினை பிரதேச சபையாக மாற்றுவது என்னும் தீர்மானங்கள்எடுக்கப்பட்டதாகவும் கரைச்சிப் பிரதேச சபையின் உப தலைவர் வடிவேல் நகுலேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ங-6)

# துப்பாக்கிச் சூடு; வெளிநாட்டவர் சாவு

கொழும்பு, டிசெ.26

தங்காலை ஹோட்டல் ஒன்றில் வைத்து வெளிநாட்டவர் ஒருவர் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் கொலைசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இசை நிகழ்ச்சி நடந்தவேளை வெளிநாட்டுப் பிரஜையின் மனைவியிடம் பிரதேச அரசியல்வாதி உள்ளிட்ட குழு தகாத முறையில் நடந்துகொண்டுள்ளது. இதனால் ஏற்பட்ட வாக்குவாதம் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது. இந்தச் சம்பவத்தில் வெளிநாட்டுப் பிரஜை உயிரிழந்துள்ளதோடு அவருடைய மனைவி காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-சி)

# வலி.கிழக்கில் கடும் மழையால் வெங்காயச் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.26

கடந்தவார முற்பகுதியில் பெய்த கடும் மழையினால் வலி.கிழக்குப் பிரதேசத்தில் நடுகை செய்யப்பட்ட வெங்காய பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிப் பழுதடைந்துள்ளன.

ஊரெழு, உரும்பிராய், புன்னாலைக்கட்டுவன், நவக்கிரி, நீர்வேலி, அச்செழு,போன்ற பகுதிகளில் தாழ்ந்த நிலப் பிரதேசங்களில் நடுகை செய்யப்பட்ட வெங்காய பயிர்களே இவ்வாறு வெள்ளத்தில் அழுகி பழுதடைந்திருப்பதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

திடீரென கொட்டித் தீர்த்த இந்த அடை மழையினால் நடுகை செய்யப்பட்ட வெங்காயங்களை முளை வருவதற்கு முன்பே வெள்ளம் அள்ளிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு வெள்ளத்தினால் வெங்காயப் பயிர்கள் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் பெரிதும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதேசமயம் வெள்ளத்தில் பழுதடைந்த வெங்காய பயிர்களுக்கு மாற்றாக மீண்டும் விவசாயிகள் சிலர் விதை வெங்காயங்களை நாட்டி வருவதையும் அவதானிக்க முடிந்தது. (ங-26)



அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சில பகுதிகளுக்கான போக்குவரத்தும் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட படுவான் கரைப் பகுதிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் படகில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

# நவீன முறையில் பனம்பொருள் உற்பத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடிவு

யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ்ப்பாணத்தில் நவீன முறையில் உற்பத்தி செய்யப்படும் பனம்பொருட்களை விரைவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு பனை அபிவிருத்திசபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்று அந்தச் சபையின் தலைவர் பசுபதி சிவரெத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் வடக்கில் பனம் பொருள்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப் பொருள்கள் மற்றும் அது சார்ந்த ஏனைய பொருள்கள் என்பன விரைவில் நவீன முறையில் தயாரிக்கப்படவுள்ளன.

கைதடியில் அமைக்கப்பட்டுவரும் பனை அபிவிருத்தி சபையின் ஆராய்ச்சி நிலையம் ஊடாகவே இந்த நவீன முறையிலான பனம் பொருள் உற்பத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குறித்த ஆராய்ச்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அனைத்தும் தரமானதாகவே அமையும்.

எனவே தரமான பனம் உற்பத்தி பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (ங-26)

# வழிபடச் சென்றவர் மோ.சைக்கிளை இழந்தார்

யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ்.வண்ணை பெருமாள் கோயில் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

குறித்த ஆலயத்தில் வழிபாடு செய்வதற்காக இளைஞர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை ஆலயச் சுற்றாடலில் நிறுத்தி விட்டுச் சென்றார்.

அவர் தனது வழிபாட்டை முடித்து விட்டுவந்து பார்த்த போது அவர் நிறுத்தி விட்டுச் சென்றிருந்த இடத்தில் இருந்து மோட்டார் சைக்கிள் மாயமாகியிருந்தது.

மோட்டார் சைக்கிளை பறிகொடுத்த இளைஞர் அதை தேடி அலைந்தும் பயன்கிடைக்கவில்லை. (ங-26)

# இந்த வருடத்தில் மட்டும் 1158 பாலியல் வல்லுறவுகள்

கொழும்பு, டிசெ.26

இலங்கை முழுதும் இந்த வருடத்தின் முதல் 8 மாதங்களுக்குள் மாத்திரம் 1158 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் குறித்த காலப்பகுதியில் பதிவான சம்பவங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் அதிக பாலியல் வல்லுறவு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வருடம் மொத்தமாக 1804 பாலியல் வல்லுறவு சம்பவங்கள் பதிவாகின.

எனினும் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகளை மாத்திரமே பொலிஸார் கணிப்பிட்டு கூறியுள்ள போதும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்படாத பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பலவும் இந்த வருடத்தில் இடம்பெற்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங-சி)

# ஆழிப் பேரலை நினைவு நாள் இன்று பிரதான நிகழ்வு காத்தான் குடியில்

கொழும்பு, டிசெ.26

ஆழிப்பேரலை பேரிடர் ஏற்பட்டு இன்றோடு ஏழு வருடங்கள் பூர்த்தியாவதையொட்டி தேசிய பாதுகாப்புத் தினம் இன்று நாடெங்கிலும் அனுஷ்டிக்கப்படுகின்றது. இதன் பிரதான நிகழ்வு பிரதமர் டி.எம். ஜயரத்னவின் தலைமையில் காத்தான்குடியில் இன்று காலை 9.02இற்கு இடம்பெறுகின்றது.

பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாவின் ஏற்பாட்டிலான இந்நிகழ்வு காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெறும் என்று மட்டக்களப்பு மாவட்ட பேரிடர் முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் கே.இன்பராஜா தெரிவித்தார்.

ஆழிப்பேரலையால் உயிர் நீத்தவர்களின் ஆத்ம சாந்திக்காக நாடளாவியரீதியில் காலை 9.02இற்கு அனுஷ்டிக்கப்படும் இரண்டு நிமிட மௌன அஞ்சலியைத் தொடர்ந்து மேற்படி நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதமர் உட்பட பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர்.

இந்நிகழ்வில் முப்படை மற்றும் பொலிஸாரின் அணிவகுப்பும் இடம்பெறும். ஹிஸ்புல்லாஹ் மண்டபத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான மேடையில் நின்றவாறு பிரதமர் இந்த அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வார்.

இந்நிகழ்வையொட்டி காத்தான்குடி நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. முப்படையினரும், பொலிஸாரும் நேற்று பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதோடு வாகனங்களை சோதனைக்கும் உட்படுத்தி வருகின்றனர். (ஒ-சி)

# இறுதிப் போட்டியில் சவுரப்வர்மா



இந்திய ஓப்பின் பட்மின்ரன் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்துக்கு இந்திய வீரர் சவுரப் வர்மா முன்னேறினார்.
லக்னோவில் இந்திய ஓப்பின் பட்மின்ரன் தொடர் நடக்கிறது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் சவுரப் வர்மா தாய்லாந்தின் சுப்பான்யு அவிஹிங்சனனை சந்தித்தார்.
இதில் அபாரமாக ஆடிய சவுரப் வர்மா 26-24, 21-13 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். அவர் இந்த இறுதிப் போட்டியில் இந்தோனேஷியாவின் தவ்பக் ஹுயாத்தை சந்திக்க உள்ளார்.
கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் திஜுஜுவாலா கட்டா ஜோடி, இந்தோனேஷியாவின் முகமத் ரிஜால், சுசான்டோ ஜோடியை எதிர்கொண்டது. இதில் இந்திய ஜோடி 15-21, 12-21 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்தது.இதனால் அவர்களின் இறுதிப் போட்டிக் கனவு தகர்ந்தது.

# விலகினார் ஷரபோவா

ரஷ்ய டென்னிஸ் நட்சத்திரமான மரியா ஷரபோவா அடுத்த மாதம் நடைபெறவுள்ள பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் சுற்றுப்போட்டியிலிருந்து விலகியுள்ளார். கணுக்காலில் ஏற்பட்டுள்ள காயமே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

''2012 ஆம் டென்னிஸ் பருவகாலத்தை பிரிஸ்பேன் சர்வதேச சுற்றுப்போட்டியில் இருந்து ஆரம்பிப்பதற்கு நான் திட்டமிட்டிருந்தேன். அது அற்புதமான புகழைக் கொண்ட வரவேற்கும் நிகழ்வாகும். ஆனால துரதிர்ஷ்டவசமாக எனது கணுக்கால் 100 சதவீதம் குணமடையாததால் நான் இந்த வருடம் பிரிஸ்பேன் போட்டியில் பங்குபற்ற மாட்டேன்'' என அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் மரியா ஷரபோவா தெரிவித்துள்ளார்.




இந்தச்சுற்றுப்போட்டி ஜனவரி 1ஆம் திகதி முதல் 8 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. செரீனா வில்லியம்ஸ், கிம் கிளிங்ஸ்டர்ஸ், சமந்தா ஸ்டோரஸ் ஆகிய உலகின் முதல் தர வீராங்கனைகள், இந்தப்போட்டிகளில் தாம் பங்குபற்றவுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

விம்பிள்டன், அமெரிக்க மற்றும் அவுஸ்திரேலிய பகிரங்கச் சுற்றுப்போட்டிகளில் முன்னாள் சம்பியனான ஷரபோவா, எதிர்வரும் அவுஸ்திரேலிய பகிரங்க சுற்றுப்போட்டியில் தான் விளையாட விரும்புவதாகக் கூறியுள்ளார். அவுஸ்திரேலிய பகிரங்கச் சுற்றுப் போட்டி ஆரம்பமாவதற்கிடையில் தான் முழு உடற் தகுதி பெற்று விடுவேன் எனவும் அந்த சம்பியன் கிண்ணத்தை வெல்ல முடிந்தளவு முயற்சிப்பேன் எனவும் மரியா ஷரபோவா தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய பகிரங்க சுற்றுப்போட்டி ஜனவரி 15 ஆம் திகதி முதல் மெல்பேர்னில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.26

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 11பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரை வவுனியா வைரவபுளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் நடத்தி வருகின்றது.

இதில் வெள்ளிக்கிழமை போட்டிக்காக இரண்டு அணிகளும் மைதானத்துக்குச் சமுகமளித்திருந்தன.

கடும் மழை காரணமாகத் தொடர்ந்து ஆட்டம் பிறிதொரு தினத்துக்குப் பிற்போடப்பட்டது. (த-23)

## உதைபந்தாட்ட போட்டி இன்று

யாழ்ப்பாணம், டிசெ.26

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் நடத்தி வருகின்றது.

அதில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஈகிள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த- 23)

## பூப்பந்தாட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.26

வடமாகாண பூப்பந்தாட்ட சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 2011ஆம் ஆண்டுக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான திறந்த வடமாகாண பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி மன்னார் கறுக்காய்குளம் பூப்பந்தாட்ட திடலில் நேற்றுமுன்தினம் காலை ஆரம்பமானது. (த-23)

# ஆபிரிக்காவின் உதைமன்னன்



2011ஆம் ஆண்டின் சிறந்த ஆபிரிக்க உதைபந்தாட்ட வீரராக ஐவேரி கோஸ்ட் அணியின் வீரரும் மான்செஸ்டர் அணிக்காக விளையாடி வருபவருமான யாயா டோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

போட்டியின் தன்மைக்கேற்ப செயற்படுவது, விவேகத்துடன் கூடிய வேகமான ஆட்டம் காரணமாக யாயா டோருக்கு கௌரவமிக்க இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

# இந்திய இரகசியங்களை போட்டுடைக்கவில்லை

''இந்திய அணி குறித்து ஆஸ்திரேலிய வீரர்களுக்கு நான் எந்தவிதமான இரகசியங்களையும் கூறவில்லை'' என இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளரான கிரெக் சப்பல் தெரிவித்துள்ளார்..

இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்த கிரெக் சப்பல், சமீபத்தில் நடந்த ஆஸ்திரேலியக் கிரிக்கெட் வீரர்களுக்கான பயிற்சி முகாமில் பங்கேற்று ஆலோசனைகள் கொடுத்தார்.

இதுகுறித்து சப்பல் கூறுகையில்,

''ஆஸ்திரேலிய அணியின் தற்போதைய பயிற்சியாளர் ஆர்தர் கேட்டுக்கொண்டபடி, பயிற்சி முகாமுக்குச் சென்றேன். ஆனால், வீரர்களிடம் எதுவும் பேசவில்லை. இனிமேலும் பேசப் போவதில்லை.

நான் இந்திய அணிகுறித்த இரகசியங்களைப் போட்டுடைத்தேன் என்ற செய்தி எங்கிருந்து வந்தது என்பது எனக்குத் தெரியவில்லை'' - என்றார்.

# இனவாத வீரருக்குத் தடை

மான்செஸ்டர் யுனைடெட் வீரர் பேட்ரிஸ் எவ்ராவை இனரீதியாகக் குறிப்பிட்டு திட்டிய லிவர்பூல் வீரர் லுயீஸ் சாரஸுக்கு 8 போட்டிகளில் விளையாட எப்.ஏ தடை விதித்துள்ளது.


கடந்த அக்டோபர் மாதம் 15ஆம் திகதி ஆன்பீல்டு மைதானத்தில் நடந்த இங்கிலீஸ் பிரீமியர் லீக் போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட் அணியுடன் லிவர்பூல் மோதியது.இந்த போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது.இந்த போட்டியின் போது மான்செஸ்டர் யுனைடெட் வீரர் பேட்ரிஸ் எவ்ராவை லிவர்பூல் வீரர் லுயீஸ் சாரஸ் இனத்தை குறிக்கும் வார்த்தைகளை பயன்படுத்தி திட்டியதாக புகார் எழுந்தது.போட்டி முடிந்ததும் பேட்ரிஸ் எவ்ரா இது குறித்து எப்.ஏ விடம் புகார் தெரிவித்தார்.

இந்த புகார் குறித்து விசாரணை செய்ய 3 பேர் கொண்ட குழுவை எப்.ஏ நியமித்தது.விசாரணையில் லுயீஸ் சாரஸ் இனத்தை குறிக்கும் வார்த்தைகள் பயன்படுத்தியிருப்பது நிரூபணமானது. பேட்ரிஸ் எவ்ராவை 'பிளாக்கி' என்று சாரஸ் திட்டியதும் உறுதிப்படுத்தப்பட்டது.இதையடுத்து லிவர்பூல் வீரர் லுயீஸ் சாரஸுக்கு 8 போட்டிகளில் விளையாட எப்.ஏ தடை விதித்தது.மேலும் 40 ஆயிரம் யூரோ அபராதமும் விதிக்கப்பட்டது.

# மேசைப்பந்தாட்டம் செவ்வாயன்று

யாழ்ப்பாணம்,டிசெ.26

இலங்கை மேசைப்பந்தாட்ட சங்கத்தின் ஆதரவுடனும் அபான்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடனும் நடைபெற இருக்கும் மேசைப்பந்தாட்டப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மேசைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது.



27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 9,11,13,15,17,19 வயதுப் பிரிவுகளின் ஆண், பெண் இருபாலாருக்குமான மாவட்டப் போட்டியும் ,28ஆம் திகதி மாகாணமட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளது.(த-23)

# கோல் மழை கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்ட அணியினர் புதுவருடத்தை முன்னிட்டு நடத்தும் கோல் மழை கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை எதிர்வரும் 31ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடத்தவுள்ளனர்.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் 0777167887 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(த-23)

# காங்கேசன் ஐக்கியம் வெற்றி


யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின் ஒளியில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது.

இதில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வவுனியா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 42:26 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

இதேவேளை-



கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியும் வவுனியா அணியும் மோதிக் கொண்டன. இதில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி 59: 52 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

## சிறந்த அணியையே எதிர்கொள்கின்றோம் - கிளார்க்

மிகவும் விஷேடமான டெஸ்ட் ஆட்டம் என்று குறிப்படுவதில் எந்தச் சந்தேகமும் இல்லை. உக்கிரமான சமராகவே இன்றைய ஆட்டம் இருக்கும். நாங்கள் மிகச் சிறந்த எதிரணியையே எதிர்கொள்கின்றோம். மேலும் இந்தத் தொடரில் சச்சின் 100 ஆவது சதம் அடிக்க மாட்டார் என்று நம்புகிறேன், என்று ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சச்சின் சர்வதேச அரங்கில் 100 ஆவது சதத்தை நிச்சயமாக அடிப்பார். மெல்போர்னில் சச்சினின் ஆட்டத்தை காண நிறைய ரசிகர்கள் வருவர். இவருக்கு ஆதரவு அதிகம் இருக்கும். இவர் 100 ஆவது சதம் அடிக்க வாழ்த்துகிறேன். ஆனால், இந்த முறை இந்தச் சாதனை வேண்டாம். வேறு அணிக்கு எதிராக அல்லது அடுத்த தொடரில் வேண்டும் என்றால் அடித்துக் கொள்ளட்டும். முதல் டெஸ்டில் விளையாடும் 11 வீரர்களை அறிவித்துள்ளோம். மிட்சல் ஸ்டார்க், கிறிஸ்டியன் நீக்கப்பட்டு, பொண்டிங், ஹசி ஆகி யோருடன் நானும், ஒரு சில பந்து பரிமாற்றங்கள் வீசுவோம். டேவிட் வோர்னர் துடுப்பாட்ட வீரராக மட்டுமில்லாமல், பந்து வீச்சாளராகவும் கலக்க காத்திருக்கிறார்.

மைதானத்தில் எந்தவிதமான ஒழுங்கீனமான செயலிலும் ஈடுபடக் கூடாது என்று அணியினரை எச்சரித்துள்ளேன். மீறுபவர்கள் மீது ஆஸ்திரேலிய கிரிக்கெட் கடும் நடவடிக்கை எடுக்கும். இன்று நாணயச் சுழற்சியில் வெல்லும் வாய்ப்பு கிடைத்தால், துடுப்பாட்டத்தைத்தான் தேர்வு செய்வோம் - என்றார். (15)

## தேகம் முக்கியமல்ல; தேசமே முக்கியம்!

சகீர்கான், இஷாந்த் சர்மா உடற்தகுதி குறித்து கவலையில்லை. முதல் டெஸ்டில் முழு பலத்துடன் களமிறங்கி எமது அணியின் வெற்றியை உறுதிப்படுத்துவோம். இவ்வாறு இந்திய அணியின் தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

இந்திய, ஆஸ்திரேலியா இடையிலான முதல் டெஸ்ட் மெல்போர்னில் இன்று தொடங்குகிறது. இந்த ஆட்டம் குறித்து இந்திய அணி தலைவர் டோனி கூறியதாவது:

சகீர்கான், இஷாந்தும் வலைப்பயிற்சி மற்றும் பயிற்சி ஆட்டத்தில் நன்றாக செயல்பட்டனர். இவர்கள் சிறப்பான முறையில் மீண்டுள்ளனர். ஆட்டம் ஆரம்பமாக இன்னும் அதிக நேரம் உள்ளது. இதற்குள் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். முதல் டெஸ்டுக்கான அணியில் இவர்கள் இருவரும் இடம் பெறுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. மற்றபடி அனைவரும் நன்றாகத் தான் உள்ளனர்.

கடந்த முறை ஆஸ்திரேலியா வந்த போது நிறைய சர்ச்சைகள் ஏற்பட்டது. தொழில் ரீதியிலான கிரிக்கெட் வீரர்கள் இதை விரும்ப மாட்டர். இந்த முறை அப்படி நடக்கவிட மாட்டோம்.

முதல் டெஸ்டை எப்படி ஆரம்பிக்கிறோம் என்பது தான் முக்கியமானது. ஆட்டத்தின் அதிக நேரங்களில் தொடர்ந்து எதிரணியின் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும். இதுமட்டும் சரியாக நடந்தால், வெற்றி எளிதாகிவிடும். மற்றபடி, எங்களுக்குள் கூடுதல் நெருக்கடி ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. இது வெற்றிக்கு உதவாது.

சச்சினின் 100 ஆவது சதம் பெரிய விஷயம் தான். விரைவில் இது நடந்து விட்டால், அதன் பின்னர் எல்லோருக்கும் சற்று ஆறுதலாக இருக்கும்.

இந்திய அணிக்கு நல்ல தொடக்கம் கிடைக்க, சேவாக்கை பெரிதும் நம்பியுள் ளோம். ஆட்டத்தின் முதல் பந்து அல்லது அன்றைய தினத்தின் கடைசி பந்து என்ற எண்ணமெல்லாம் இவ ருக்கு கிடையாது. இவரது வேகமாக ஓட்டம் குவிக்கும் திறனால், எதிரணி பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடி ஏற்படும். மேலும் இந்த வருடம் எனது துடுப்பாட்டம் சொல்லும்படியாக இல்லை.



சுழற்பந்து வீச்சு குறித்து டோனி கூறுகையில், டெஸ்ட் ஆட்டத்தில் சுழற்பந்து வீச்சாளர்கள் பங்கு முக்கியம். இவர்கள் தரும் நெருக்கடியால், வேகப்பந்து வீச்சாளர்கள் இலக்குகள் வீழ்த்தலாம். அஷ்வினை பொறுத்தவரை ஆடுகளம் ஒத்துழைக்காத நிலையிலும், வித்தியாசமான பந்து வீச்சை வெளிப்படுத்துவார்.

மெல்போர்ன் மைதானம் குறித்து டோனி கூறுகையில், இந்த மைதானம் பெரியது. பந்து எல்லைக்கு செல்லும் முன், 4 ஓட்டங்கள் ஓடியே எடுத்து விடலாம். ஒருவேளை களத்தடுப்பாளர்கள் மெதுவாக சென்றால், 5 ஓட்டங்கள் கூட எடுக்கலாம். ஏனெனில் 'அவுட் பீல்ட்' புற்கள் நிரம்பியிருக்கும். - என்றார். (15)

## பரபரப்பை தொற்றவைத்து பற்றி எரியும் ஆட்டங்கள்

இன்று இரண்டு முக்கியமான டெஸ்ட் ஆட்டங்கள் ஆரம்பமாகவுள்ளன. இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடை யிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டமும், இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டமும் இடம்பெற வுள்ளது.

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் டேர்பனில் இன்று ஜி.எம்.ரி நேரப்படி 8 மணிக்கும் இலங்கை நேரப்படி மதியம் 1.30 மணிக்கு ஆரம்ப மாகவுள்ளது. மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தை ஏற்கனவே தென்னாபபிரிக்க அணி கைப்பற்றியுள்ளது.

இந்திய, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் மெல்போர்னில் இன்று ஜி.எம்.ரி நேரப்படி 23.30 மணிக்கும் இலங்கை நேரப்படி நாளை அதிகாலை 5 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது. (15)




## எந்தச் சந்தர்ப்பதிலும் நாம் போராடுவோம்!


நாம் ஒவ்வொருவரும் புரிந்துணர்வுடன் விளையாடுவதற்கு தயாராகி விட்டோம். விளையாட்டின் ஒவ்வொரு அம்சத்தையும் கடின முயற்சியுடன் மேற்கொண்டு வருகின்றோம். நிச்சயமாக முதலாவது இன்னிங்ஸில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடுவதுடன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போராடுவதற்குத் தயாராகி விட்டோம். இவ்வாறு இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவரும் முன்னணி துடுப்பாட்ட வீரருமான சங்ககார தெரிவித்துள்ளார்.

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது. முதலாவது டெஸ்டில் இலங்கை அணி இன்னிங்ஸ் தோல்வியைச் சந்தித்திருந்தது. இந்த நிலையில் இன்றைய ஆட்டம் ஆரம்பமாகின்றது. இது தொடர்பாக அணித்தலைவர் டில்ஷான், சங்ககார ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவுடன் நடைபெறவுள்ள டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றியடைவதற்கு சிறந்த இணைப்பாட்டம் பெறப்பட வேண்டுமென இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் ரி.எம்.டில்ஷான் குறிப்பிட்டுள்ளார். 11 வருடங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்காவில் அந்த அணியைத் தோற்கடிப்பதற்கு ஆர்னோல்ட்டுடன் தாம் பெற்றுக் கொண்ட சிறந்த இணைப்பாட்டமே காரணமென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை குழாமிலுள்ள வேகப் பந்துவீச்சாளரான தம்மிக்க பிரசாத் மற்றும் கனிஷ்க அல்விட்டிகல ஆகியோர் சிறந்த மனநிலையிலும் உடல் நிலையிலும் இருப்பதாக டில்ஷானை மேற்கோள் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன், இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கையின் இலக்குக் காப்பாளராக தினேஷ் சந்திமால் இணைத்துக் கொள்ளப்படுவதற்கும் வாய்ப்புள்ளது. தினேஷ் சந்திமால் மத்தியதர துடுப்பாட்ட வீரராகவும் இலக்குக் காப்பாளராகவும் செயற்படுவதற்கான சந்தர்ப்பம் அணியில் காணப்படுவதாக ரி.எம்.டில்ஷான் மேலும் குறிப்பிட்டுள்ளார். (15)

## போராட்டத்தை எதிர்கொள்ள நாங்கள் தயார்!



இலங்கை அணிக்கெதிராக இன்று ஆரம்பமாகவுள்ள இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்துக்கு தமது அணியின் அனைத்து வீரர்களும் தயாராகவிருப்பதாக தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்டம் அணியின் ஸ்ரெயின் மற்றும் ஏ.பி.டி.வில்லியர்ஸ் ஆகியோருக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். நத்தார் கொண்டாட்டங்களை விடவும் தமது அணியின் வீரர்கள் இந்த ஆட்டம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளதாக ஸ்மித் குறிப்பட்டுள்ளார்.

அத்துடன் இலங்கை அணியின் எதிர்ப்பைச் சமாளித்து வெல்லக் கூடிய வகையில் எமது அணி தயாராகியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஆட்டத்ததை பொறுத்தவரை ஸ்ரெயினுக்கு 50 ஆவது ஆட்டமாக அமைவதுடன், வில்லியர்ஸுக்கு ஐயாயிரம் ஓட்டங்களைப் பெறுவதற்கு இன்னும் 15 ஓட்டங்கள் மாத்திரமே தேவைப்படுகின்றமை குறிப்படத்தக்கது. (15)

## உளம் கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 17.12.2011 சனிக்கிழமை கொழும்பு ஜோன்.டி.சில்வா அரங்கில் கலாபூஷண விருது பெற்ற நாதஸ்வர வித்துவான் எமது பாசத்துக்குரிய சித்தப்பா

**மாரிமுத்து நாரணசாமி**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல விருதுகள் பெற்று வெங்கடேஸ்வரப்பெருமாள் அருளுடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பெருமாள்கோயிலடி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுவோர்-
பெறாமகன்-கு.பாலமுரளி
(தவில்)- குடும்பத்தினர்.

## யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான அழைப்பு

மத்தியின் மைந்தன் பேராசிரியர் R.K குகனேசராஜா அவர்கள் U.K இல் இருந்து உருவாக்கி வழங்கிய எமது கல்லூரியின் 195 வருட கால நினைவுகளைச் சுமந்து வரும்

**"GLIMPSES OF 195 YEARS OF HISTORY"**

எனும் நூல் வெளியீட்டு விழா

**இடம்:-** கல்லூரி- றொமெயின் குக் மண்டபம்
**காலம்:-** 29.12.2011 வியாழன் காலை 9 மணி

நிழலாடும் நினைவுகளின் பசுமை பரிசத்தினை உணர்வதுடன் மாணவ செல்வங்களின் கல்விக்கு உதவி நிறைவினைப் பெற்றிட மத்தியின் மைந்தர்களை வாரீர் என வாஞ்சையுடன் அழைக்கும்

யாழ். மத்திய கல்லூரி.

அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கம்.

குறிப்பு -
நூலின் அறிமுக விலை ரூபா 700/-
இந்த நிதியானது வசதி குறைந்த மாணவச் செல்வங்களின் கல்வி மேம்பாட்டுக்காக வழங்கப்படும்.


## வலி.தென்மேற்குப் பிரதேச சபை "பட்ஜெட்" நிறைவேறியது

சண்டிலிப்பாய், டிசெ.26

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் இரண்டாவது நாளில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த 12 உறுப்பினர்களும் எதிர்கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும் சமூகமளித்திருந்தனர்.

ஆளும் கட்சி உறுப்பினரான கே.கௌரிகாந்தன் வரவுசெலவு திட்டத்துக்கான தீர்மானத்தை முன்மொழிய எதிர்க்கட்சி உறுப்பினரான ஜெ.செல்வராஜா வழிமொழிந்தார். இதைத் தொடர்ந்து 16 உறுப்பினர்களும் கையெழுத்திட்டு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர்.

இதேவேளை வரவுசெலவுத் திட்டம் நிறைவேற்றுவதற்காக முதல்நாள் நடைபெற்ற கூட்டத்தின்போது, வரவு செலவு திட்டத்தில் குறித்த சில விடயங்கள் தெளிவில்லாமல் இருப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர். எனினும் வரவு செலவு திட்டத்துக்கான தீர்மானம் கடந்த கூட்டத்தில் பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பதிலளித்தார் தவிசாளர்.

ஆயினும் தலைவரின் கருத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த ஆளும் கட்சி உறுப்பினரான கே. கௌரிகாந்தன் தலைவர் தெரிவித்தது போல் கடந்த முறை நடைபெற்ற கூட்டத்தில் வரவு செலவு திட்டத்துக்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படவில்லை. - எனக் குறிப்பிட்டார்.


## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் கூல் பார் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
தொடர்புகளுக்கு- 0778304922

## கணினி திருத்தம் Computer Repair

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடனடியாக உங்களது வீட்டுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம்.
அழையுங்கள்- 0779086737

## கண்ணீர் அஞ்சலி



யா/ கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயத்தின் சங்கீத ஆசிரியை திருமதி ஸ்ரீதரன் சுதமதி அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி நல்லதம்பி பரமேஸ்வரி**

அவர்களின் மரணச் செய்திகேட்டு பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த கவலையடைகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**தங்கச்சிப்பிள்ளை கந்தசாமி**

மலர்வு 26.09.1919
உதிர்வு 22.12.2006

திதி: பூர்வபக்க துதியை 26.12.2011

ஆண்டுகள் பல ஆனாலும் உன் அன்பு முகம் பாராமல் எம் மனதில்
நீங்காது நிலைத்து நின்று அன்புக் கனவு பேசுதம்மா
உன்மேல் உயிராயிருந்த மகள், பெறாமக்கள் எல்லாம்
உன் பிரிவால் ஆறாத்துயரில் தினமும் கலங்குகிறார்கள்
எமக்காகவே வாழ்ந்த எம் அன்புத் தெய்வத்தை
எம் உயிருள்ள ஒவ்வொரு கணமும்
உங்கள் நினைவுகளுடனும் வழிகாட்டலுடனும் வாழ்வோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கொற்றங்கலட்டி,
வல்வெட்டி.

மகள் மணி
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**செபஸ்ரியாம்பிள்ளை மாகிறேற்**

(செல்லபாக்கியம்)



மாதகல், கனால் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை மாகிறேற் (செல்லபாக்கியம்) நேற்று (25.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து- இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசாத்தி, பொன்ராசா, செல்வராசா ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (26.12.2011)திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் நடைபெற்று இறுதி நல்லடக்கம் புனித தோமையார் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல் கனால் வீதி,
மாதகல்.

தகவல்: மருமகள்
சூட்டி (நோர்வே).

# ஓடியதோ ஓராண்டு? உறவே உனை இழந்து...!



கோல நிலவாய் எங்கள் கூட ஒளிர்ந்தவனே!
கோளரியாய் நிமிர்ந்து நின்று குறைகள் தீர்த்தவனே!
ஞாலத் துணையிழந்து நாமெல்லாம் கையறுந்து
நாளும் உன் நினைவால் நலிந்தோம் பாராயோ?
காலக் கொடுமையினால் கனவாய்ப் போனவனே!
கண்ணில் ஒளியாய் கனகாலம் வாழ்ந்திடுவாய்!
சாலத் துதித்துன் சாயாநல் நினைவெழுதி
சார்ந்தே இறையடி நீ சாந்திபெற அஞ்சலித்தோம்!

அமரர்

**பத்மநாதன் புஸ்பாகரன்**

(எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்.
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்)

உதயம் 1979.06.12
இதயம் 2010.12.26

எரிபொருள் நிரப்பு நிலையம்.
சாவகச்சேரி.

நினைவு சுமந்து நொந்துருகும்
எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்கள்.

## அமெ. - இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் பலசுற்றுப் பேச்சுகளை நடத்தி இருந்தார்.

இந்தச் சூழ்நிலையில் இலங்கை விடயங்களில் அமெரிக்கா பின்பற்றிவரும் கடும்போக்கு குறித்து அதிருப்தியடைந்துள்ள மூத்த அமைச்சர்கள் சிலர் அமெரிக்காவுடன் இப்படியான ஒப்பந்தத்தை உடனடியாக செய்யக்கூடாதென வலியுறுத்தியுள்ளனர்.

''அணு தொழிநுட்ப பரிமாற்ற ஒப்பந்தத்தை இலங்கையுடன் செய்துகொள்வதில் அமெரிக்காவுக்கு உள்நோக்கம் ஏதாவது இருக்கக்கூடும். அதன் தற்போதைய செயற்பாடுகள் அதனையே காட்டுகின்றன'' என்று பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அணு தொழிநுட்ப பரிமாற்ற ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் செய்வது தொடர்பிலான யோசனையை அரசு தற்போது மீள்பரிசீலனை செய்துவருவதாக அறியமுடிகின்றது. (ஓ-சி)

## தேவானந்தா....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு நாம் இடம் தரமாட் டோம். எமது நாட்டின் பிரச்சினைகளை சர்வதேசப் பொலிஸ் காரனிடம் கையளிக்கும் திட்டம் எதுவும் எம்மிடம் இல்லை. அவர்கள் தமது விரலை நுழைக்க விடப் போவதில்லை. எமக்கு ஒரு சர்வதேச பொலிஸ்காரன் தேவையில்லை என்றார் டாக்டர் பீரிஸ்.

ஜனாதிபதி அலுவலகத்திலிருந்தும் இதுவரை நல்லிணக்க குழுவின் அறிக்கை தொடர்பாக கருத்து எதுவும் வெளியிடப்படவில்லை.

பல மனித உரிமை நிறுவனங்கள் தமது கருத்துக் களை வெளியிட்டுள்ளன. வரும் நாள் களில் மேலும் விமரி சனங்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்க லாம்.

இலங்கையைப் பெறுத்தவரை புதிய வருடம் தீயணைக்கும் படைக்குரிய ஆண்டாக இருக்கப்போகிறது என்று கொழும்பிலுள்ள ராஜதந்திரி ஒருவர் நகைச்சுவையாக குறிப்பிட்டார்.

அடுத்துவரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தில் இலங்கை விடயம் தூள் பறக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்குலக நாடுகள் அதற்காக தயாராகி வருகின்றன.

## போர்க்குற்றங்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை குறைபாடுகளை கொண்டது- போதுமானதாக இல்லை என்ற தகவல் இலங்கை அரசுக்கு அமெரிக்காவினால் இதன் மூலம் பரிமாறப்பட்டுள்ளது. அத்துடன் மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு முழுமையாகப் பதிலளிக்கும் வகையிலான புதிய அறிக்கை ஒன்றை இலங்கை அரசிடம் இருந்து அமெரிக்கா எதிர்பார்க்கின்றது என்ற தகவலும் பரிமாறப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் இந்த அழைப்பு இலங்கைக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளபோதும், இன்னமும் உரிய பதில் கொடுக்கப்படவில்லை, என்று தெரியவருகிறது.

இலங்கையின் முறைப்படியான பதிலை இராஜதந்திர முறையில் அமெரிக்கா எதிர்பார்ப்பதாகவும் நம்பப்படுகிறது.

அமெரிக்கா கோரியுள்ளது போன்று மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையிலான முழுமையான அறிக்கையை இலங்கை அரசு சமர்ப்பிக்க இணங்கினால், அமெரிக்கா மென்போக்கில் அணுகும் என்றும், இல்லையேல் கடும் போக்கை வெளிப்படுத்தும் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

**தகுந்த பதில் கிடைக்காவிடில் கடும் போக்கை வெளிப்படுத்தும்**

அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு இலங்கைக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும், புதிய அறிக்கை ஒன்றை தயாரிக்க அது இணங்காது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு முழுமையாகப் பதிலளிக்கும் வகையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அமையவில்லை என்று அமெரிக்கா கருதுகிறது. கடந்த வாரம் நியுயோர்க்கில் செய்தியாளர்களிடம் பேசிய இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்ரோரியா நூலன்ட் அம்மையார் இதனை உறுதி செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-323)


### அன்புடன் வாழ்த்துகிறோம்



நாதஸ்வர வித்துவான்
**மாரிமுத்து நாரணசாமி**

கடந்த (17.12.2011) சனிக்கிழமை கொழும்பு ஜோன்.டி.சில்வா அரங்கில் 'கலாபூஷண' விருது பெற்ற ஸ்ரீ வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் தேவஸ்தான

ஆகியோர் மேலும் பல விருதுகள் பெற்று வரதராஜப் பெருமானின் அருளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.



ஓதுவார்
**இராசையா ஸ்ரீதரன்**

ஸ்ரீ வெங்கடேஸ்வரராஜப் பெருமாள் தேவஸ்தானம்

தலைவர், பிரதம குருக்கள், பணியாளர்கள்.


## சுனாமி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்களில் செல்பவர்கள் வாகனங்களை நிறுத்தியும் அலுவலகங்களில் பணிபுரிவோர் எழுந்து நின்றும் குறித்த இரண்டு நிமிடமும் மௌனப் பிரார்த்தனையை மேற்கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் கேட்டுக் கொண்டுள்ளது. (ங-15)

## அதிகாரங்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது. அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அதனை அடைய முடியும் என்பதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது'' என்று தெரிவித்தார் விஷ்ணு பிரகாஷ்.

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை விரைவாக மீளக்குடியமர்த்துவதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை நல்லிணக்கத்துக்கான முதல்படியாக அமையும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளதையும் பிரகாஷ் தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் பலவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நாடாளுமன்றத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழியை இந்தியா கவனத்தில் கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். (உ)

## உயர்தரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியில் கணிதப் பிரிவில் முதலிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ஆனந்த நடராஜா சஞ்சயன் அகில இலங்கை ரீதியில் விஞ்ஞானப் பிரிவில் இரண்டாம்இடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் பிடித்துள்ளார்.

இதே வேளை வர்த்தகப் பிரிவில் மாவட்ட ரீதியில் மூன்றாம் இடத்தை யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவி சிவாஜினி ஆராஅமுதன் பெற்றுள்ளார்.

மேலும் மாவட்ட ரீதியில் கணிதப்பிரிவில் இரண்டாம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் கிருஷ்ணகுமார் தனிறோஜன், மூன்றாம் இடத்தை நெல்லியடி மத்தியமகாவித்தியாலய மாணவன் க.பிரதீப் பெற்றுள்ளனர்.

**யாழ். இந்து மாணவர் 9 பேருக்கு 3 'ஏ'**

பெறுபேறுகள் வெளியான கையோடு யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அதிபர் தமது கல்லூரியைச் சேர்ந்த 9 மாணவர்கள் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவுகளில் 3'ஏ' பெற்றுள்ளனர் என்று தெரிவித்தார். இதேவேளை மாணவர்கள் சிலரின் பெறுபேறுகள் உயர்வாக உள்ளபோதும் அவற்றுக்கான நிலைகளில் (ராங்) குளறுபடிகள் இருந்தன என்றும் அதிபர்கள் தெரிவித்தனர். (ஓ-ங-319-323)

## கரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது மீனவர்கள் தெரிவித்தனர். விசாரணையின் பின்னர் தமிழக மீனவர்கள் 6 பேரையும் இந்தியத் துணைத் தூதரகத்திடம் கையளிக்குமாறும், பழுதடைந்த படகினை திருத்த இலங்கை மீனவர்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

தமிழக மீனவர்கள் 6 பேரும் நேற்று மதியம் பருத்தித்துறை பொலிஸாரால் இந்தியத் துணைத் தூதரகத்தில் ஒப்படைக்கப் பட்டனர். (ங-319)

## அமைச்சரவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.'''' அந்த வகையில் அமைச்சரவை போன்ற அரசின் உயரிய இடங்களில் தமிழ் மொழி பயன்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் அரசகரும மொழி என்ற சம அந்தஸ்தை தமிழ் மொழியும் பெறும். ஆகவே, இனி தமிழ் உள்ளிட்ட மூன்று மொழிகளிலும் அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்'' - என்றார்.

மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாமையாலேயே மூன்று மொழிகளிலும் பத்திரங்களை சமர்ப்பிக்க முடியாதுள்ளது என்று அமைச்சர்கள் அங்கு தெரிவித்தனர். மொழிபெயர்ப்பாளர்கள் தேவை என்றால் நான் தருகிறேன் என்று வாசுதேவ கூறினார்.

வாசுதேவ நாணயக்காரவின் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனி மொழிபெயர்ப்பாளர்களை அமர்த்தி மூன்று மொழிகளிலும் அமைச்சரவைப் பத்திரங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரவைக்கு உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சரவைப் பத்திரங்கள் தற்போதுவரை சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில்தான் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. அந்த இரண்டு மொழிகளில்தான் அமைச்சரவை முடிவுகளும் அரச தகவல் திணைக்களத்தில் வெளியிடப்படுகின்றன.

அமைச்சரவை முடிவுகளைக்கூட தமிழ் மொழியிலும் வெளியிடுமாறு அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பிற்குச் செல்லும் தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள் ஊடக அமைச்சரிடம் அவ்வப்போது கோரிக்கை வைப்பதுண்டு.

அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊடகத்துறை அமைச்சர் பதிலளித்து வருகின்றபோதிலும், அவ்வாறான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. தொடர்ந்து சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில்தான் அமைச்சரவைத் தீர்மானங்கள் வெளியிடப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-சி)

## மரண அறிவித்தல்கள்

### சபாரத்தினம் அன்னலட்சுமி

துணவியைப் பிறப்பிடமாகவும் வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாரத்தினம் அன்னலட்சுமி 25.12.2011 அன்று காலமானார்.

அன்னார் துணவி கார்த்திகேசு - கற்பகம் (துணவி பாட்டி) தம்பதியரின் அன்பு மகளும் குமாரசாமி (மலாயன் பென்ஷனியர்), சின்னாச்சி தம்பதியரின் மருமகளும் குமாரகுலராசா (பிரான்ஸ்), கமலாதேவி, சற்குணராசா (ஓய்வுபெற்ற தபால் சேவகர், வட்டுக்கோட்டை), சுந்தரராசா (பிரான்ஸ்), கருணாதேவி (மலேசியா), சந்திராதேவி (வவுனியா), கனகராசா (ஹொலண்ட்), லோகராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுக்கோட்டை தெற்கு,
வட்டுக்கோட்டை. (சி-7196)

தகவல்:
ச.சற்குணராசா, ச.லோகராசா

### குமாரசாமி தங்கவடிவேல் (J.P)

(விலை மதிப்பீட்டு பரிசோதகர்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி தங்கவடிவேல் நேற்றுமுன்தினம் (24.12.2011) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான தசரதர் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் சுதந்தரி (MBA), Dr. நாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான ஆனந்தவடிவேல், தங்கராணி, கனகராணி மற்றும் இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுரேஷ்குமார் (கணக்கீட்டாளர்), Dr. அரவிந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் லோஷினி, வர்ஷன், அவனிஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழம் வீதி,
கோப்பாய் தெற்கு,
இருபாலை.

தகவல்:
Dr. நாரணி அரவிந்தன் (மகள் -கொழும்பு தேசிய வைத்தியசாலை),
Dr. ம.அரவிந்தன் (மருமகன் -கொழும்பு தேசிய வைத்தியசாலை)

### கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியை
செல்வி செ.சாரதாதேவி அவர்களின்
அன்புத் தாய்
**திருமதி யோகரட்ணம் செல்வதுரை**

அவர்களின் மரணச்செய்திகேட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ கட்டுடை சைவவித்தியாசாலை,
கட்டுடை, மானிப்பாய். (12109)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### நீங்கா நினைவலைகள்

**நல்லையா பிரகலாதன்**

(கண்ணன்)



மாயவன் படைப்பில்
03.10.1978

சுனாமியின் அழிப்பில்
26.12.2004

நிஜம் ஒன்று நிழலானதும் - எம்
நினைவெல்லாம் கனவானதும்
மனமெல்லாம் ரணமானதும் - நாம்
மடியும் வரை மறவாதடா

காளிகோயிலடி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

தாய்,
சகோதரிகள்.

# மனித உயிர் அச்சுறுத்தல் நிலைமையில்; மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.26

எல்லாவற்றையும்விட மனித உயிர் இன்று அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாக கொழும்பு மறை மாவட்ட ஆயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

உயிர்களுக்கு உள்ள விலைமதிப்பை விளங்கப்படுத்தவேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.கொழும்பு சென். மேரிஸ் தேவாலயத்தில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்று (25ஆம் திகதி) விசேட ஆராதனை நிகழ்த்தி உரையாற்றியபோதே இவ்வாறு குறிப்பிட்டார். இலங்கையில் கருக்கலைப்புக் காரணமாக வருடத்திற்கு 3 லட்சம் பேர் உயிரிழப்பதாகவும் சுகாதாரத்துறை உள்ளிட்ட அனைவருக்கும் மனித உயிர்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்புள்ளதாகவும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டினார். (ஒ-சி)

# சட்டவிரோத மின் இணைப்பு; 3 பேர் உயிரிழந்த பரிதாபம்

மத்துரட்ட - ஒக்கந்தவெல பாடசாலைக்கு அருகிலுள்ள வீடொன்றில் வசிக்கும் மூவர் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். வீட்டுக்கு அருகில் 25 மீற்றர் தொலைவில் இருந்த சட்டவிரோத மின் இணைப்புக் கம்பியில் சிக்குண்டே இவர்கள் உயிரிழந்துள்ளனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை (வயது - 44), தாய் (வயது - 33) மற்றும் ஆண் குழந்தை (வயது - 3) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

### கதிரவேலு நல்லைநாதன்



(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு நல்லைநாதன் நேற்று (25.12.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-சின்னத்தங்கம் தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இரத்தினம் தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் (கண்ணாடி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நல்லமுத்து, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுவிஸைச் சேர்ந்த ஆனந்தி, சுகந்தி, பாமினி, தாரணி மற்றும் கனடாவைச் சேர்ந்த சத்தியநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சடாச்சரன், ஸ்ரீதாஸ், கருணாகரன், கல்யாணி, குமரகுமார் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2011) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆனந்தகம், கோயில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*

தகவல்:
குடும்பத்தினர்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### தங்கவேலு சயந்தன்



பிறப்பு 05.03.1984 இறப்பு 26.12.2007

அன்பின் உடன்பிறப்பே!
நீ எங்களை விட்டுப் பிரிந்து
நான்கு ஆண்டுகள் ஓடி விட்டன
உன் நினைவுகள் எங்களை விட்டுப்
பிரியாது உன் முகம் தினமும்
வந்துபோகும் எம் கண்களில்
எங்கள் இதயத்தில் என்றும் நீ இருப்பாய்
உலக வரலாற்றில் உன் கதையும்
ஓர் பக்கமாகப் பதிக்கப்பட்டுள்ளது
எங்கள் உயிராக, எங்கள் உயிர்த் தோழனாக
உன் உறவு மட்டும் போதும் இந்த உலகில் வாழ
எங்கள் உடன்பிறப்பே எங்களிடம் இருந்து
நீ பிரிந்து விட்டாலும் உன்னை விட்டு
உன் நினைவை விட்டு எம்மால் வாழ முடியவில்லை
என்றும் எமக்குள் நீ இருப்பாய்
எங்கள் உயிராக.

*நெல்லியோடை,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

குடும்பத்தினர்.

**வேலைவாய்ப்பு**

அலுவலக வேலை நிமித்தம் வெளியிடங்களுக்குச் சென்று கடமையாற்றக் கூடியவர் தேவை. 0772174751

**CHEMISTRY CENTRE**

33, அராலி வீதி
ஓட்டுமடம்
சந்தியிலிருந்து 20 m
30.12 வெள்ளி
ஆரம்பமாகும் அனேக
அலகுகள்
INORGANIC
Mon, Tue, Fri 6-7 p.m
ORGANIC
Mon, Tue, Fri 7-8 p.m.
BASIC
Tue 5-6p.m, Fri 3-4p.m.
GENERAL
Fri 4-6 p.m.
CHEMISTRY CENTRE
BRANCH இல்
(300, பலாலி வீதி, கந்தர்மடம்)
A/L 2014
ஆரம்பம்
தமிழ் மொழிமூலம்
31.12 சனி 4.30
ஆங்கில மொழிமூலம்
31.12 சனி 5.30
By: அன்பு
தொடர்பு:
0779037351

**கணக்காளர் தேவை**

A/L வர்த்தகம் படித்த பெண் கணக்காளர் தேவை. யாழ்.நகரப் பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது. அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகுதி உள்ளவர் சுயவிவரக் கோவையுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: LIBRA மரத் தளபாட நிலையம்
61, இராமநாதன் வீதி, கலட்டி.
தொ.பே.: 0773001763

**புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் OFFER**

4700/= பெறுமதிமிக்க பரிசுப்பொதி ஒன்று இலவசம்

| | |
|---|---|
| Intel 3.0 GHz | (3 Year) |
| Intel Chip Mother Board | (3 Year) |
| 2 GB DDR3 RAM | (3 Year) |
| 80 GB Sata HDD | (1 Year) |
| DVD Writer Lite on | (1 Year) |
| ATX Casing | (1 Year) |
| 19" LCD | (3 Year) |
| Keyboard | (1 Year) |
| Mouse | (1 Year) |
| UPS DCP | (2 Year) |

36,500/=

இச்சலுகை 26, 27, 28, 29, 30 ஆம் திகதி வரை மட்டும்

WinTech,
187/1, Parameswara Junction,
Palaly Road,
Thirunelvely
T.P: 021 568 9418

**2011 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான அறிவித்தல்**

IIS நிறுவனத்தின் அனுசரனையுடன் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களில் பங்கு பற்றிய மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் 04.01.2012 மாலை 3.00 மணிக்கு முன்னர் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உங்களுக்கான விசேட சலுகைகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. :- 021 222 2831




A/L - 2014
(கலைவர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்: ஜனவரி - 7
காலை 9.00 மணி
DMI Jaffna
(C/7166)(5)

## மரண அறிவித்தல்

### திருமதி பரிமளம் குமாரசேகரம்



உடையார் வளவு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் குமாரசேகரம் நேற்று (25.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான உடையார் சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற S.குமாரசிங்கத்தின் (ஓய்வு பெற்ற அதிபர்) மனைவியும் காலஞ்சென்றவர்களான தில்லைநாயகம், உடையார் நல்லநாதன், முத்தையா, சின்னையா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சிவமகிந்தன், விஜயை, கிரிஜா (லண்டன்), சிவபாலன், சோமகுமரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தாயும் மாதவன் இராமநாதன் (லண்டன்), சபத்ராதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.12.2011) திங்கட்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 8 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 3.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பொறளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலை 5 மணிக்குத் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

83-2/4, Hamden Lane,
Colombo-06

தகவல்:
சிவபாலன்

**THE SCIENCE CORNER**
Clock Tower Lane, Jaffna.
A/L 2014
ஆரம்பம் : 28.12.2011
புதன் மதியம் 12.00

| PHYSICS | BIOLOGY | CHEMISTRY | C.MATHS |
|---|---|---|---|
| செல்வன் | பொன்திவாகரன் | ராஜா | சிவகரன் |
| செந்தில் | குகானந்தன் | அன்பு | |

தமிழ், ஆங்கில மொழி மூல கணித உயிரியல் வகுப்புகள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.